SLECIC

වාර්ෂික වාර්තාව - 2020

ஆண்டறிக்கை - 2020

ANNUAL REPORT - 2020

**ශ්‍රී ලංකා අපනයන ණය රක්ෂණ සංස්ථාව**

இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம்

**SRI LANKA EXPORT CREDIT INSURANCE CORPORATION**

SLECIC

## வருடாந்த அறிக்கை – 2020

# இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

*இ இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (இஏககாகூ), ஒழுங்கமைப்பின் தொழிற்பாடுகளுக்கு வழிகாட்டுகின்ற குறிக்கோள்களின் தொகுதியை எடுத்துக்காட்டுகின்றதும் 1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டதுமான தொழில்முயற்சியொன்றாகவுள்ளது.*

# ஆண்டறிக்கை – 2020

## இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (SLECIC), அவ்வொழுங்கமைப்பின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கு வழிகாட்டும் குறிக்கோள்களின் தொகுதியை எடுத்துக் காட்டுகின்றதும் 1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டதுமான ஒரு நியதிச்சட்ட தொழிற்றுறை உரிமையாண்மையாகும்.



### எமது தொலைநோக்கு

''சர்வதேச வர்த்தகத்தை ஊக்குவிப்பதிலும், அபிவிருத்திசெய்வதிலும் வினையூக்கியாகவிருத்தல்''

### எமது பணித்திட்டம்

''ஏற்றுமதியாளர்கள், வங்கிகள், ஏனைய நிதி நிறுவனங்கள் மற்றும் இறக்குமதியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பையும் ஆதரவையும் தகவல்களையும் வழங்குவது எமது செயற்பொறுப்பாகும். நாம் அந்தந்த நபர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்ற உயர் தரம்வாய்ந்த சேவைகளை வழங்குவதன் ஊடாக வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளை விஞ்சிச் சேவையாற்ற பெரிதும் முனைகின்றோம்''

# ஐந்தாண்டுகள் - ஒரே பார்வையில்

## செயலாற்றுகை நோக்கெல்லை (ரூ.மி.)

| SLECIC செயலாற்றுகை நோக்கெல்லை 2016 – 2020 (ரூ.மி) | | | | | |
|---|---|---|---|---|---|
| | **2016** | **2017** | **2018** | **2019** | **2020** |
| காப்புறுதிசெய்யப்பட்ட வியாபாரம் | 24,503 | 32,523 | 35,751 | 35,740 | 37,157 |
| மொத்த கட்டுப்பண வருமானம் | 179 | 238 | 224 | 226 | 204 |
| மொத்த உரிமைக் கோரிக்கைகள் | 90 | 551 | 129 | 171 | 157 |
| தொழிற்பாட்டுச் செலவுகள் | 183 | 631 | 164 | 180 | 177 |
| தொழிற்பாட்டு மேன் மிகை/ (பற்றாக்குறை) | 194 | (161) | 419 | 277 | 288 |
| முதலீட்டு வருமானம் | 160 | 182 | 187 | 217 | 215 |
| தேறிய மேன் மிகை/ (பற்றாக்குறை) | 156 | (179) | 309 | 242 | 223 |
| மூலதனமும் ஒதுக்கும் | 2,153 | 1,975 | 2,386 | 2,624 | 2,826 |
| வரிகளும் அறவீடுகளும் | 53 | 19 | 136 | 38 | 90 |













தொழிற்பாட்டு
மேன்மிகை/(பற்றாக்குறை)
2016-2020 (ரூ.மி.)
600
400
200
0
-200
2016
2017
2018
2019
2020


முதலீட்டு வருமானம்
2016-2020 (ரூ.மி.)
250
200
150
100
50
0
2016
2017
2018
2019
2020


தேறிய மேன்மிகை/(பற்றாக்குறை)
2016-2020 (ரூ.மி.)
400
300
200
100
0
-100
-200
-300
2016
2017
2018
2019
2020


வரியும் அறவீடுகளும்
2016-2020 (ரூ.மி.)
150
100
50
0
2016
2017
2018
2019
2020


மூலதனமும் ஒதுக்கும்
2016-2020 (ரூ.மி.)
3000
2500
2000
1500
1000
500
0
2016
2017
2018
2019
2020

# தலைவரின் மீளாய்வு



## உலக பொருளாதாரம்

2020 ஆம் ஆண்டுடன் தோன்றிய புதிய தசாப்தமானது இரண்டாம் உலகப் போரையடுத்து ஏற்பட்ட படுமோசமான உலகளாவிய பின்னடைவுடன் ஆரம்பமானது. முன்பு நிலவிய படுமோசமான பொருளாதார இடிவுகளுக்கு இணையாக கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக நீண்டகால பொருளாதார மற்றும் நிதிசார் வடுக்கள் ஏற்படும்.

2020 ஆம் ஆண்டில் உலக பொருளாதாரம் நூற்றுக்கு 4.4 சதவீதம் அளவில் வீழ்ச்சியடையுமென்று எதிர்பார்க்கப்படுவதாகவும் ஐக்கிய அமெரிக்கா அதன் பொருளாதாரத்தின் ஒடுக்கம் நூற்றுக்கு 4.3 சதவீதத்தையும், ஐரோப்பிய பொருளாதாரங்கள் சராசரியாக நூற்றுக்கு 8.3 சதவீதத்தையும், அதன் மிகப் பெரிய பொருளாதாரமான ஜேர்மன் மாத்திரம் நூற்றுக்கு 6.0 சதவீத ஒடுக்கத்தையும் அடையுமென எதிர்பார்க்கப்படுவதாகவும் வழங்கல், கேள்வி ஆகிய இரு பிரிவுகளிலும் அதிர்வுகளை பிரதிபலிக்கச்செய்து சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) உலக பொருளாதார நோக்கில் (2020 அக்டோபர்) சுட்டிக்காட்டப்படுகிறது. இந்தியா, நூற்றுக்கு 10.3 சதவீத ஒடுக்கமொன்றையும் ஜப்பான் நூற்றுக்கு 5.3 சதவீதத்தையும் எதிர்பார்ப்பதுடன், நூற்றுக்கு 1.9 சதவீத சாதக வளர்ச்சியொன்றை சீனா எதிர்பார்க்கிறது.

உலக பண்ட வர்த்தகம் பெரும்பாலும் வழமைநிலைக்குத் திரும்பியபோதும், சேவை வர்த்தகம் பலவீனமான ஒரு மட்டத்திலுள்ளது. சர்வதேச பயண மற்றும் சுற்றுலா வியாபாரத்திற்குள்ள தொடர்ச்சியான இடைஞ்சல்கள் சேவைகளின் தொடர் பலவீனத்திற்கு பங்களிப்புச் செய்யும். உலக நிதி நிலைமைகளுக்கு நாணயக் கொள்கைகள் ஆதரவளிக்கின்றபோதும், கணிசமான நாடுகளில் காணக்கூடிய நிதி முறைமைகள் பலவீனமான பண்புகளைச் சுட்டிக் காட்டுகின்றன. கேள்வி உறுதிப்பாடடைவதும், குறிப்பாக சீனாவினால் அதிகரிக்கும் கேள்வியும், எண்ணெய் விலைகளின் மீட்பும் மிகவும் நடுநிலையான ஒரு மட்டத்தில் காணப்படுவதுடன் ஆண்டின் ஈற்றரைப் பாகத்தில் ஏராளமான பண்டங்களின் விலைகள், குறிப்பாக அடிப்படை உலோகங்களின் விலைகள் மீண்டும் அதிகரித்தன.

கொவிட்-19 மீண்டும் வேகமாக தலையெடுத்ததன் காரணமாக 2020 ஈற்றரைப் பாகத்தில் முன்னேறிய பொருளாதாரங்களில் ஆரம்பித்த பொருளாதார எழுச்சி திடீரென நின்று போனது. 2021 மற்றும் அதற்கு அப்பால் எதிர்பார்த்த மீட்சி, பெருந்தொற்றின் பரிணாமத்தின் அடிப்படையில் தீவிரமாக நிலைத்திருக்கும் என்பதுடன், அகல்விரிவாக பரந்துபட்ட பயனுறுதிமிக்க தடுப்பூசியேற்றல் ஆற்றல் அதன் மீது பாதிப்புச் செலுத்தும்.

சீனாவின் பொருளாதாரம் வழமைநிலையை அடைவது உத்வேகமடைந்துள்ளபோதும், வாடிக்கையாளர் சேவைகள் கைத்தொழில் உற்பத்திகளை பின்னோக்கி நகர்வதுடன் சமமின்மை ஏற்பட்டுள்ளது.

எழுந்துவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களில் (EMDEs) நூற்றுக்கு சுமார் 80 சதவீதமானவை, குறிப்பாக சுற்றுலா தொழில்முயற்சியின்மீது பெரிதும் தங்கியிருக்கும், உலக பெறுமானச் சங்கிலிகளில் ஆழமாக ஒன்றிப்போயுள்ள அத்துடன் பிரதானமாக கைத்தொழில் பண்டங்களை ஏற்றுமதிசெய்யும் பொருளாதாரங்கள் நேர்மறையான ஒரு வளர்ச்சியை அனுபவிக்குமென்று சர்வதேச நாணய நிதியம் ஊகம் கொள்கிறது.

2009 உலக பின்னடைவினால் ஏற்பட்ட பேரிழப்பிற்கு ஒப்பீடாக, 2020 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 9.5 சதவீதத்தினால் உலக சந்தை ஒடுக்கமடையுமென்று எதிர்வுகூறப்பட்டுள்ளதுடன், 2021-2022 இன் நூற்றுக்கு 5.1 சதவீத சராசரியினால் வளர்ச்சியடைய முன்பு பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க ஒரு பகுதிக்கு பாதிப்புச் செலுத்தும்.

இலங்கையின் பொருளாதாரம்

உலகளாவிய அளவில் ஏனைய அநேகமான பொருளாதாரங்களைப் போன்றே இலங்கையின் பொருளாதாரமும் பெருந்தொற்று பரவலை மட்டுப்படுத்துவதற்கு குறிப்பாக இந்நாட்டில் ஏற்பட்ட முதலாவது கொவிட் அலைக்கு மத்தியில் விதிக்கப்பட்ட நடமாட்ட மட்டுப்பாடுகள் காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டது.

மார்ச் ஈற்றுப் பகுதியளவில் இலங்கை முழுவதும் முடக்கப்பட்டதுடன், மே மாதமளவில் படிமுறையாக அதனை விலக்கி நாட்டை 'புதிய வழமைநிலையின்' கீழ் முன்னெடுத்துச்செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டது. இருப்பினும் 2020 அக்டோபர் மாத ஈற்றரைப் பாகமளவில் மினுவான்கொடை, பேலியகொடை என்றவாறு இரண்டு முக்கிய கொவிட் கொத்தணிகள் அடையாளம் காணப்பட்டதையடுத்து மீண்டும் மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

வியாபாரங்களுக்கு வசதியளிப்பதற்கும் சமூகத்தில் ஆபத்தை எதிர்நோக்கக்கூடிய குழுக்களுக்கு நிவாரணமளிப்பதற்கும் அரசாங்கத்தினால் பொது நிதி மற்றும் நாணயக் கொள்கைத் தூண்டல்கள் உள்ளிட்ட பல்வேறு நிவாரண நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டன. 2019 ஆம் ஆண்டின் ஈற்றரைப் பாகத்தில் ஆரம்பிக்கப்பட்ட பொதுநிதி மறுசீரமைப்புகள், இடருக்குள்ளான மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஏனைய நிவாரண நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக கொவிட்-19 ஐ எதிர்த்துப் போராடுவதற்கு வழங்கப்பட்ட நிதித் தூண்டுகையொன்றாகக் கருதப்படுகிறது.

சேவைத் துறையில் வளர்ச்சியொன்று காணப்படும்போதும், கைத்தொழில் துறையிலும் விவசாயத் துறையிலும் பின்னடைவொன்றைப் பிரதிபலித்து, பொருளாதாரம் 2019 முதல் காலாண்டில் நூற்றுக்கு 3.7 சதவீத வளர்ச்சிக்கு ஒப்பீடாக 2020 அக்காலாண்டில் நூற்றுக்கு 1.6 சதவீதம் ஒடுக்கமொன்றைப் பதிவுசெய்தது. கட்டுமானப் பணிகளும் உற்பத்திச் செயற்பாடுகளும் மந்தகதி அடைந்ததன் காரணமாக கைத்தொழில் துறை 2019 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நூற்றுக்கு 3.9 சதவீத வளர்ச்சியிலிருந்து 2020 ஆம் ஆண்டின் முதல் காலாண்டளவில் நூற்றுக்கு 7.8 சதவீதத்தினால் ஒடுக்கமடைந்தது. தேயிலை, தெங்கு, கடற்றொழில் துறைகளின் மட்டுப்பாடான வளர்ச்சி காரணமாக 2019 விவசாயத் துறை 2020 அக்காலாண்டில் நூற்றுக்கு 5.6 சதவீதத்தினால் ஒடுங்கியது. இருப்பினும், முதல் காலாண்டில் சேவைத் துறை நூற்றுக்கு 3.1 சதவீதத்தினால் விரிவடைந்தது.

2020 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் தேயிலை, இறப்பர், தெங்கு உற்பத்தி வீழ்ச்சி கண்டது. மோசமான காலநிலை நிலைமைகளும் கொவிட்-19 பெருந்தொற்றும் மூலம் அத்துறையில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக 2020 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் தேயிலை உற்பத்தி 177.3 மில்லியன் கிலோ கிராம் வரை நூற்றுக்கு 16.0 சதவீதத்தினால் வீழ்ச்சி கண்டது.

2021 ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி மீண்டும் வழமை நிலைக்கு திரும்புமென்று எதிர்பார்க்கப்படுவதுடன், அரசாங்கத்தின் வாய்ப்பான கொள்கைகளின் உதவியுடன் அதனை அவ்வாறே முன்னெடுத்துச் செல்லக்கூடியதாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. உள்நாட்டு உற்பத்தி மேம்படுத்தல் கொள்கைகள் மூலம் பொருளாதாரத்தில் வெளிநாட்டுத் துறை மீது ஏற்பட்டுள்ள அழுத்தம், பேண்தகு அடிப்படையொன்றின் பேரில் தளர்த்தப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் உள்நாட்டுப் பொருளாதார மீட்சியையும் புத்துயிர்பெறும் வேகத்தையும் அளவையும் தீர்மானிக்கும்போது உள்நாட்டு மற்றும் உலகளாவிய ரீதியில் கொவிட்-19 ஐ முறியடிப்பதன் வெற்றிநிலை தீர்மானகரமானதாக இருக்கும்.

ஏற்றுமதிச் செயலாற்றுகை

ஆண்டினுள், இலங்கையின் வெளிநாட்டுத் துறை கலப்புச் செயலாற்றுகையொன்றைச் சுட்டிக்காட்டியது. கொவிட்-19 பெருந்தொற்றின் ஆரம்ப கட்டத்தில் கடுமையாக பாதிக்கப்பட்ட வெளிநாட்டுத் துறை, 2020 இரண்டாம் அரைப்பாகம் முதல் கோடிட்டுக்காட்டத்தக்க மீட்சியொன்றைச் சுட்டிக் காட்டியது.

ஆண்டின் ஈற்றரைப்பாகத்தில் 2020 சனவரி மாதத்தைத் தொடர்ந்து முதல் தடவையாக ஜூலை மாதத்தில் வர்த்தகப் பண்ட ஏற்றுமதியானது பில்லியன் டொலரைத் தாண்டிச் சென்றதுடன், 2020 பெப்ரவரி மாதத்தைத் தொடர்ந்து முதல் தடவையாக முந்திய ஆண்டுடன் ஒப்பிடும்போது நேர்ப்படியான வளர்ச்சியொன்றைப் பதிவு செய்தது.

2020 செப்டம்பர் மாதத்தில் வர்த்தகப் பண்டங்களின் ஏற்றுமதி முன்னைய ஆண்டுக்கு ஒப்பீடாகவும் முன்னைய மாதத்திற்கு ஒப்பீடாகவும் அதிகரித்துச் சென்றதுடன் உலகின் தற்கால சந்தை நிலைமைகளுக்கு மத்தியிலும்கூட ஏற்றுமதித் துறையின் தாக்குப்பிடிக்கும் ஆற்றல் சுட்டிக்காட்டப்பட்டது. 2020 செப்டம்பர் மாதத்தில் 1,000 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வர்த்தகப் பண்ட ஏற்றுமதி, 2019 செப்டம்பர் மாதத்தில் 954 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஏற்றுமதிக்கு ஒப்பீடாக நூற்றுக்கு 4.8 சதவீத அதிகரிப்பாகும். மேலும், இது 2020 ஆகஸ்ட் மாதத்தில் அறிக்கையிடப்பட்ட 947 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் ஏற்றுமதியை விட நூற்றுக்கு 5.6 சதவீத அதிகரிப்பாகும்.

2020 அக்டோபர் மாதத்தில் கொவிட்-19 பெருந்தொற்று மீண்டும் தலைதூக்கியமையால் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக வர்த்தகப் பண்ட ஏற்றுமதி வருவாய் குறைவடைந்தது. பெருந்தொற்றின் இரண்டாவது அலை திடீரெனப் பரவியதன் காரணமாக நாட்டில், குறிப்பாக ஆடைக் கைத்தொழிலில் திட்டமிட்ட உற்பத்திகளுக்கும் ஆதரவுச் சேவைகளுக்கும் தடங்கல்கள் ஏற்பட்டதன் காரணமாக 2020 அக்டோபர் மாதத்தில் வர்த்தகப் பண்ட ஏற்றுமதியினாலான வருவாய்கள் 2019 அக்டோபர் மற்றும் 2020 செப்டம்பர் மாதங்களில் ஒப்பீட்டு ரீதியாக குறைவடைந்தது. மேலும், பெரும்பாலான நாடுகள் அனுபவித்த கொவிட்-19 பெருந்தொற்றின் இரண்டாவது அலை காரணமாக இலங்கையின் பிரதான ஏற்றுமதிகளுக்கு பாதகமான முறையில் உலக சந்தை நிலைமைகள் தீவிரமடைந்தன. அது இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு குறைந்த கேள்வி ஏற்படக் காலாக அமைந்தது. அதன் விளைவாக, 2020 அக்டோபர், 2020 நவம்பர்

மாதங்களில் ஏற்றுமதி வருமானம் 1,667 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகக் காணப்பட்டது. அது 2019 அக்டோபர், நவம்பர் மாதங்களை விட நூற்றுக்கு 14.7 சதவீத குறைவாகும்.

கடந்தாண்டுடன் ஒப்பிடும்போது நூற்றுக்கு 15.6 சதவீத வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்து ஆண்டினுள் வர்த்தகப் பண்ட ஏற்றுமதி வருமானங்கள் 10,077 மில்லியன் அமெரிக்க டொலராக மதிப்பிடப்பட்டுள்ளது.

முழுதுமளாவிய ஏற்றுமதிகளில் நூற்றுக்கு 23.2 சதவீதமான கமத்தொழில் ஏற்றுமதிகளின் செயலாற்றுகை 2020 ஆம் ஆண்டில் மேலும் வீழ்ச்சியடைந்தது. தேயிலை, உற்பத்திசெய்யப்படாத புகையிலை, கடலுணவு ஏற்றுமதிகளின் விவசாய ஏற்றுமதி வருமானம் 2,336.2 மில்லியன் அமெரிக்க டொலர் வரை நூற்றுக்கு 5.1 சதவீதத்தால் குறைவடைந்தது.

இலங்கையின் முழுதுமளாவிய ஏற்றுமதி வருமானத்திற்கு இரண்டாவது அதிகூடிய பங்களிப்பை வழங்கும், நூற்றுக்கு 12.3 சதவீதமான தேயிலை ஏற்றுமதி வருமானம், 2020 ஆம் ஆண்டில் 1,240.9 மில்லியன் டொலர் வரை நூற்றுக்கு 7.5 சதவீதத்தால் குறைவடைந்தது. 2019 ஜனவரி-டிசம்பர் மாதங்களில் 292.6 மில்லியன் கிலோகிராம்களாக இருந்த இலங்கையின் தேயிலை ஏற்றுமதிக்கு ஒப்பீடாக 2020 ஜனவரி-டிசம்பர் காலப்பகுதிக்கு அது 265.6 மில்லியன் கிலோ கிராமாகக் காணப்பட்டது. அது 27.0 மில்லியன் கிரோகிராம் குறைவாகும். ஏற்றுமதி வகுதிகளின்படி அனைத்துத் துறைகளின் ஏற்றுமதிகளைப் பகுப்பாய்வுசெய்யும்போது, அதாவது கையிருப்புத் தேயிலை, பைக்கற்று செய்யப்பட்ட தேயிலை, பொதியில் அடைக்கப்பட்ட தேயிலை, பசிய தேயிலை, துரித தேயிலை 2020 இல் வீழ்ச்சி கண்டது.

கருவா மற்றும் நறுமண எண்ணெய் ஏற்றுமதி அளவு அதிகரித்தமை காரணமாக பலசரக்கு ஏற்றுமதி வருமானம் 333.5 மில்லியன் அமெரிக்க டொலர் வரை நூற்றுக்கு 6.7 சதவீதத்தினால் அதிகரித்தது. கடலுணவு ஏற்றுமதி வருமானம் 27.7 இனால் வீழ்ச்சியடைந்ததுடன், ஐக்கிய அமெரிக்க குடியரசு சந்தையில் அதற்கான கேள்வி குறிப்பிடத்தக்க அளவில் சரிவடைந்தமையே அதற்கான பிரதானமான காரணமாக அமைந்தது. அதற்கு முற்றிலும் மாற்றமான விதத்தில், தென்னம் பருப்பு உற்பத்திகளினால் தேய்காய் எண்ணெய் ஏற்றுமதியும் தென்னம் பருப்பல்லாத உற்பத்திகளிலிருந்து தென்னம் தும்பு நார் ஏற்றுமதியும் அதிகரித்ததன் காரணமாக தெங்கு உற்பத்தி வருமானம் 345.2 மில்லியன் டொலர் வரை நூற்றுக்கு 4.8 சதவீதத்தினால் அதிகரித்தது.

மொத்த ஏற்றுமதி வருமானத்தில் நூற்றுக்கு 76.5 சதவீத அளவான கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருமானம் 2020 ஆம் ஆண்டில் குறைவடைந்ததுடன், பிரதானமாக புடவை மற்றும் ஆடை ஏற்றுமதிகளிலான வீழ்ச்சி அதற்குக் காரணமாக அமைந்தது. அதன்படி, 2019 ஆம் ஆண்டில் 942.3 மில்லியன் டொலரில் இருந்து 2020 ஆம் ஆண்டில் 7,701.7 மில்லியன் டொலர் வரையில் நூற்றுக்கு 18.3 சதவீதத்தினால் கைத்தொழில் ஏற்றுமதிகள் குறைவடைந்தன.

அதற்குச் சமமாக, பிரதானமாக கப்பல் மற்றும் விமானங்களுக்கான எரிபொருள்களிலிருந்து உருவான பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதி வருமானம் 2020 ஆம் ஆண்டில் 373.6 மில்லியன் டொலர் வரை நூற்றுக்கு 28.3 சதவீதத்தினால் குறைவடைந்தது. கொவிட் 19 காரணமாக விமானநிலையம் மூடப்பட்டமையும் விமானப் பயணங்கள் இரத்துச் செய்யப்பட்டமையும் காரணமாக ஏற்பட்ட குறைந்த ஏற்றுமதி அளவுகள் கப்பல் மற்றும் விமானங்களுக்கான எரிபொருள் ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடையக் காரணமாக அமைந்தது. இறப்பர் கையுறைகள் ஏற்றுமதி வருமானம் அதிகரித்தபோதும், றயர் ஏற்றுமதி குறைவடைந்தமை காரணமாக 2020 ஆம் ஆண்டில் இறப்பர் உற்பத்திகளின் ஏற்றுமதி வருமானம் 786.1 மில்லியன் டொலர் வரை நூற்றக்கு 9.2 சதவீதத்தினால் குறைவடைந்தது.

சுற்றுலா தொழில்முயற்சியினாலான வருமானம்

கொவிட்-19 பெருந்தொற்று பரவலும் அதன் உலகளாவிய வியாபகமும் 2020 பெப்ரவரி மாதம் தொடக்கம் உலக சுற்றுலாக் கைத்தொழிலுக்கு குறிப்பிடத்தக்க அளவு பாதிப்பு செலுத்தியது. இலங்கையும் அப்போக்கை அனுபவித்ததுடன், மார்ச் மாத நடுப்பகுதியிலிருந்து இலங்கைக்கு அனைத்து வான் பயணங்களும் கப்பல் பயணங்களும் இடைநிறுத்தப்பட்டவுடன் 2020 ஏப்ரல் தொடக்கம் நவம்பர் வரை சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவாகவில்லை. எவ்வாறாயினும், சுற்றுலா தொழில்முயற்சியை மீண்டும் ஆரம்பிக்கும் முன்னோடிக் கருத்திட்டம்ட ஆரம்பிக்கப்பட்டவுடன் 2020 டிசம்பர் மாதத்தில் 393 யுக்ரேன் நாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்தனர். அதன் பயனாக 2019 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 1,913,702 க்கு ஒப்பீடாக 2020 ஆம் ஆண்டில் அப்பெறுமானம் 507,704 ஆக பதிவாகியது. 2019 ஆம் ஆண்டில் 3,607 மில்லியன் டொலருக்கு ஒப்பீடாக 2020 ஆம் ஆண்டில் சுற்றுலாக் கைத்தொழிலிருந்தான திரண்ட வருவாய் 957 மில்லியன் டொலராக இருந்தது.

உழைப்பாளர் பண அனுப்பீடுகள்

உலக பெற்றோலிய விலைகளின் உறுதிப்பாடின்மைக்கு மத்தியில் ஏராளமான உழைப்பாளர்களின் பண அனுப்பீடுகள் உருவாக்கப்படுகின்ற மத்திய கிழக்கு நாடுகளின் புவி-அரசியல் வளர்ச்சிகளினால் உழைப்பாளர்களின் பண அனுப்பீடுகள் மீது பாதிப்புகள் ஏற்பட்டன. 2020 மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் பெருந்தொற்று பரவியதன் காரணமாக 2020 மார்ச் மாதத்தில் விமானநிலையத்தை மூடி விடுவதற்கு முன்னர் தென்கொரியா, இத்தாலி போன்ற நாடுகளிலிருந்து திரும்பிவந்த குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானவர்கள் காரணமாகவும் உழைப்பாளர் பணஅனுப்பீடுகள் மீது பாதிப்பு ஏற்பட்டது. எவ்வாறாயினும், திரண்ட அடிப்படையொன்றின் பேரில் 2019 ஆம் ஆண்டின் இணையொத்த காலப்பகுதிக்கு ஒப்பீடாக 2020 இன் முதலரைப் பாகத்தில் உழைப்பாளர் பணஅனுப்பீடுகள் 2,980 மில்லியன் அமெரிக்க டொலர் வரை நூற்றுக்கு 8.9 சதவீதத்தினால் குறைவொன்றைப் பதிவுசெய்தது.

2020 நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் உழைப்பாளர் பணஅனுப்பீடுகள் கோடிட்டுக் காட்டத்தக்களவு வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. 2020 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 5.8 சதவீத வருடாந்த வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்து ஆண்டின் ஊழியர் பண அனுப்பீடுகள் 7,104 மில்லியன் டொலர் வரை செல்வதற்கு 2020 யூன் மாதம் தொடக்கம் அவதானிக்கப்பட்ட முன்னேற்றங்கள் துணை வந்தது.

கொவிட்-19 பரவலுக்கு மத்தியில் வெளிநாட்டுத் துறையின் வளர்ச்சிகள், உலக மற்றும் உள்நாட்டு சந்தை திட்டவட்டமின்றிய தன்மைகளினால் உருவாக்கப்பட்ட தொடக்க அழுத்தம் உள்நாட்டு, வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் குறிப்பாக, 2020 மார்ச் மாதத்தின் இரண்டாம் அரைப் பாகத்தில் உணரப்பட்டது. அடிப்படையில் சந்தை நடத்தைகளும் அரசாங்க பிணையச் சந்தையிலிருந்து வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல் காரணமாக இலங்கை ரூபாவில் கோடிட்டுக்காட்டத்தக்க பெறுமதியிறக்கமொன்றை அவதானிக்க முடிந்தது. உள்நாட்டு, வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் ஓரளவு தலையீடுசெய்தல், அனைத்து தனியார் மோட்டார் வாகனங்களும் அத்தியாவசியமல்லாத நுகர்வுப் பண்டங்களும் இறக்குமதி செய்யப்படுவதை இடைநிறுத்தல், போக்குவரத்துக் கொடுப்பனவொன்றாக வெளியிடப்படும் அந்நியச் செலாவணி நாணயத்தாள்களை உயர்ந்தபட்சம் 5,000 அமெரிக்க டொலர் வரை மட்டுப்படுத்தல், இலங்கையின் உரிமம்பெற்ற வங்கிகளினால் இலங்கை சர்வதேச இறைமையுடைய முறிகளை கொள்வனவு செய்வதை இடைநிறுத்தல் உள்ளிட்ட அவசர நடவடிக்கை மற்றும் கொள்கைசார் நடவடிக்கைகள் பலவற்றை மத்திய வங்கி எடுத்தது. குறிப்பாக சந்தை நடத்தைகளின் மூலம்

நெறிப்படுத்தப்படும் அவ்வாறான இடைக்கிடை காணப்பட்ட உறுதிப்பாடற்ற காலப்பகுதிக்கு மத்தியிலும் ரூபாவின் முழுதுமளாவிய பெறுமதியிறக்கம் 2020 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலருக்கு ஒப்பீடாக நூற்றுக்கு 2.6 சதவீதத்திற்கு மட்டுப்பாடானது.

## **SLECIC** இன் செயலாற்றுகை

இலங்கை ஏற்றுமதியாளர்களின் நம்பகத்தன்மை வாய்ந்த வியாபார கூட்டுப் பங்காளரொருவர் என்ற வகையில் கூட்டுத்தாபனம் கடன் ஆலோசனைச் சேவைகளையும் காப்பீட்டையும் வழங்குகிறது. முன்னெடுப்போதுமில்லாதவாறு கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக செலவுகள் குறைக்கப்பட்டுள்ள காலங்களில், இது எப்பொழுதும் வெற்றிகரமான எனினும் மதிநுட்பம் வாய்ந்த இலங்கை ஏற்றுமதியாளர்களின் நம்பகத் தகுந்த வியாபார கூட்டுப் பங்காளரொருவர் என்ற வகையில் கூட்டுத்தாபனம் கடன் ஆலோசனை சேவைகளையும் காப்பீட்டையும் வழங்குகிறது. முன்னெடுப்போதையும் விட, கொவிட் 19 பெருந்தொற்று காரணமாக செலவுகள் குறைக்கப்பட்டுள்ள காலங்களில், இது எப்பொழுதும் வெற்றிகரமான எனினும் மதிநுட்பம்வாய்ந்த முயற்சியாண்மையொன்றின் அத்தியாயவசிய ஓரங்கமாகும்.

2020 ஆம் ஆண்டில் ஏற்றுமதி வருமானம் குறிப்பிடத்தக்க அளவால் ஒடுக்கமடைந்தபோதும், 'விற்பனவாளரின் ஆபத்து' கடன் காப்புறுதியின் கீழ் காப்பீடு செய்யப்பட்ட கப்பலேற்றுகைகள், 2019 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 35.74 பில்லியன் ரூபாவை விட சுமார் 1400 மில்லியன் ரூபா அளவால் வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்து அக்காலப்பகுதிக்கு 37.15 பில்லியன் ரூபா வரை நெருங்கியது.

தமது காப்புறுதியாளர்களுடன் நீண்டகால தொடர்புகளை வளர்த்துக்கொள்வது குறித்து கூட்டுத்தாபனம் தீவிர நம்பிக்கையுடன் இருப்பதுடன், அதன்மூலம் தமது வியாபாரங்களுக்கு குறிப்பிடத்தக்க உறுதிப்பாடொன்று ஏற்பட்டுள்ளது.

## நிதிப் பெறுபேறுகள்




அன்று தேசிய வரவுசெலவுத்திட்டத்தினால் முன்மொழியப்பட்ட இறுதி வருமான வரி வீதத்தைத் தீர்மானிக்க முன்னர் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வருமான வரி பெருமளவு அதிகரிக்கப்பட்டதன் காரணமாக, குறைந்த வருமான வரிக் குறைப்புகளுக்கு உட்பட்ட கடந்த ஆண்டில் 242.25 மில்லியன் ரூபா இலாபத்திற்கு ஒப்பீடாக 2020 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் தேறிய இலாபம் 223.35 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. வரி வீதம், முன்பு காணப்பட்ட நூற்றுக்கு 28 சதவீதத்திற்கு ஒப்பீடாக நூற்றுக்கு 14 சதவீதம் வரை அரைவாசியால் குறைவடைந்தது. ஆண்டிறுதியில், கூட்டுத்தாபனத்தின் மொத்த சொத்துக்களும் பங்குகளும் உரிமைப் பங்குகளும் முறையே 3,194 மி.ரு., 2,934 மி.ரு. ஆகக் காணப்பட்டது.

2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிப் பெறுபேறுகள் (மி.ரூ.)

| | 2019 | 2020 |
|---|---|---|
| மொத்த கட்டுப்பண வருமானம் | 226.07 | 204.18 |
| பிற தொழிற்பாட்டு வருமானம் | 15.34 | 12.83 |
| தொழிற்பாட்டு மேன்மிகை | 276.90 | 288.37 |
| தேறிய உரிமைக் கோரிக்கைகள் | 87.74 | 95.13 |
| முதலீட்டு வருமானம் | 216.94 | 215.39 |
| மொத்தச் செலவு | 180.06 | 177.10 |
| மொத்த வருமானம் | 456.97 | 465.47 |
| மூலதனமும் ஒதுக்கும் | 2624.18 | 2825.69 |
| தேறிய மேன்மிகை | 242.25 | 223.35 |
| வரிகளும் அறவீடுகளும் | 37.82 | 89.87 |

கட்டுப்பண வருமானம்

கட்டுப்பண விகிதங்களின் கட்டமைப்பு, இலாபம்-நட்டமற்ற கொள்கையின் (profit no loss principle) மீதமைந்துள்ளது. முக்கிய வர்த்தக சந்தைகளுடன் வேகமாக பலவீனமடைந்துவரும் ஒரு வியாபாரச் சூழல் காணப்படும் நிலைக்கு மத்தியிலும், பெருந்தொற்று நிலைமையில் உள்நாட்டு ஏற்றுமதிகள் சேவைநாடுநர்களுக்கு போட்டிகரமானதாக இருப்பதற்கு உதவும் எண்ணத்துடன் கூட்டுத்தாபனம் நாட்டை ஒரே வகையீட்டில் பேணி வந்தது.

கடந்தாண்டின் இணையொத்த 226.07 மில்லியன் ரூபாவுக்கு ஒப்பீடாக 2020 ஆம் ஆண்டில் 204.18 மில்லியன் ரூபா கட்டுப்பண வருமானமொன்றை அடைந்துகொள்ள கூட்டுத்தாபனம் துணிந்தது. எவ்வாறாயினும், கூட்டுத்தாபனம் 2020 ஆம் ஆண்டிற்கு வரவுசெலவுத்திட்ட கட்டுப்பணமான 201 மில்லியன் ரூபாவைத் தாண்டியது.

கட்டுப்பண கூறமைதி

| சேவை வகுதி | 2019 (மி.ரூ.) | 2020 வரவுசெலவுத்திட்ட (ரூ.மி.) | 2020 உள்ளபடியான (ரூ.மி.) |
|---|---|---|---|
| கடன் காப்புறுதி | 208.97 | 187.80 | 196.88 |
| கடன் உத்தரவாதங்கள் | 17.10 | 13.20 | 7.30 |
| மொத்தம் | 226.07 | 201.00 | 204.18 |

எமது முக்கிய உற்பத்தியான விற்பனவாளரின் ஆபத்தில் கட்டுப்பண வருமானம், 2020 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் 187.98 மி.ரூ. கட்டுப்பணத்திற்கு ஒப்பீடாக 2020 ஆம் ஆண்டில் 196.88 மி.ரூ. ஆகக் காணப்பட்டது. எமது உத்தரவாதங்களின் கீழ் ஏற்றுமதி நிதி வீழ்ச்சியடைந்தமையும் ஆண்டினுள் பெருந்தொற்று காரணமாக ஏனைய கடன் உத்தரவாதங்களுக்கான கேள்வி குறைவடைந்தமையும் காரணமாக கடன் உத்தரவாத வருமானம் பாரியளவில் வீழ்ச்சி கண்டது.




முதலீட்டு வருமானம்

மிகவும் வரையறுத்த ஒழுங்குறுத்துகைச் சட்டகத்தினுள் கூட்டுத்தாபனத்தின் முதலீட்டுப் பட்டியல்கள் முகாமை செய்யப்படுகிறது. அதன்போது கூட்டுத்தாபனத்தின் அனைத்து முதலீடுகளும் அரச வங்கிகளில் ஒன்றின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும். திறைசேரி வழிகாட்டு நெறிகளுக்கமைய முதலீடுகளை மேற்கொள்வதற்கான கருவிகளின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டதாகும். ஆதலால், முதலீட்டுப் பட்டியலில் குறிப்பிடத்தக்க அளவு, அரச வங்கிகளின் நிலையான வைப்புக்களிலும் பிணைப்பத்திரங்களிலும் காணப்படுகிறது. கடந்தாண்டின் 216.94 மி.ரூ. கொண்ட முதலீட்டு வருமானத்திற்கு ஒப்பீடாக 2020 ஆம் ஆண்டில் அது 215.69 மில்லியன் ரூபாவாக இருந்தது.




தேறிய உரிமைக் கோரிக்கைகள்

நடப்பாண்டு, சில ஏற்றுமதிச் சந்தைகளில் குறிப்பாக மரபு ரீதியான சில்லறை வியாபாரத்தில் அதிக உரிமைக்கோரிக்கைகளைக் காணக்கூடியதாக இருந்த சவால் மிகுந்த ஓர் ஆண்டாக விளங்கியது. நீண்டகால தவணை தவறல்களும் கொள்வனவாளர்களின் வங்குரோத்து நிலையும் உரிமைக்கோரிக்கைக் கொடுப்பனவுகள் குறிப்பிடத்தக்க அளவால் அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்தது. 2019 ஆம் ஆண்டில் 87.73 மில்லியன் ரூபாவாக இருந்த தேறிய



உரிமைக் கோரிக்கைகளுடன் ஒப்பிடும்போது இவ்வாண்டில் அது 95.13 மில்லியன் ரூபாவாக இருந்தது.

பிற தொழிற்பாட்டு வருமானம்

எமது வசதிகளின் பேரில் அறவிடப்படும் எல்லா விதமான கட்டணங்களும், பிஸ்இன்.ஃபோ வருமானமும் செலுத்தப்பட்ட உரிமைக்கோரிக்கை மீள்கொடுப்பனவுகளிலிருந்து பிற தொழிற்பாட்டு வருமானத்தை உள்ளடக்கும். கடந்த ஆண்டின் வருமானமான 15.34 மில்லியன் ரூபாவுடன் இதனை ஒப்பிடுமிடத்து, இவ்வாண்டின் மொத்த வருமானம் 12.84 மில்லியன் ரூபாவாக இருந்தது. கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக தொழிற்பாடுகளின் அளவு குறைவடைந்ததன் காரணமாக கட்டண வருமானம் பிஸ்இன்.ஃபோ வருமானம் எல்லை வீழ்ச்சியொன்றைப் பதிவு செய்தது.




மொத்த வருமானம்

கட்டுப்பண வருமானம், பிற தொழிற்பாட்டு வருமானம், முதலீட்டு வருமானம் மற்றும் பிற வருமானங்களை உள்ளடக்கிய மொத்த வருமானம், 2019 ஆம் ஆண்டில் காணப்பட்ட 456.97 மில்லியன் ரூபாவுக்கு ஒப்பீடாக 2020 ஆம் ஆண்டில் 456.46 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. LKAS 21 இன்படி செலாவணி இலாபங்கள்/ நட்டங்கள் இலாப நட்டக் கணக்கில் கூட்டுத்தாபனத்தினால் அடையாளம் காணப்பட வேண்டும். ஆண்டினுள் உள்நாட்டு புழக்கப் பணத்தின் பெறுமதி தேய்வடைவதன் காரணமாக ஆண்டினுள் கூட்டுத்தாபனத்தின் செலாவணி இலாபம், 30.29 மில்லியன் ரூபாவாகும்.




மொத்தச் செலவு

நேரடிச் செலவுகளும் பிற முகாமைத்துவ செலவுகளும் மொத்தச் செலவில் அடங்கும். உரிமைக்கோரிக் கைச் செலவுகளையும் நிலைவர அறிக்கைக் கிரயங்களையும் நேரடிச் செலவு உள்ளடக்கும். 2019 ஆம் ஆண்டின் 96.12 மில்லியன் ரூபாவுக்கு ஒப்பீடாக 2020 ஆம் ஆண்டில் முழுதுமளாவிய நேரடிச் செலவு 102.36 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.




மொத்த முகாமைத்துவச் செலவு 2019 ஆம் ஆண்டில் காணப்பட்ட 83.91 மில்லியன் ரூபாவுக்கு ஒப்பீடாக 2020 ஆம் ஆண்டில் அது 74.74 மில்லியன் ரூபாவாக இருந்தது.



ஆகையால், கட்டுப்படுத்தக்கூடிய கிரயத்தை குறிப்பிடத்தக்க அளவில் மட்டுப்படுத்தி பயனுறுதிவாய்ந்த விதத்தில் முகாமை செய்துகொள்வதற்கு கூட்டுத்தாபனம் துணிந்துள்ளது.

அரச வருமானத்திற்கான பங்களிப்பு

சவால் மிகுந்த வியாபார நிலைமைகளைப் பொருட்படுத்தாமல், மீளாய்வு ஆண்டினுள் அரச வருமானத்திற்கு SLECIC தொடர்ந்தும் பங்களிப்பை வழங்கியுள்ளது. SLECIC இன் எதிர்கால பொறுப்புக்களைப் பாதுகாப்பதற்கு கடந்த பல ஆண்டுகளாக தமது ஈட்டல்களிலிருந்து போதிய அளவு நிதியைக் கட்டியெழுப்பிக் கொள்ளும் தேவை இருந்தது. இந்நோக்கத்திற்காக வசதியளிக்கும் நோக்குடன் அன்றைய சட்டவாக்குநர்களினால் அரசாங்கத்திற்கான பல்வேறு வரி செலுத்தல்களிலிருந்து SLECIC நிறுவனத்திற்கு வரி விலக்களிக்கப்பட்டது.




அரச நிறுவனங்களின் தற்காலிக மேன்மிகை நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் (SITSTF) ஒழிக்கப்பட்டவுடன் கூட்டுத்தாபனத்தின் ரூ.24,848,072.67 பெறுமதியான எஞ்சிய முதலீடு (திரண்ட வட்டியும் அடங்கலாக) திரட்டு நிதியத்திற்கும் பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்திற்கும் மாற்றப்பட்டதுடன், மேற்படி தொகை 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரிக்கு அனுப்பீடுசெய்யப்பட்ட விசேட வரியொன்றாகக் கருதுமாறு கூட்டுத்தாபனம் கோரியது. இது தவிர, மீளாய்வு ஆண்டினுள் செலுத்தப்பட்ட வரிகள் 2019 ஆம் ஆண்டில் 37.82 மில்லியன் ரூபாவுக்கு ஒப்பீடாக 65.02 மில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளது. வரிப்பொறுப்பு குறைவடைதல் 23.08 மில்லியன் ரூபா நிதியியற் சேவைகளின் பேரில் பெறுமதிசேர் வரியையும் 41.94 மில்லியன் ரூபா வருமான வரியையும் உள்ளடக்கியுள்ளது. ஆகையால், 2020 ஆம் ஆண்டின் விசேட வரி உள்ளிட்ட மொத்த வரிப் பொறுப்பு 89.87 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

புதிய செயல்முனைப்புகள்

சர்வதேச வர்த்தகத்தின் அதிகரிக்கும் ஆபத்துக்களுடன் காப்புறுதிதாரர்களினால் அவர்கள் பின்பற்றும் மீள்காப்புறுதி முறைகளைத் தொடர்ந்தும் முன்னேற்றுவது அவசியமாகும். காப்புறுதிதாரர்களுக்கு ஆபத்தை மிகவும் யதார்த்தபூர்வமாக மதிப்பீடுசெய்வதற்கும் சர்வதேச வர்த்தகக் கோரிக்கைகளை நிறைவுசெய்வதற்கும் துரிதமாக தீர்மானங்களை எடுப்பதற்கும் மீள்காப்புறுதி முறை துணை வர வேண்டும்.

- வாங்குநர் புள்ளி அட்டை மாதிரி முறையை **(Buyer Score Card Model)** அறிமுகப்படுத்தல்

பொதுநலவாய நாடுகள் செயலகத்தின் தொழில்நுட்ப ஒத்தாசையுடன் கூட்டுத்தாபனத்தினால் 2019 ஆம் ஆண்டின் ஈற்றரைப் பாகத்தில் வாங்குநர் மீள்காப்புறுதிக்கான புள்ளிவழங்கும் அட்டை மாதிரியொன்றைத் தயாரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டதுடன், தற்போது கடன்

எல்லைகளை நிர்ணயிப்பதற்கும் தீர்மானங்களை எடுக்கும்போது இசைவைச் சான்றுறுதிப்படுத்துவதற்கும் புள்ளி அட்டை மாதிரி பின்பற்றப்படுகிறது.

- உரிமைக்கோரிக்கைக் கைந்நூலை விருத்திசெய்தல் **(Claim Manual)**

பொதுநலவாய நாடுகள் செயலகத்தின் பகுதியளவு தொழில்நுட்ப உதவியுடன் உரிமைக்கோரிக்கைக் கைந்நூலைத் தயாரிக்கும் பணி 2018 ஆம் ஆண்டின் ஈற்றரைப் காகத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2019 டிசம்பர் மாதத்தில் அப்பணியை நிறைவுசெய்வதற்கு கூட்டுத்தாபனத்தால் முடிந்தது. 2020 ஆம் ஆண்டில் உரிமைக்கோரிக்கைகளைத் தயாரிப்பதற்கும் அது அமுல்படுத்தப்பட்டது.

2021 ஆம் ஆண்டுக்கான நோக்கு

கொவிட் 19 பெருந்தொற்று காரணமாக 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வீழ்ச்சியைத் தொடர்ந்து உலக பொருளாதார விளைவுகள் 2021 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 4 சதவீதத்தினால் விரிவடையுமென்று எதிர்பார்க்கப்பட்டபோதும், அது பெருந்தொற்றுக்கு முந்திய எடுகோள்களை விட நூற்றுக்கு 5 சதவீதத்தை விடக் குறைந்ததொரு மட்டத்தில் இன்னும் உள்ளது. உலகளாவிய வளர்ச்சி 2022 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 3.8 சதவீதம் வரை நடுநிலையடையுமென்று எதிர்வுகூறப்பட்டுள்ளபோதும், உள்ளார்ந்த விருத்தியின் மீது பெருந்தொற்று மூலம் ஏற்பட்ட நீடித்திருக்கும் சேதம் காரணமாக குறைவடைந்துள்ளது.

பரவலாக இடம்பெற்ற தடுப்பூசியேற்றலின் உதவியுடன் பெருந்தொற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதும், நீடுறுதியான நிதிக் கொள்கைகளின் அனுசரணையும் காரணமாக 2021, 2022 இல் முறையே நூற்றுக்கு 3.3, நூற்றுக்கு 3.5 சதவீதம் வரையான வளர்ச்சியுடன் முன்னேறிய பொருளாதாரங்கள் வழமைநிலைக்குத் திரும்புமென்று எதிர்வுகூறப்பட்டுள்ளது.

எழுந்துவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களின் (EMDEs) வளர்ச்சி 2021 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 5 சதவீதம் வரை உறுதிப்பாடடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றபோதும், EMDE விளைவு அதன் பெருந்தொற்றுக்கு முந்திய எதிர்வுகூறல்களை விட பெரிதும் குறைந்த ஒரு மட்டத்தில் காணப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. பெருந்தொற்றினால் ஒரு தசாப்தம் போன்ற நீண்டதொரு காலம் பூராவும் காணப்படும் உலக கடன் திரள்தலுடன் சம்பந்தப்பட்ட ஆபத்துக்கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. உலக பொருளாதாரம், குறிப்பாக நிதிச் சந்தையை பதற்றத்திற்கு உள்ளாக்கி கடன் மட்டம் வரலாற்றில் அதிகூடிய மட்டத்தை அடைந்துள்ளது. வறுமைநிலையைக் குறைக்கும் எதிர்பார்ப்புகளை மழுங்கடிக்கச்செய்து, பெருந்தொற்றினால் எதிர்வரும் தசாப்தத்தின் உள்ளார்ந்த வளர்ச்சியில் நீண்டகாலம் எதிர்பார்த்த மந்தகதி மேலும் கூர்மைப்படுத்தப்பட வாய்ப்புள்ளது. சீனாவின் பலமான எழுச்சி காரணமாக கிழக்காசிய மற்றும் பசுபிக் பிராந்தியம் 2021 இல் கோடிட்டுக் காட்டத்தக்க வகையில் பலமடையுமென்று எதிர்பார்க்கப்படுவதுடன், மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்கா, உப சஹாரா ஆபிரிக்க பிராந்தியங்களின் செயற்பாடுகள் மிகவும் பலவீனமடையுமென்று எதிர்வுகூறப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஆண்டுகளில், கூட்டுத்தாபனம் ஆபத்துக்களை மதிநுட்பம்வாய்ந்த முறையங்கில் மீள்காப்புறுதி செய்வதுடன், ஏற்றுமதியாளர்களுக்கு அச்சமின்றி பாதுகாப்பான முறையில் வியாபாரத்தில் ஈடுபடக்கூடியவாறு ஆலோசனைகளை வழங்கும். அதன் ஆபத்துக் கண்காணிப்பு முறைமையை மேலும் பலமடையச்செய்தல், கடன் தகவல் வலையமைப்பை ஒருங்கிணைத்தல்,

மீள்காப்புறுதிதாரர்கள் மத்தியில் இயல்திறனைக் கட்டியெழுப்புதல், முன்னேற்றிய வேலை முறைகள், தொழில்நுட்ப முறைமைகள் ஊடாக வினைத்திறனை முன்னேற்றுவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

# நன்றி நவிலல்

கடந்த பல ஆண்டுகளாக SLECIC மீது தொடர்ச்சியாக வைத்த நம்பிக்கைக்காக இலங்கை ஏற்றுமதியாளர் சமூகத்திற்கு, குறிப்பாக SLECIC சேவைநாடுநர்களுக்கும் வணிக வங்கிகளுக்கும் நான் நன்றி தெரிவிக்கின்றேன். இன்று நாமிருக்கும் நிலைக்கு எம்மை நீங்களே வளர்த்துள்ளீர்கள்.

SLECIC இன் செயற்பாடுகளும் வளர்ச்சியும் தொடர்பில் நிதி அமைச்சர் காண்பிக்கும் சுறுசுறுப்பான அணுகுமுறை, அவரது வழிகாட்டல், அர்ப்பணிப்பு, தீவிர கரிசனை பற்றி நான் நேர்மையுடன் நன்றி தெரிவிக்கின்றேன்.

பணிப்பாளர் சபையினால் நிபுணத்துவக் கருத்துக்களுடனும் புதிய சிந்தனைகளுடனும்கூடியதாக பல்வேறு விதங்களிலும் தொடர்ச்சியாக எமக்கு வழிகாட்டப்பட்டது. SLECIC மீதான அவர்களின் அர்ப்பணிப்பும் கடப்பாடும் பெரிதும் மெச்சுவதற்குரியதாகும்.

கடமைகளை நிறைவேற்றுவதில் SLECIC க்கு வழங்கிய ஒத்துழைப்பையிட்டு நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் செயலாளருக்கும், மேலதிக செயலாளர்களுக்கும், ஏனைய அதிகாரிகளுக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவிக்கின்றேன். மேலும், SLECIC க்கு பலவாறும் உதவி ஒத்தாசைகளைப் புரிந்ததையிட்டு இலங்கை மத்திய வங்கியின் உயரதிகாரிகளுக்கும், வர்த்தகத் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கும், பல்வேறு வணிக சபைகளின் அங்கத்தவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதராண்மைக் குழுக்களும் குறிப்பாக வர்த்தக நிலைத் தூதரின் பிணைச்சுகளும் SLECICக்கு வழங்கிய ஒத்துழைப்பையிட்டு எனது விசேட நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

எம்மால் வேண்டப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எமக்கு தொடர்ந்தும் உதவி ஒத்தாசைகளைப் புரிந்த பர்னே சங்க செயலகத்தின் உயரதிகாரிகளுக்கும், எமது கடல்கடந்த சரிநேர் அலுவலர்களுக்கும், ஏனைய வியாபாரப் பங்காண்மையினருக்கும் எனது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். ஏற்றுமதிக் கடன் காப்புறுதியில் தொழில்நுட்பத் துறைகளில் அவர்களின் ஒருங்கிணைந்த அறிவும் வளங்களும் SLECIC க்கு மிகுந்த பக்கபலமாக அமைந்துள்ளது.

எனது முகாமைத்துவத்தினதும் பணியாட்டொகுதியினரதும் அசைக்க முடியாத நம்பிக்கையும் சிறப்புநிலைக்கான அர்ப்பணிப்பும் குறித்து எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். வளங்கள் மீதான நெருக்குதல்கள் காணப்பட்டபோதும், தேவைப்படும் சந்தர்ப்பங்களில் எமது காப்புறுதியாளர்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் மிகச் சிறந்த சேவைகளை வழங்குவதற்கு அவர்கள் கடந்த ஆண்டு முழுதும் அயராது உழைத்தனர். அவர்களின் இந்த அர்ப்பணிப்பு மனோபாவம் கூட்டுத்தாபனத்தின் வெற்றியில் மிக முக்கிய செயற்பொறுப்பொன்றை ஆற்றியது.

ஏ.எச்.விஜேசிறி அம்பவத்த
தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளரும்

# பணிப்பாளர் சபை

திருவாளர் ஏ.எச்.விஜேசிறி அம்பவத்த – தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளரும்
சட்டத்தரணி
(2020.01.02 ஆந் திகதியிலிருந்து அமுலுக்குவருமாறு நியமிக்கப்பட்டார்.)

திருவாளர் கே.எஸ்.எம். த சில்வா –
பிரதிப் பணிப்பாளர்
பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களம்
(2020.01.11 ஆந் திகதியிலிருந்து அமுலுக்குவருமாறு நியமிக்கப்பட்டார்.)

திருமதி ஈ.ஏ.ஏக்கநாயக்க –
உதவிப் பணிப்பாளர்
உள்ளக வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் நலன்புரி அமைச்சு.
(2020.02.21 ஆந் திகதியிலிருந்து அமுலுக்குவருமாறு நியமிக்கப்பட்டார்.)

திருவாளர் எஸ்.எம்.பரணவிதான –
பிரதம அலுவலர் - ஆயுள் காப்புறுதி
இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
(2020.05.29 ஆந் திகதியிலிருந்து அமுலுக்குவருமாறு நியமிக்கப்பட்டார்.)

திருவாளர் ஏ.ஏ.எம்.தாசிம் –
உதவி ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி
(2020.07.06 ஆந் திகதியிலிருந்து அமுலுக்குவருமாறு நியமிக்கப்பட்டார்.)

# SLECIC சிரேட்ட முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| திரு. எம்.எச்.விஜேசிறி அம்பவத்த | - | தவிசாளரும் முகாமைத்துவப் பணிப்பாளரும் |
| திரு. டி.எச்.ஜே.ரணசிங்க | - | பொது முகாமையாளர் |
| திருமதி ஆர்.எம்.யூ.என். பீரிஸ் | - | பிரதிப் பொது முகாமையாளர் |
| திரு. தம்மிக்க அலுத்கே | - | உதவிப் பொது முகாமையாளர் |
| திருவாளர் மொஹான் சில்வா | - | உதவிப் பொது முகாமையாளர் |
| திருமதி மயுரி முதலிகே | - | உதவிப் பொது முகாமையாளர் |

# SLECIC உற்பத்திகளும் சேவைகளும்

விற்பனவாளரின் அபாயமெனக் குறியிடப்பட்ட ஏற்றுமதிக் கடன் காப்புறுதியும் வங்கியாளர்களுக்கான கடன் உத்தரவாதங்களும் இந்நாட்டின் ஏற்றுமதியாளர் சமூகத்தின் நலன் கருதி **SLECIC** இனால் வழங்கப்படும் சேவைகளின் முக்கிய பகுதியை உள்ளடக்கியதாக உள்ளது. இடைஞ்சலும் அசௌகரியமும் இன்றி வணிக வங்கிகளிடமிருந்து கடன் பெறுதலை மிகவும் எளிதாக்கி ஏற்றுமதியாளர்களின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் நோக்கெல்லையை விரிவாக்குவதற்கு அவர்களுக்கு வாய்ப்பளித்து எமது சேவைகள் மூலம் ஏற்றுமதியாளர்களின் நிதிசார் காப்புநிலை பாதுகாக்கப்படுகிறது.

## விற்பனையாளரின் அபாயம்

விற்பனையாளரின் அபாயம், ஏற்றுமதியாளர் சமூகத்திற்கான எமது உற்பத்திகளதும் சேவைகளதும் அடிப்படை மூலக்கல்லாக அமைந்துள்ளது. விற்பனையாளரின் அபாயம், வர்த்தக மற்றும் அரசியல் அபாயங்கள் காரணமாக கடல்கடந்த வாங்குநர்களினால் கொடுப்பனவு செய்யாமையின் அல்லது தாமதித்த கொடுப்பனவின் அபாயத்திலிருந்து ஏற்றுமதியாளரைப் பாதுகாக்கும் நோக்கத்திற்குச் சேவையளிக்கிறது.

வர்த்தக அபாயங்கள்

- கடனிறுவலுவிழப்பும் வங்கிமுறிவும் (கையறுநிலை).
- கொடுப்பனவைச் செலுத்தத் தவறுகை.
- ஒப்பந்த மறுதலிப்பு.

அரசியல் அபாயங்கள்

- அந்நியச் செலாவணி அனுப்புதொகையிலான தாமதங்கள்.
- இறக்குமதி உரிமங்களை இரத்துச்செய்தல்.
- இறக்குமதிகளைத் தடைசெய்தல்.
- கொடுப்பனவுகளை தற்காலிகமாக நிறுத்துதல்.
- யுத்தம், புரட்சி, கலவரங்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்கள்.

கூட்டுத்தாபனத்தினால் முனையப்பட்ட பரந்தளவிலான காப்புறுதிப்பத்திரங்களுள் அதன் முழுமொத்த விற்பனைப் புரள்வு உத்தரவாத காப்பீட்டுக் காப்புறுதிப் பத்திரங்கள் மிகவும் பிரபல்யமானவையாகும். விசேட துறைகளின் தனித்துவமான தேவைகளுக்கான வழங்கல்களைச் செய்வதற்கு விசேடமாக ஏற்பாடுசெய்யப்பட்ட வசதிகளும் கிடைக்கத்தக்கனவாக உள்ளன.

ஏற்றுமதியாளர்களுக்கு முனையப்பட்ட ஏற்றுமதிக் கடன் காப்புறுதி வகுதிகள் பின்வருமாறாகும்:

விற்பனையாளரின் அபாயக் காப்புறுதிப் பத்திரம் - முழுதுமளாவிய விற்பனைப் புரள்வு - எல்லா வாங்குநர்களும்

வர்த்தக அபாயங்களிலிருந்தும் அரசியல் அபாயங்களிலிருந்தும் ஏற்றுமதியாளரைப் பாதுகாப்பதற்கான ஒரு காப்புறுதியாகும். பிற்போடப்பட்ட கொடுப்பனவு நியதிகளின் பேரில் மொத்த கப்பலேற்றுகைகள் இதன் கீழ் எம்மால் காப்பீடு செய்யப்படுகிறது.

விற்பனையாளரின் அபாயக் காப்புறுதிப்பத்திரம் - குறித்துரைக்கப்பட்ட வாங்குநர்

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குறித்துரைக்கப்பட்ட வாங்குநர்களின் வர்த்தக அபாயங்களிலிருந்தும் அரசியல் அபாயங்களிலிருந்தும் ஏற்றுமதியாளரைப் பாதுகாப்பதற்கான ஒரு காப்புறுதி.

விற்பனையாளரின் அபாயக் காப்புறுதிப்பத்திரம் - குறித்துரைக்கப்பட்ட நாடு

குறித்துரைக்கப்பட்ட ஒரு நாட்டின் வாங்குநர்களின் வர்த்தக அபாயங்களிலிருந்தும் அரசியல் அபாயங்களிலிருந்தும் ஏற்றுமதியாளரைப் பாதுகாப்பதற்கான ஒரு காப்புறுதி.

விற்பனையாளரின் அபாயக் காப்புறுதிப்பத்திரம் - அரசியல் அபாயம்

குறித்துரைக்கப்பட்ட ஒரு நாட்டின் அரசியல் அபாயத்திலிருந்து ஏற்றுமதியாளரைப் பாதுகாப்பதற்கான ஒரு காப்புறுதி.

விற்பனையாளரின் அபாயக் காப்புறுதிப்பத்திரம் - பூகோள ரீதியான காப்பீடு

இலங்கையில் அமைந்துள்ள கடல்கடந்த ஏற்றுமதிக் கம்பனிகளுக்கு வழங்கப்படும் ஒரு காப்புறுதி.

விற்பனையாளரின் அபாயக் காப்புறுதிப்பத்திரம் - துணைக் கம்பனிகளின் அபாயம்

தாய்க் கம்பனி இலங்கையில் அமைந்துள்ளபோது, இன்னொரு நாட்டில் அமைந்துள்ள துணைக் கம்பனியொன்றின் ஏற்றுமதியாளர்களின் அபாயங்களைக் காப்பீடுசெய்வதற்கான ஒரு காப்புறுதி.

விற்பனையாளரின் அபாயக் காப்புறுதிப்பத்திரம் - இறுதி வாங்குநர்களைக் காப்பீடுசெய்தல்

வாங்குநரின் நாட்டில் முழுமையாக சொந்தமாக வைத்திருக்கப்பட்ட துணைக் கம்பனிக்கு கப்பலேற்றுகைகள் செய்யப்பட்டுள்ளவிடத்து, இறுதி வாங்குநர்களின் வர்த்தக மற்றும் அரசியல் அபாயத்தைக் காப்பீடுசெய்து இலங்கை ஏற்றுமதியாளர்களைப் பாதுகாப்பதற்கான ஒரு காப்புறுதி.

விற்பனையாளரின் அபாயக் காப்புறுதிப்பத்திரம் - பண்டக் கையிருப்புகளின் அனுப்பீடு (கையடைப்பு)

பண்டக் கையிருப்புகளின் அனுப்பீடு (கையடைப்பு) பற்றிய வர்த்தக அபாயத்தின் மீதும் அரசியல் அபாயத்தின் மீதும் இலங்கை ஏற்றுமதியாளர்களைக் காப்பீடுசெய்தல்.

விற்பனையாளரின் அபாயக் காப்புறுதிப்பத்திரம் - இறக்கியேற்றும் (களஞ்சிய) வியாபாரம்

இறக்கியேற்றும் (களஞ்சிய) வியாபாரத்திலிருந்து எழக்கூடிய, இலங்கை ஏற்றுமதியாளர் ஒருவரின் வர்த்தக அபாயத்தையும் அரசியல் அபாயத்தையும் காப்பீடுசெய்தல்.

விற்பனையாளரின் அபாயக் காப்புறுதிப்பத்திரம் - விற்பனையாளரின் அபாய எல்லாமடங்கிய சேவைக் காப்புறுதிப்பத்திரம்

வர்த்தக அபாயத்திலிருந்தும் அரசியல் அபாயத்திலிருந்தும் சேவைத்துறை ஏற்றுமதியாளர்களைப் பாதுகாப்பதற்கான ஒரு காப்புறுதி.

**விற்பனையாளரின் அபாயக் காப்புறுதிப்பத்திரம் - உள்நாட்டு கடன் காப்புறுதி**

காப்புறுதிப்பத்திரத்தை வைத்திருப்பவர், இலங்கையிலுள்ள அவரது வாங்குநர்களுக்கும் பண்டங்களை அனுப்புவதுடனும் சேவைகளை அளிப்பதுடனும் இணைந்த வர்த்தக அபாயத்திலிருந்து காப்புறுதிப் பத்திரதாரரைப் பாதுகாப்பதற்கான ஒரு காப்புறுதி.

**வங்கிகளுக்கு முனையப்படும் ஏற்றுமதிக் கடன் உத்தரவாதங்கள்**

ஏற்றுமதியாளர்களின் நீண்டகால தவணை தவறுகையும் கடனிறுவலுவிழப்பும் காரணமாக ஏற்றுமதியாளரினால் முற்பணங்கள் செலுத்தப்படாமை காரணமாக வங்கிகளினால் உறப்பட்ட நட்டங்களை வங்கிகளுக்கான கடன் உத்தரவாதங்கள் தணிக்கின்றன. வங்கிகளுக்கான எமது கடன் உத்தரவாதங்கள், இணையுறுக்களையும் பெருந்தொகைகளுக்கான வைப்புக்களையும் இடுவதற்கான அவசியத்தை அகற்றுவதன்மூலம் ஏற்றுமதியாளர்களின் நிதிசார் தேவைப்பாடுகளுக்கு வசதியளிக்கின்றன. ஏற்றுதிமதியாளர்களின் கடனிறுவலுவிழப்பினால் அல்லது அவர்களின்பாலான நீண்டகால தவணை தவறுகையினால் விளைவிக்கப்பட்ட, வங்கிகளினால் உறப்பட்ட நட்டங்களின் 66.66% சதவீதத்திலிருந்து 85% சதவீதம் வரையான அளவை மீளளிப்பதற்கு SLECIC பொறுப்பேற்கின்றது.

வங்கிகளுக்கு முனையப்பட்ட ஏற்றுமதிக் கடன் உத்தரவாதங்களின் வகைகள் பின்வருமாறாகும்:-

**கப்பலேற்றுகைக்கு முன்னரான கடன் உத்தரவாதங்கள் (தனியாள்)**

தனிப்பட்ட எதிரிணையாளர் அபாயத்தை ரூபாய்களிலும் ஏனைய வெளிநாட்டுப் புழக்க நாணயங்களிலும் 66.66% சதவீதம் வரை காப்பீடுசெய்ய முடியும். மூலப்பொருள்களைக் கொள்வனவுசெய்தல், உற்பத்திசெய்தல் மற்றும் பண்டங்களை செய்முறைப்படுத்தலும் ஏற்றுமதிகளைப் பொதியிடுதலும் என்பவற்றுக்கான நாயணக் கடிதங்களுக்கும் உறுதிப்படுத்தப்பட்ட கட்டளைகளுக்கும் எதிராக ஏற்றுமதியாளர்களுக்கு கப்பலேற்றுகைக்கு முன்னரான வசதிகளை வழங்குவதற்கு இவ்வுத்தரவாதங்கள் நிதி நிறுவனங்களுக்கு வசதியளிக்கின்றன.

**கப்பலேற்றுகைக்குப் பின்னரான கடன் உத்தரவாதங்கள் (தனியாள்)**

இவ்வுத்தரவாதங்கள் வர்த்தக வங்கிகளுக்கு முனையப்படுகின்றன. ஏற்றுமதிப் பட்டியல்களின் கொள்வனவு, அவை பற்றிய பேச்சுவார்த்தை அல்லது அவற்றின் கழிப்பனவு என்ற வகையாகக் காப்பலேற்றுகைக்குப் பின்னரான கட்டத்தில் அவற்றின் தொழிற்பாட்டு மூலதனத் தேவைப்பாடுகளை ஈடுசெய்வதற்கென நிதி பெறுவதற்கு வங்கிகளை அணுக முடியும் என்பதை இவ்வுத்தரவாதங்கள் உறுதிப்படுத்துகின்றன.

**முழுமொத்த விற்பனைப் புரள்வு – கப்பலேற்றுகைக்கு முன்னரான/ பின்னரான கடன் உத்தரவாதங்கள்**

உயர் காப்பீட்டிலும் குறைவான கட்டுப்பண வீதத்திலும் ஏற்றுமதியாளருக்கு அல்லது நேரடியற்ற ஏற்றுமதியாளருக்கு கப்பலேற்றுகைக்கு முன்னரான/ பின்னரான முற்பணங்களாக வழங்கப்பட்ட

முழுக் கடன் துறையையும் காப்பீடுசெய்வதற்கு இவ்வுத்தரவாதங்கள் வங்கிகளுக்கு வசதியளிக்கின்றன.

**ஏற்றுமதி உற்பத்திக் கடன் உத்தரவாதங்கள்**

இணையுறுப்புக்கள் மீது பெருமளவு அழுத்தமின்றி ஏற்றுமதியாளர்களுக்கு பண்டங்களையும் சேவைகளையும் உற்பத்திசெய்வதற்கு தயாரிப்பாளருக்குத் தொழிற்படு மூலதனத்துக்கு நிதியளிப்பதற்கு இத்திட்டம் நிதி நிறுவனங்களுக்கு வசதியளிக்கிறது.

**ஏற்றுமதிச் செயலாற்றுகை உத்தரவாதங்கள்**

இது, இலங்கையிலிருந்து பண்டங்களையும் சேவைகளையும் ஏற்றுமதிசெய்வதற்கு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை முறையாக நிறைவேற்றுவதற்கு உத்தரவாதமளித்து கடல்கடந்த வாங்குநர்களுக்கு அல்லது அரசாங்க அதிகாரிகளுக்கு வர்த்தக வங்கிகளின் வாடிக்கையாளர்கள் சார்பில் அவர்கள் வழங்குகின்ற உத்தரவாதங்களுக்கும் முறிகளுக்கும் எதிராக அவற்றுக்கு வழங்கப்பட்ட எதிர் உத்தரவாதமொன்றாக உள்ளது. நிர்மாண வேலையினூடாக அடிமட்ட நிறைவேற்ற ஏற்றுமதி ஒப்பந்தங்களையும் பண்டங்களையும் சேவைகளையும் ஏற்றுமதிசெய்தலையும் இத்துறைகள் உள்ளடக்குகின்றன.

**கப்பற்பொருள் அனுப்புநர்களின் முறையான செயல்நிறைவேற்றுகையைக் காப்பீடுசெய்கின்ற ஏற்றுமதிச் செயல்நிறைவேற்றுகைக் கடன் உத்தரவாதம்**

ஒரு கப்பற்பொருள் அனுப்புநருக்குக் கடன் வசதிகளை அளிக்கின்ற வானூர்திச் சேவைக்கு வங்கி உத்தரவாதத்தை வங்கியானது வழங்குகின்றமைக்குப் பிரதிபயனாக, இவ்வுத்தரவாதம் வங்கியொன்றுக்கு வழங்கப்பட்ட எதிர் உத்தரவாதமாகும்.

**ATA கார்னெட் முறைமையைக் காப்பீடுசெய்கின்ற ஏற்றுமதிச் செயல்நிறைவேற்றுகை உத்தரவாதங்கள்**

சர்வதேச வர்த்தகப் பணிமனை (ICC) - இலங்கை என்பதிலிருந்து ATA கார்னெட் ஆவணங்களை ஏற்றுமதியாளர்கள் பெறுவதற்கு இவ்வுத்தரவாதங்கள் ICC - இலங்கை ஏற்பதற்கு வழங்கப்படுகின்றன. ATA கார்னெட் என்பது, குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு, குறித்த நோக்கத்திற்காக, வெளிநாட்டுப் பண்டங்களின் தீர்வையற்ற தற்காலிக இறக்குமதியை அனுமதிக்கின்ற சர்வதேச சுங்க ஆவணமாகும்.

**"APARA" தொழிலுக்காக வெளிநாடு செல்லும் இலங்கையர்களுக்கு பயணச்செலவு முற்பணங்களைக் காப்பீடுசெய்கின்ற முழுமொத்த விற்பனைப் புரள்வு வங்கி உத்தரவாதம்**

தொழிலுக்காக வெளிநாடு செல்லும் இலங்கையருக்கு வழங்கப்பட்ட புறப்படுவதற்கு முன்னரான முழுக் கடன்களின் மீது வங்கிகளுக்கான காப்பீட்டை இவ்வுத்தரவாதத் திட்டம் வழங்குகிறது.

## பிற சேவைகள்

**BiZinfo – கடன் மற்றும் நிதிசார் தகவல்கள்**

இத்திட்டம், வங்கித் தொழிற்றுறைக்கு இலங்கை ஏற்றுமதியாளர்களதும் இறக்குமதியாளர்களதும் கடல்கடந்த வாடிக்கையாளர்கள் பற்றிய கடன் மற்றும் நிலைவர அறிக்கைகளை வழங்குகிறது. SLECIC, உலகம் பூராவுமுள்ள முகவர் வலையமைப்பிலிருந்து கடன் மற்றும் நிலைவர அறிக்கைகளின் வழங்குநராகப் பணியாற்றுகிறது.

# ஏற்றுமதிக் கடன் காப்புறுதி

## SLECIC காப்பீடு

தற்போது, இலங்கை ஏற்றுமதியாளர்களை ஆதரிப்பதற்கு மத்திய கிழக்கு பிராந்தியத்திலான திட்டவட்டமின்மைகளைப் பொருட்படுத்தாது, அந்நாடுகள் உள்ளிட்ட 162 நாடுகளின் அரசியல் ஆபத்து 'விற்பனையாளரின் ஆபத்துக் காப்புறுதிப்பத்திரத்தின்' கீழ் SLECIC இனால் காப்பீடு செய்யப்படுகிறது.

2020 ஆம் ஆண்டளவில் 8 பிராந்தியங்களின் காப்பீட்டுப் பரம்பல் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| பிராந்தியம் | நாடுகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஆபிரிக்கா | 39 |
| ஆசியா | 25 |
| கிழக்கு ஐரோப்பா | 25 |
| மேற்கு ஐரோப்பா | 23 |
| மத்திய அமெரிக்கா | 19 |
| மத்திய கிழக்கு | 14 |
| வட அமெரிக்கா | 12 |
| பசுபிக் | 5 |
| மொத்தம் | 162 |




மேற்படி உருவரையை நோக்குவதன் மூலம், குறிப்பாக உயர் ஆபத்துள்ள ஆபிரிக்க, மத்திய கிழக்கு பிராந்தியத்தில் SLECIC க்கு சிறந்ததொரு காப்பீடொன்று இருப்பதாகத் தோன்றுகிறது. எம்மால் ஆபிரிக்க பிராந்தியத்தின் 39 நாடுகள், ஆசியாவின் 25 நாடுகள், கிழக்கு ஐரோப்பாவின் 24 நாடுகள், மத்திய கிழக்கின் 13 நாடுகள் காப்பீடு செய்யப்படுகின்றது. உயர்ந்த பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு நம்பிக்கையுடன் ஆபத்தான சந்தையில் பிரவேசிக்க விரும்பும் இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு இதனை வாய்ப்பான ஒரு சின்னமாகக் கருத முடியும்.

## காப்புறுதிசெய்யப்பட்ட தொழில்

2020 முதலரைப் பாகத்தில் கொவிட்-19 பெருந்தொற்றுடன் ஏற்பட்ட தொழில் போட்டிநிலை காரணமாக உருவான நீடித்திருக்கும் திட்டவட்டமின்மைகள் உலகளாவிய கேள்விக்கும் ஏற்றுமதி வளர்ச்சிக்கும், குறிப்பாக வர்த்தகப் பண்ட ஏற்றுமதிக்கும் பாதிப்புச் செலுத்தியுள்ளது. சவாலான சந்தைச் சூழமைவில், கூட்டுத்தாபனம் 2020 ஜனவரி முதல் டிசம்பர் வரையான காலத்திற்கு 37.19 பில்லியன் ரூபா காப்புறுதி வியாபாரமொன்று அறிக்கையிடப்பட்டதுடன், அது முன்னைய ஆண்டை விட 1,400 ரூபா (அல்லது 3.96%) அதிகரிப்பாகும்.

2020 ஜனவரி முதல் டிசம்பர் வரையான காலத்தில் SLECIC இன் மாதாந்த காப்புறுதி வியாபாரத்தை பின்வரும் உருவரை காட்டுகிறது.

| காப்புறுதிசெய்யப்பட்ட வியாபாரம் (ரூ.மி.) | |
|---|---|
| ஆண்டு | மொத்தம் |
| 2019 | 35,740.58 |
| 2020 | 37,189.91 |






**உயர்மட்ட 5 சந்தைகள்**

| காப்புறுதிசெய்ப்பட்ட வியாபாரம் உயர்ந்த மட்டத்திலுள்ள 5 சந்தைகள் | | | |
|---|---|---|---|
| | நாடு | 2020 | % |
| 1 | ஐக்கிய அமெரிக்கா | 4,845.38 மி.ரூ. | 13.5% |
| 2 | சீனா | 4,641.50 மி.ரூ. | 13.1% |
| 3 | ஐக்கிய இராச்சியம் | 2,402.21 மி.ரூ. | 6.8% |
| 4 | பிரேசில் | 1,893.55 மி.ரூ. | 5.3% |
| 5 | பிரான்ஸ் | 1,876.70 மி.ரூ. | 5.3% |
| 6 | பிற | 21,497.39 மி.ரூ. | 56.0% |
| | மொத்தம் | 37,156.73 மி.ரூ. | 100.0% |




மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் முழுதுமளாவிய காப்புறுதித் தொழிலில் நூற்றுக்கு 13.5 சதவீத பங்குரிமையுள்ள ஐக்கிய அமெரிக்க குடியரசு கூட்டுத்தாபனத்தின் மிகப் பெரிய காப்புறுதிச் சந்தையாக தொடர்ந்தும் காணப்படுவதுடன், 2019 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 16 சதவீத எதிர்க் கணிய வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. இந்த மறைப் பெறுமான வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்த உற்பத்திகளிடையே உலர்த்திய தேங்காய், தேய்காய் எண்ணெய், கைத்தொழில் பிரஷ், இறப்பர் உரொட்டி, றயர், இறப்பர் கையுறை என்பன உள்ளடங்கும். வோல் ரைல், முனைப்படுத்திய காபன், தும்பு நார், தும்பு மெத்தை, செரமிக் பாண்டங்கள், போசிலின் உருவச்சிலைகள் காப்புறுதிப் பத்திரதாரர்களுக்கு மீளாய்வு ஆண்டில் சந்தையை வாங்குநர்களிடமிருந்து கூடுதல் அளவான வியாபாரங்களை கைப்பற்றிக் கொள்ள முடிந்தது.

நூற்றுக்கு 13.1 சதவீத பங்குரிமையுள்ள சீனா இரண்டாவது மிகப் பெரிய காப்புறுதிச் சந்தையாக மாறியுள்ளதுடன், அது நூற்றுக்கு 13.1 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றைப் பதிவு செய்துள்ளது. வினைமிகு காபன், இறப்பர் கையுறைகள், பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஆகியன காப்புறுதிப் பத்திரதாரர்கள் இச்சந்தையில் உயர்ந்த கொள்திறன்களைப் பதிவுசெய்துள்ளனர்.

நூற்றுக்கு 6.8 சதவீத பங்குரிமையுள்ள ஐக்கிய இராச்சியம் மூன்றாவது மிகப் பெரிய காப்புறுதிச் சந்தையாக தொடர்ந்தும் காணப்படுவதுடன், கடந்த ஆண்டுடன் அதனை ஒப்பிடும்போது நூற்றுக்கு 2 சதவீத வளர்ச்சியொன்றைச் சுட்டிக் காட்டுகிறது.

நூற்றுக்கு 5.3 சதவீத பங்குரிமையுள்ள நான்காவது மிகப் பெரிய சந்தையான பிரேசில், மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் நூற்றுக்கு 26 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றைச் சுட்டிக்காட்டியுள்ளது. இறப்பர் கையுறைகள் மற்றும் வினைமிக்க காபன் காப்புறுதிப் பத்திரதாரர்கள் ஆண்டில் இந்த கோடிட்டுக்காட்டத்தக்க அதிகரிப்பிற்கு பங்களிப்புச் செய்தன.

நூற்றுக்கு 5.2 பங்குரிமையுள்ள பிரான்ஸ் ஐந்தாவது மிகப் பெரிய சந்தையாகும். கடந்த ஆண்டை விட நூற்றுக்கு 77.49 சதவீத மிக உயர்ந்த வளர்ச்சியொன்றை அது பதிவுசெய்துள்ளது. இறப்பர் கையுறைகளை ஏற்றுமதிசெய்யும் காப்புறுதிப் பத்திரதாரர்கள் இச்சந்தையின் வியாபார விருத்திக்குக் காரணமாக அமைந்தனர். 2020 ஆம் ஆண்டில்

காப்புறுதித் தொழில் மூலம் நூற்றுக்கு 44 சதவீதமும் உயர்மட்ட 5 சந்தைகளுக்கும் உரித்தாகின.

மேற்படி சந்தைகள் தவிர ஜப்பான், இத்தாலி, துருக்கி, அயர்லாந்து, தென் கொரியா, செக் குடியரசு, பெல்ஜியம், சுவீடன், ஹொங்கொங், கனடா, போலந்து, கட்டார், டென்மார்க், மலேசியா, கொலம்பியா, நோர்வே, ஜோர்தான், குரோசியா, பஹ்ரைன், தாய்வான், தாய்லாந்து, மொறோக்கோ, வியட்நாம் போன்ற நாடுகளும் எம்மால் அவதானிக்கப்பட்டதுடன் ஆண்டினுள் காப்புறுதி வியாபாரம் அதிகரித்துள்ளதாக அறிக்கையிடப்பட்டது. அதற்கு நிகராக இந்தியா, ரஷ்யா, நியுசிலாந்து, ஸ்பெயின், தென் ஆபிரிக்கா, ஐக்கிய அரபு அமீர் இராச்சியம், சிங்கப்பூர், சவூதி அரேபியா, இந்தோனேசியா, குவைட், ரியுனீசியா, இஸ்ரேல், பெரு, பின்லாந்து, பிலிப்பைன்ஸ், ஸ்லோவேனியா, சம்பியா, ஓமான், பல்கேரியா, மெக்சிக்கோ, ஈரான், சைப்ரஸ், லெபனான், கென்யா, மாலைதீவுகள், மியன்மார் போன்ற நாடுகளின் காப்புறுதி வியாபாரங்களில் குறிப்பிடத்தக்க குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

எமது ஆபத்துக்கள் மீள்காப்புறுதி வியாபாரத்தில், கூட்டுத்தாபனம் 162 நாடுகளுக்கு அரசியல் ஆபத்துக் காப்பீட்டை வழங்குவதுடன், அவை அவர்களின் தனிமுறை ஆபத்து தோற்றப்பாங்குகளின் அடிப்படையில் A1, A2, A3, A4, B, C, D என்றவாறு 7 வகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபனம் நிரந்தர அடிப்படையில் இயங்குகின்றதென்றும் எந்தவொரு சம்பவத்தினாலும் பாரதூரமான ஒரு சேதம் ஏற்படுவதில்லை என்பதையும் உறுதிப்படுத்துவதற்கு இயன்றளவுக்கு காலத்துடன் நாடுகளுக்கு ஆபத்துக்களை பரவலாக விரிவாக்குவது அத்தியாவசியமாகும்.

2015 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 2.21 சதவீதத்திற்கு ஒப்பீடாக 2020 ஆம் ஆண்டில் A1 வகுதி நாடுகள் காப்புறுதிசெய்யப்பட்ட வியாபாரத்தில் நூற்றுக்கு 4.75 சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்துள்ளன. அதற்கு இணையாக, A3 வகுதி நாடுகள் 2015 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 14.42 சதவீதத்திற்கு ஒப்பீடாக 2020 ஆம் ஆண்டில் காப்புறுதிசெய்யப்பட்ட வியாபாரத்தில் நூற்றுக்கு 19.97 சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்துள்ளன.




| நாடுகளின் வகையீட்டின் அடிப்படையில் காப்புறுதிசெய்யப்பட்ட வியாபாரம் - 2015 | | |
|---|---|---|
| வகையீடு | காப்புறுதிசெய்யப்பட்ட வியாபாரம் | % |
| A1 | 613.39 மி.ரூ. | 2.21% |
| A2 | 8,522.64 மி.ரூ. | 30.66% |
| A3 | 4,009.30 மி.ரூ. | 14.42% |
| A4 | 6,101.53 மி.ரூ. | 21.95% |
| B | 2,602.19 மி.ரூ. | 9.36% |
| C | 3,371.82 மி.ரூ. | 12.13% |
| D | 2,573.57 மி.ரூ. | 9.26% |
| | 27,794.44 மி.ரூ. | 100.00% |

அதேபோல் D வகுதி நாடுகள் 2015 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 9.26 சதவீதத்திற்கு ஒப்பீடாக 2020 ஆம் ஆண்டில் மொத்த காப்புறுதிசெய்யப்பட்ட வியாபாரத்தில் நூற்றுக்கு 0.77 சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்துள்ளன. அதற்கு இணையாக, C வகுதி நாடுகள் 2015 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 12.13 சதவீதத்திற்கு ஒப்பீடாக 2020 ஆம் ஆண்டில் மொத்த காப்புறுதியில் நூற்றுக்கு 11.79 சதவீத்ததிற்கு பங்களிப்புச் செய்துள்ளன.

## கடன் வரம்புகள்

வாங்குநர்களையும் நாடுகளையும் மீள் காப்புறுதிசெய்வதற்காக விற்பனையாளரின் ஆபத்துக் காப்புறுதிப் பத்திரங்களை விநியோகிப்பதன் மூலமும் கடன் வழங்கப் பொருத்தமான வாங்குநர்களுக்கு கடன் வரம்புகளை விநியோகிப்பதன் மூலம் கூட்டுத்தாபனம் ஏற்றுமதியாளர்களுக்கு தொடர்ந்தும் உதவிகளை வழங்கியுள்ளது. வாங்குநரின் தகவல்களைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் அடிப்படையில் மீள்காப்புறுதித் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.




பகுப்பாய்வின் முக்கிய நோக்கம், வெளிநாட்டு வாங்குநர்கள் பற்றிய மீள்காப்புறுதித் தீர்மானங்களை எளிதுபடுத்துவதாகும். ஆபத்துக்களின் உணர்வுநிலையை அடிப்படையாகக கொண்டு வாங்குநரின் ஏற்புத்தன்மையை அடையாளம் காண்பதற்கும், வாங்குநருக்குள்ள ஆபத்தின் ஒப்பீட்டு மட்டத்தின் அடிப்படையில் தரப்படுத்தும்போதும் வாங்குநருக்கு எடுக்கக்கூடிய வெளிப்பாட்டைத் தீர்மானிப்பதற்கு பகுப்பாய்வு உதவியாக அமைதல் வேண்டும்.

அணுகுமுறைக்கு (சீரான) முரண்படாநிலையையைக் கொண்டுவருவதற்கும் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் விடயத்தை அடிப்படையாகக் கொண்டதாக அமைவதற்கும் வாங்குநர்களின் முழுதுமளாவிய கடன் எல்லையைக் குறித்துரைப்பதற்காக புள்ளிவழங்கும் அட்டையின் மாதிரியொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. காப்புறுதிசெய்யப்பட்ட தரப்பு போன்றே விசேடமான வர்த்தகப் பண்டங்கள் ஆகிய இரண்டிலும் ஆபத்து மட்டத்தை அடையாளம் காண்பதற்கு மீள்காப்புறுதி நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது பரந்தளவில் தகவல் மூலங்கள் பயன்படுத்தப்படுகின்றன. காப்புறுதியாளரொருவர் காப்புறுதிசெய்வதற்கு அர்ப்பணித்துள்ள தொகை கடன் எல்லைகள் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது.

கொரோனா பெருந்தொற்றும் அதன் கெடுவிளைவுகளும் பொருளாதார மற்றும் வர்த்தக செயற்பாடுகளில் உலகளாவிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. உற்பத்திகள் நின்றுபோதல், வழங்கற் சங்கிலி தடைப்படல், தொழிற்சாலைகள் மூடப்படல், சந்தைகள் சரிவடைதல், புதிய முதலீடுகள் ஒத்திவைக்கப்படுதல் என்பவற்றுடன் உலகம் பூராவும் ஏற்பட்ட பொருளாதார ரீதியான பாதிப்பு அளப்பரியதாகும். உறுதிப்பாடான தொழில்முயற்சி வடிவங்கள்கொண்ட முறிவடையாத கம்பனிகளினால் கொரோனா பெருந்தொற்றுக்கு மத்தியில் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

காப்புறுப் பத்திரதாரர்களுக்கு இற்றைவரைப்படுத்திய தகவல்களை வழங்குவதன் மூலம், ஏற்றுமதியாளர்களுக்கு சிறந்த வியாபாரத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு SLECIC உதவுகின்றது. அதன்மூலம் நட்டங்களைக் குறைத்துக்கொள்ளக்கூடியதாக இருக்கும். பயனுறுதிவாய்ந்த கடன் கட்டுப்பாடு, நட்டங்களைக் குறைத்தல், வாடிக்கையாளர்களின் கொடுப்பனவுகளை செலுத்தத் தவறுகை ஆகியவற்றின் நடத்தை முறைகள் பற்றி ஏற்றுமதியாளர் சமூகத்தை அறிவுறுத்தல், அவர்களின் ஆபத்துக்களை தவிர்ப்பதற்காக காப்புறுதிப் பத்திரமொன்றை வழங்குதல் SLECIC என்பவற்றின் மீது தொடர்ந்தும் நம்பிக்கை வைத்துள்ளது. சரியான அறிவை வழங்குவதன் மூலம், கொடுப்பனவுகளை மேற்கொள்வதைத் தவறவிடும் வாடிக்கையாளர்களுடன் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும்போது ஏற்றுமதியாளர்கள் மிகச் சிறந்த நிலையை அடைவர்.

சமநிலையான ஆபத்துக்களின் பட்டியலொன்றை உறுதிசெய்வதற்கு கூட்டுத்தாபனத்தின் மீள்காப்புறுதி உபாயமுறை பல்வகைமையொன்றை எதிர்பார்க்கிறது. அதேபோல், அதன்மூலம் விளைபயனின் மாறி குறைக்கப்படுமென நம்பப்படுகிறது. அவர்களின் அந்தஸ்துப் படியும் அனுபவப் படியும் வெளியிடப்படக்கூடிய வரம்புகளைக் குறித்துரைப்பதற்கு மீள்காப்புறுதி அதிகாரிகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், பல்வேறு நாடுகளின் பாதகமான அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகளும் வாடிக்கையாளர்களின் வங்குரோத்துநிலையும் வேறு விடயங்களும் காரணமாக பாரிய கடன் எல்லைகளுக்கான சில விண்ணப்பங்களை நிராகரிக்க வேண்டியிருந்தது.

2019 ஆம் ஆண்டில் 4.93 பில்லியன் ரூபாவுக்கு ஒப்பீடாக, 2020 ஆம் ஆண்டில் 5.3 பில்லியன் ரூபா பெறுதியான வாடிக்கையாளர்களின் 368 புதிய கடன் எல்லைகள் (BLL) விநியோகிக்கப்பட்டது.

| | 2019 (ரூ.பி.) | 2020 (ரூ.பி.) |
|---|---|---|
| கடன் எல்லைகள் | 4.93 | 5.3 |




ஏற்றுமதிக் கடன் உத்தரவாதங்கள்

SLECIC இன் ஏற்றுமதிக் கடன் உத்தரவாதங்கள் ஏற்றுமதியாளர்களுக்கு உண்மையாகவே நிதிவழங்கலுடன் சம்பந்தப்பட்டதல்ல. அது ஏற்றுமதியாளர்களுக்கு பணம் ஈடுபடுத்துவதன் விளைவாக ஏற்படக்கூடிய நட்டங்களிலிருந்து ஏற்றுமதி நிதி வங்கிகளைப் பாதுகாப்பதற்கானதாகும். நிதி நிறுவனங்களுக்குத் தேவைப்படும் உதவியை வழங்குவதன் மூலம் ஏற்றுமதிப் பிரிவுக்கு நிதி ஈடுபடுத்துவதில் மிகவும் முனைப்பாக பங்குபற்றுவதற்கு அவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

**ATA** கார்னெட் முறைமை காப்பீடுசெய்யும் நேரடி ஏற்றுமதிச் செயலாற்றுகை உத்தரவாதங்கள்

ATA 'கார்னெட்' என்பது வர்த்தக சந்தைகள், கண்காட்சிகள் மற்றும் வர்த்தக ஊக்குவிப்பு நோக்கங்களுக்காக பயனுறுதிவாய்ந்த விதத்தில் பயன்படுத்துவதற்கு தீர்வை வரிகளும்

வரிகளும் இன்றி குறித்துரைக்கப்பட்ட ஒரு காலத்திற்கு பண்டங்களையும் வர்த்தக மாதிரிகளையும் தற்காலிகமாக இறக்குமதிசெய்வதற்கு அனுமதியளிக்கும் ஒரு சர்வதேச சுங்க ஆவணமாகும்.

ATA 'கார்னெட்' சுங்க ஆவணத்தினால் வணிக மாதிரிகள், தொழில் உபகரணங்கள், பண்டங்களை முன்வைப்பதற்காக அல்லது வர்த்தகக் கண்காட்சிகள், நோக்கு, கண்காட்சிகள் போன்றவற்றுக்குப் பயன்படுத்துவதற்காக காப்பீடு செய்யப்படுகிறது. ஏற்றுமதியாளர் ஒருவரினால் வர்த்தகக் கண்காட்சிகளுக்கு வணிக மாதிரிகளுடனும் கண்காட்சிப் பொருள்களுடனும் நாட்டெல்லையைக் கடந்துசெல்வதற்கு எதிர்பார்ப்பதாயின், ATA 'காட்னெட்' இனால் சுங்கத் தீர்ப்பனவுக்குச் செலவாகும் அவரது காலத்தை மீதப்படுத்தி பயணம் துரிதமாக்கப்படுகிறது.

**ATA** கார்னெட் பயனர்

ATA கார்னெட் பயனர், இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவராகவோ கம்பனியொன்றாகவோ இருக்கலாம்.

- சுற்றுலாத் தொழில்முயற்சிகள்/விற்பனவு நிறைவேற்றுநர்கள்.

- தொழில்நுட்பவலர்கள்

- வர்த்தகக் கண்காட்சியாளர்களும் திரைப்படக் குழுக்களும், அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள், கலைஞர்கள், கட்டிடக் கலைஞர்கள், பொறியியலாளர்கள், கல்வியியலாளர்கள், பொழுதுபோக்கு ஏற்பாட்டாளர்கள் போன்ற தொழில்வாண்மையினரும் குழுக்களும்.

- வேறு ஆளெவரும் 'கார்னெட்' ஐப் பயன்படுத்துவாராயின், அவருக்கு அதிகாரமளித்து கார்னெட் வைத்திருப்பவரினால் விநியோகிக்கப்பட்ட கடிதமொன்றைக் கொண்டு செல்ல வேண்டும்.

ஏற்றுமதியாளர்களுக்கு, குறிப்பாக இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண ஏற்றுமதியாளர்களுக்கு மேலதிக பிணையமொன்று இன்றி ATA 'கார்னெட்' சுங்க ஆவணங்களைப் பெறுவதற்கு இலங்கையில் சர்வதேச வணிக சபைக்கு (ICC-SL) நேரடி ஏற்றுமதிச் செயலாற்றுகை உத்தரவாதங்கள் தொடர்ச்சியாக விநியோகிக்கப்படுகின்றன. இச்சுங்க ஆவணம் ஏற்றுமதியாளர்களுக்கு வெளிநாடுகளில் வர்த்தகக் கண்காட்சிகளிலும் கண்காட்சிகளிலும் கலந்துகொள்வதற்கும் இலாபத்தை உயர்த்திக்கொள்வதற்கும் ஏற்றுமதி ஒப்பந்தங்களை வென்றெடுப்பதற்கான ஆற்றலை வழங்கும்.

மீளாய்வு காலப்பகுதியில், கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக ஏராளமான ஏற்றுமதியாளர்களுக்கு சுற்றுலா மேற்கொள்ள முடியாதநிலை ஏற்பட்டமையால், தங்க ஆபரண ஏற்றுமதியாளர்களுக்கு எந்தவொரு ATA 'கார்னெட்' ஆவணத்தையும் விநியோகிப்பதற்கு இலங்கை சர்வதேச வணிக சபை (ICC Sri Lanka) இயலுமை பெறவில்லை. ஆகையால், ICC Sri Lanka நிறுவனத்திற்கு எந்தவொரு நேரடி உத்தரவாதத்தையும் விநியோகிப்பதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாமலிருந்தது.

சேறல் (பயணச்) செலவு - APARA

இலங்கையின் அந்நியச் செலாவணி ஈட்டல்களில் குறிப்பிடத்தக்க ஒரு பகுதியினருக்கு தொழில் புரிவதற்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்கள் பங்களிப்புச்செய்வதால், சேவை ஏற்றுமதி மிக முக்கிய ஒரு துறையாகும். புலம்பெயர்ந்த ஊழியர்களின் வான் பயணச்சீட்டுக்களுக்கான செலவை மாத்திரம் உள்ளடங்கும் விதத்தில் SLECIC இனால் 1992 மே மாதத்தில் இவ்வங்கி உத்தரவாதத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், சான்றுறுதிப்படுத்திய நட்டத்தில் நூற்றுக்கு 60 சதவீத காப்பீடொன்றுடன்கூடியதாக அமுல்படுத்தப்பட்டது. இத்திட்டம் காலத்திற்குக் காலம் மாற்றப்பட்டப்பட்டதுடன், தற்போது சான்றுறுதிப்படுத்திய நட்டத்தில் நூற்றுக்கு 85 சதவீத உயர் காப்பீடொன்றுடன்கூடிய முழுமையான புறப்பட்டுச் செல்லல் முன் கடன் காப்பீட்டைச் செய்வதுடன், ஆகக்குறைந்த ஆவணங்களுடன் முழுமையான புரள்வுக் கடன் உத்தரவாதத் திட்டமொன்றாக அமுல்படுத்தப்படும் அதேவேளை இப்பிரிவுக்கு வசதியளிக்கும்போது வங்கிக்குள்ள ஆபத்தைக் குறைக்கின்றது.

நாட்டின் உயர் அவாவுள்ள மற்றும் முன்னோக்குள்ள பிரஜைகள் வெளிநாடுகளில் தொழில் பெற்றுக்கொள்வதற்கும் வறுமைநிலையிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்வதற்கும் இத்திட்டம் அவர்களை இயலச்செய்கிறது. இந்த இலட்சியத்தைக்கொண்ட இலங்கையர்கள் தமது வாழ்க்கைத் தரத்தைச் சீர்படுத்தி, அனுப்புதொகைகளை அதிகரிப்பதன்மூலமும் செலாவணிப் பண ஒதுக்குகளை அதிகரிப்பதன் மூலம் பொருளாதார நலனைப் பாதுகாக்குமுகமாக உதவுவது SLECIC க்கு மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது.

ஆரம்பம் முதல் 2020 இறுதிப் பகுதி வரை நிதி நிறுவனங்களிடமிருந்து 2,752.36 மில்லியன் ரூபா பெறுமதிக்கான வங்கிக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு SLECIC 23,916 விண்ணப்பகாரர்களுக்கு SLECIC இனால் உதவியளிக்கப்பட்டுள்ளதுடன், நாட்டின் எல்லாப் பாகங்களிலுமிருந்தான ஏராளமான இலங்கையர்கள் தொழில்நாடி வெளிநாடு செல்வதற்கு வசதிகள் அளிக்கப்பட்டுள்ளது.

உலகின் கணிசமான பகுதிகளில் அனைத்துத் திறன் மட்டங்களுக்கும் உரிய பலதரப்பட்ட தொழில்களில் வேலைவாய்ப்புகள் நிலவுகின்றன. கூட்டுத்தாபனம் தென்கிழக்காசியாவில் பரவலாக காப்பீடுகளை மேற்கொண்டுள்ளது. 2,752.36 மில்லியன் ரூபா வங்கிக் கடனைப் பெற்றுக்கொள்வதற்கு கூட்டுத்தாபனம் 23,916 APARA கடன் உத்தரவாதங்களை விநியோகித்துள்ளது. ஆரம்பம் முதல் இன்று வரை 586 விண்ணப்பகாரர்கள் நிதி நிறுவனங்களுக்கு வங்கிக் கடனை செலுத்தத் தவறியுள்ளனர்.

| ஆண்டு | விநியோகித்தவற்றின் எண்ணிக்கை | பெறுமதி (ரூ) |
|---|---|---|
| 1992 - 2005 | 7,115 | 374.46 |
| 2006 - 2020 | 16,801 | 2,377.90 |
| மொத்தம் | 23,916 | 2,752.36 |

மீளாய்வு ஆண்டினுள், நிதி நிறுவனங்களிலிருந்து 7.8 மில்லியன் ரூபா வங்கிக் கடனைப் பெற்றுக்கொள்வதற்கு 27 விண்ணப்பகாரர்களுக்கு மாத்திரம் உதவுவதற்கு கூட்டுத்தாபனம் இயலுமை பெற்றது.

## சர்வதேச தொடர்புகள்

வெளிநிலையின் மீது கூடுதல் கவனம் செலுத்தி, சர்வதேச கடன் மற்றும் முதலீட்டுக் காப்புறுதியாளர்களின் சர்வதேச சங்கம் (பர்னே சங்கம்) மற்றும் பிராந்திய ஒத்துழைப்புக் குழுமம் (RCG) போன்ற முக்கிய வெளிநாட்டுக் கடன் காப்புறுதிக் கூட்டங்களிலும் கருத்தரங்குகளிலும் கலந்துகொண்டு கூட்டுத்தாபனம் 2020 ஆம் ஆண்டில் சர்வதேசமயத்திற்கான தனது அர்ப்பணிப்பை பேணிச் சென்றது. தமது இயங்குநிலைக் கைத்தொழிலை இற்றைவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்வதற்கும் ஏனைய கடன் காப்புறுதியாளர்களுடன் தகவல் மற்றும் அனுபவங்களை தொடர்ந்தும் பரிமாறிக்கொள்வதற்கும் இவற்றில் பங்கேற்பதன் மூலம் கூட்டுத்தாபனம் இயலுமை பெற்றது.

### கடன் மற்றும் முதலீட்டுக் காப்புறுதியாளர்களின் சர்வதேச சங்கம் **(Burne Union)**

கூட்டுத்தாபனமானது ஏற்றுமதிக் கடன் மற்றும் முதலீட்டுக் காப்புறுதித் தொழிலுக்கான தலையாய சர்வதேச தொடர்புள்ள சர்வதேச கடன் மற்றும் முதலீட்டுக் காப்புறுதியாளர்களின் சங்கத்தின் (பர்னே சங்கம்) ஓர் உறுப்பினராகும். உலகளாவிய அபாய முகாமைத் தீர்வுகளை முனைகின்ற தனியார் கம்பனிகள், தேசிய ஏற்றுமதிகளுக்கும் வெளிப்புற முதலீடுகளுக்கும் ஆதரவளிப்பதனை நோக்காகக்கொண்ட அரசினால் ஆதரவளிக்கப்படும் ஏற்றுமதிக் கடன் முகவராண்மைகள் என்ற இருவகையான நிறுவனங்களும் இச்சங்கத்தின் உறுப்பினர்களாவர்.

நாட்டின் ஏற்றுமதிகளை விருத்திசெய்வதற்கும் ஊக்குவிப்பதற்குமான பணிப்பாணையுடன் இலங்கையில் தொழிற்படுகின்ற அரசாங்கத்தின் ஏக ஏற்றுமதிக் கடன் முகராண்மையாகவுள்ள (ECA) இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (SLECIC), ஏற்றுமதிக் கடன் காப்புறுதி மற்றும் முதலீட்டில் அண்மைக்கால அபிவிருத்திகளுக்கும் மிகச் சிறந்த செயல்முறைகளுக்கான அணுகலைப் பெறும் நோக்குடன், 1983 ஆம் ஆண்டில் பர்னே சங்கத்தின் பூரண உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டது.

கொவிட்-19 இன் முதலாவது அலை காரணமாக செயற்குழுக் கூட்டம் இரத்துச் செய்யப்பட்டதுடன், ஆண்டுப் பொதுக்கூட்டம் 2020 அக்டோபர் மாதம் 12-16 வரையான வாரத்துள் நிகழ்நிலையாக இடம்பெற்றது. SLECIC இன் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளரும் அவரோடு பொது முகாமையாளரும் பர்னே சங்கத்தில் பங்கேற்றதுடன், ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் நிகழ்நிலையாக பங்கேற்றனர்.

### பிராந்திய ஒத்துழைப்புக் குழுமம் **(RCG)**

பிராந்திய ஒத்துழைப்புக் குழுமம் (RCG), ஆசிய பிராந்தியத்தில் உறுப்பினர்களிடையே சர்வதேச உறவுகளை ஊக்குவிப்பதற்காக 1991 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பர்னே சங்கத்தின் 12 உறுப்பாண்மையின் ஒரு குழுமமாகும்.

பர்னே சங்கத்தின் பிராந்திய ஒத்துழைப்புக் குழுமமானது (RCG) அவுஸ்திரேலியா, இந்தியா, சீனா, இந்தோனேசியா, ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, தென் கொரியா, தாய்வான், தாய்லாந்து, ஹொங்கொங் ஆகிய நாடுகளிலிருந்தான ஆசிய ஏற்றுமதிக் கடன் முகவராண்மைகளைக் கொண்டுள்ளது.

ஆசிய பிராந்திய உறுப்பினர்களிடையே சர்வதேச தொடர்புகளை விருத்திசெய்வதற்காக SLECIC உள்ளிட்ட ஆரம்ப ஐந்து உறுப்பினர்களுடன் 1986 ஆம் ஆண்டில் RCG நிறுவப்பட்டது. HKEC, ECGC, MECIB, ECICS ஆகியன அதன் ஏனைய உறுப்பினர்களாவதுடன், அதன் கன்னிக் கூட்டம் 1986 பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி சிங்கப்பூரில் நடைபெற்றது.

பிராந்திய அங்கத்தவர்களின் மிகவும் மூலோபாய ரீதியான விடயங்கள் மீது கவனம் செலுத்துவதற்கும் குழுவின் ஊடாகவே தீர்வு காண்பதற்கும் பர்னே சங்கத்தின் பங்கேற்புடன் தலைவர்களின் ஆண்டுப் பொதுக் கூட்டமொன்று நடாத்தப்பட்டது. உறுப்பினர்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்படுவதனால், இக் கூட்டவை உறுப்பினர்களுக்கு மிகவும் பயனுடையதாக இருந்தது. இதுவரை இலங்கை உள்ளிட்ட பல்வேறு உறுப்பு நாடுகளின் வருடாந்த தலைவர்களின் 12 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

இவ்வாண்டின் நிகழ்நிலை RCG கூட்டம் 2020 டிசம்பர் மாதம் 1 ஆம் திகதி Thai Exim வங்கியினால் ஒழுங்குசெய்யப்பட்டதுடன், தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளரும் பொது முகாமையாளரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## ஆசிய கடன் குறைநிரப்பு நிறுவனங்களின் நேசக் கூட்டமைவு **(ACSIC)**

ஆசிய கடன் குறைநிரப்பு நிறுவனங்களின் நேசக் கூட்டமைவு **(ACSIC)** 1987 ஆம் ஆண்டு முதல் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளுக்கான (SMEs) மிகவும் பாரிய ஆசிய கூட்டாண்மையாகும். தற்போது இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட 11 நாடுகளின் 16 உறுப்புரிமை நிறுவனங்கள் அதில் அங்கம் வகிக்கின்றன. SLECIC இனால் 2016 ஆம் ஆண்டில் இச்சங்கத்தின் உறுப்புரிமை பெற்றுக்கொள்ளப்பட்டது.

ACSIC நேசக் கூட்டமைவின் நோக்கம், ஆசியாவின் சிறு தொழில்முயற்சிக் கடன் குறைநிரப்பு நிறுவனங்களுக்கு இடையில் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளல், கலந்தாலோசித்தல், ஆளணியினரைப் பரிமாறிக்கொள்ளல் என்பவற்றின் ஊடாக ஆசிய பிராந்தியத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளுக்கு கடன் குறைநிரப்பு நிறுவனங்களின் நேசக் கூட்டமைவின் சிறப்பான அபிவிருத்தியை ஊக்குவிப்பதாகும். கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக ஜப்பான் பிரதான பேராளர் சந்திப்பை இரத்துச் செய்தது.

## சந்தைப்படுத்தலும் விழிப்புணர்வூட்டலும்

கூட்டுத்தாபனம், அதன் முக்கிய வியாபாரமான ஏற்றுமதிக் கடன் ஆபத்துக் காப்புறுதி மீது கவனம் செலுத்துவதற்கு மேலதிகமாக, ஏற்றுமதி ஊக்குவிப்புக்கான நிறுவனங்கள், வர்த்தக சபைகள், சங்கங்களுடன் நெருங்கிய ஒருங்கிணைப்புடன் செயலாற்றுகின்றது. கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் முயற்சிகளின் ஓரங்கமாக, ஏற்றுமதியாளர்களினதும் வங்கியாளர்களினதும் பயன்பாட்டுக்காக காப்புறுதிக் கல்வி/விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்வதற்கு மேலதிகமாக, 2020 ஆம் ஆண்டின் முதல் 2 மாதங்களில் வாடிக்கையாளர்களை பிரத்தியேகமாக சந்தித்துள்ளது.

கொவிட்-19 பெருந்தொற்றின் விளைவாக இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு பாதிப்பொன்றை ஏற்படுத்தி உலகளாவிய அளவில் வியாபாரம் சீர்குலைந்துள்ளது. கொவிட்-19 பெருந்தொற்றுக்கு

இடையில் தமது வாடிக்கையாளர்களுக்கு உதவியளிப்பதற்கு கூட்டுத்தாபனம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

2020 மார்ச் மாத நடுப்பகுதி முதல் மே மாதம் இரண்டாம் வாரம் வரை நாடு முடக்கப்பட்டதைத் தொடர்ந்து பணியாட்குழு வீட்டிலிருந்து பணியாற்றுவதற்குப் பழக்கப்பட்டதுடன், எமது காப்புறுதிப் பத்திரதாரர்களுக்கு அவர்களின் ஏற்றுமதிகளை வசதிப்படுத்துவதற்கு புதிய கடன் எல்லைகளை விநியோகித்தல், மின்னஞ்சல் ஊடாக முன்னேற்றுதல் உட்பட அனைத்துத் தேவைகளுக்கும் சேவை வழங்கப்பட்டது. கப்பலேற்றுகைக் கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதை எளிதுபடுத்தி நியாயப்படுத்தப்பட்டுள்ளதுடன், காப்புறுதி கட்டுப்பணங்களை நேரடியாகவே வங்கிக்கு அனுப்பீடுசெய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், நாட்டை முடக்கும் காலப்பகுதியில் தாமதித்து முன்வைக்கப்பட்ட அனைத்துக் கூற்றுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

SLECIC இன் ஏற்றுமதிக் கடன் காப்புறுதி மற்றும் உத்தரவாத உற்பத்திகளின் நன்மைகள் குறித்த விடயங்களைத் தெளிவுபடுத்துவதற்கும் விபரிப்பதற்கும் எமது நிறைவேற்றுநர்களுக்கும் பெரும்பாலான ஏற்றுமதியாளர்களுக்கும் இடையில் தொடர் கலந்துரையாடல் சூம் தொழில்நுட்பம் ஊடாக நடாத்தப்பட்டது.

தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறைகள் ஒடுக்கப்பட்டுள்ளதுடன், வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்கும்போது முயற்சியாண்மை நடத்தைகளைத் தூண்டுவதற்கு உயர்மட்டத்திற்கு பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

எமது ஏற்றுமதி ஆதரவுச் சேவைகளை ஊக்குவித்தல், அவர்களின் செயற்பாடுகளுக்கு அனுசரணை வழங்குதல், உறுப்பினர்களுக்கு இடையில் எமது புகழுருவை ஊக்குவிப்பதற்காக வர்த்தக மற்றும் கைத்தொழில் சபைகளுடனும் ஏற்றுமதி ஊக்குவிப்பு நிறுவனங்களுடனும் நாம் நெருக்கமாக செயற்படுகின்றோம். எனினும், 2020 இறுதிக் கணக்குகளில் தேவையான அனுமதிகளுடன் அவ்வாறான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டமையால், NCE விருது விழா போன்ற சந்தர்ப்பங்கள் 2021 ஆம் ஆண்டு வரை ஒத்திவைக்கப்பட்டது.

## செலுத்தப்பட்ட உரிமைக்கோரிக்கைகள்

செலுத்தப்பட்ட உரிமைக்கோரிக்கைகள், எமது ஏற்றுமதியாளர்களுக்கு தமது ஏற்றுமதி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கு உதவியாக அமைந்ததுடன், அவ்வாறான ஏற்றுமதியாளர்களுக்கு செலுத்தப்பட்ட உரிமைக்கோரிக்கைகளை மீள்நிரப்பல்செய்வதற்கு வங்கிகள் தயார்நிலையில் இருந்தன. நட்டங்கள் ஏற்படல்களைப் பகுப்பாய்வுசெய்யும்போது, கடன் காப்புறுதியின் கீழ் செலுத்தப்பட்ட மொத்த உரிமைக் கோரிக்கைகளுக்கு நட்டம் ஏற்பட முக்கிய காரணம், காலங்கடந்த தவணை தவறுகைகள் என்பது தெளிவானது.

கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக மதிநுட்பம்வாய்ந்த ஒதுக்கு முகாமையொன்றை மேற்கொண்டுள்ளதுடன், அதன் நீண்டகால நிதி உறுதிப்பாட்டின் முக்கிய பிரதிப்பயனான அவ்வாறான கொள்கையொன்றுக்கு இயைபானதாகும். எதிர்பாராத ஆபத்துக்களினால் எழக்கூடிய கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் பல ஆண்டுகளாக அவசர ஒதுக்கொன்றைப் பேணிச் சென்றுள்ளது.

2019 ஆம் ஆண்டின் 87.73 மில்லியன் ரூபாவுக்கு ஒப்பீடாக ஆண்டுக்கான தேறிய உரிமைக்கோரிக்கைகள் 95.13 மில்லியன் ரூபா தேறிய உரிமைக்கோரிக்கைகளாக காணப்பட்டன.

தொடக்கத்திலிருந்து இந்நிதியாண்டு வரை, கூட்டுத்தாபனம் 1399 மில்லியன் ரூபா பெறுமதியான உரிமைக்கோரிக்கைகளைச் செலுத்தியுள்ளதுடன், வணிக ஆபத்தைத் தணிப்பதற்காக SLECIC இன் அர்ப்பணிப்பு அதன் மூலம் சுட்டிக்காட்டப்படுகிறது. எந்தவொரு மக்கள் நிதியையும் பயன்படுத்தாத நிலையில் உள்ளக ரீதியாக உருவான நிதியின் மூலம் இந்த உரிமைக்கோரிக்கைகள் செலுத்தப்பட்டன.

## கூட்டிணைக் கலாசாரம், பயிற்சி மற்றும் அபிவிருத்தி

மனிதவள பணியாட்குழுவின் அர்ப்பணிப்பும் தேர்ச்சியும் மக்களை ஆதாரமாகக்கொண்ட கூட்டிணைக் கலாசாரம், ஏற்றுமதியாளர் சமூகத்திற்கு சேவையாற்றும்போது கூட்டுத்தாபனத்தின் வெற்றிநிலைக்கு பங்களிப்புச் செய்யும். தமது வியாபார நோக்கங்களுக்கு உதவுவதற்கும் சந்தையின் புதிய செயல்முனைப்புகளுக்கும் மாற்றங்களுக்கும் பதிலளிப்பதற்கும் கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக வளங்களையும் முயற்சியையும் அர்ப்பணித்து உயர் தொழில்வாண்மை, உந்துகையுடனான ஓர் அணியை விருத்திசெய்து முன்னெடுத்துச் செல்கிறது.

முடிவுசெய்யுமிடத்தும் சேவையின் பண்புத்தரத்தை முன்னேற்றும் மார்க்கங்களுக்கு புதிய செயல்முனைப்புகளை விருத்திசெய்யுமிடத்தும் பணியாட்குழுவின் பங்களிப்புக்கு கூட்டுத்தாபனத்தின் கலாசாரம் ஊக்குவிப்பாக அமைகிறது. அவ்வாறான செயல்முனைப்புகளின் மூலம் ஒட்டுமொத்த கூட்டுத்தாபனத்தின் நலனுக்கான ஈடுபாடும் தனிப்பட்ட இடையீடும் ஏற்படுத்தப்படுகிறது.

எதிர்பார்க்கை மட்டத்திலான விளைதிறனுடனும் செயற்பாட்டுடனும்கூடியதாக கூட்டுத்தாபனத்தின் உரிய பணிக்கு எமது மக்களின் நலன்புரியும் திருப்தியும் நிச்சயமாக இன்றியமையாததாகும். ஆகையால், கூட்டுத்தாபனம் அவர்களின் கடமை வாழ்வுடன் மட்டுமன்றி இன்பப் பொழுதுபோக்கு/ ஓய்வு மீதும் உள்ளியல்பாக தொடர்புபட்டுள்ளது. ஆகையால், பணியாட்குழுவின் நலன்புரிச் செயற்பாடுகளுக்காக, பெரும்பாலும் நிதியுதவி அளிப்பதன்மூலம் உதவும் இப்பண்புக்கூறில் கூட்டுத்தாபனம் முன்னிலை வகிக்கின்றது.

உரிமைக்கோரிக்கைக் கைந்நூல் மற்றும் வாங்குநர்களின் புள்ளி அட்டையின் மாதிரியை மிகச் சிறப்பாக அமுல்படுத்துவதற்காக அது பற்றி கலந்துரையாடும் பொருட்டு ECGC Ltd இன் முன்னாள் பொது முகாமையாளர் திரு. எம்.வைத்தியநாதன் அவர்களுடன் பெருமளவான புலமைசார் உரையாடல் அமர்வுகள் நிகழ்நிலையாக ஒழுங்குசெய்யப்பட்டன. இதன்மூலம் பணியாட்குழு அங்கத்தவர்களினால் ஆக்கபூர்வமான, நடைமுறைச் சாத்தியமான கருத்துக்கள் எழுப்பப்பட்டுள்ளன. அதன்மூலம் கூட்டிணைக் கொள்கைகளையும் நோக்கங்களையும் நிர்ணயிக்கும்போது நேர்ப்படியான பணியாட்குழுவினரின் பங்கேற்புடன் திறந்த, வகைகூறக்கூடிய முகாமைத்துவ பாணியொன்றை தொடர்ந்தும் விருத்திசெய்வதற்கு பங்களிப்பு வழங்கப்படுகிறது.

கூட்டுத்தாபனம் இருதளமுள்ள மூலோபாயமொன்றை அனுசரித்ததுடன், அனைத்து ஊழியர்களதும் பாதுகாப்பும் இரண்டாவதாக வரம்புகளுடனாயினும் வியாபாரங்கள் பொதுவாக இடம்பெறுவதை உறுதிசெய்வதும் அதன் முக்கிய குறிக்கோளாக இருந்தது. அதன்போது சுகாதாரத் திணைக்களத்தினால் செயல்வலுவூட்டப்பட்ட அனைத்து ஒழுங்குவிதிகளையும் கட்டளைகளையும் ஊழியர்கள் பின்பற்றுவது முக்கிய இலக்கொன்றாக அமைந்தது.

ஊழியர்களின் பாதுகாப்பையும் நடவடிக்கைகளையும் தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கான தமது செயல்முனைப்புகள் அதற்கு குறைநிரப்பியாக அமையும்.

ஊழியர்களை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தும் நடைமுறைக்கான அனைத்துச் செலவுகளும் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படுகிறது. அனைத்து ஊழியர்களுக்கும் பிரத்தியேக பாதுகாப்பு உபகரணங்களை (PPE) வழங்குதல் போன்ற அத்தியாவசியமானவற்றை வழங்குவதற்கு மேலதிகமாக, கூட்டுத்தாபனம் தனது பணியாட்குழுவினரின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு கொரோனா முதலாவது அலையின்போது பணி முறைமாற்று முறைமையொன்றை அனுசரித்தது. இலவச போக்குவரத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

காப்பீடுகளுக்கான கடும் கேள்வியினால் ஏற்படுத்தப்படும் மிகப் பாரிய வேலையளவின் விளைவாக ஆண்டினுள் ஊழியர் அழுத்தத்திற்கு தொடர்ந்தும் முகங்கொடுக்க கூட்டுத்தாபனத்திற்கு நேரிடுகிறது.

## எதிர்கால நோக்கு

### தொழில்களை ஈட்டிக்கொள்ளலும் தடுத்து வைத்திருத்தலும்

நிலவும் வியாபாரச் சூழல் சவாலானதாக இருப்பதுடன் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் ஏற்றுமதியாளர்கள் மன நிம்மதியுடன் பயன்படுத்திக்கொள்வதிலும் தமது தொழில்களை விருத்தி செய்துகொள்வதிலும் அவர்களுக்கு உதவும் எதிர்பார்ப்பு கூட்டுத்தாபனத்திற்கு உள்ளது. புத்தாண்டில் வங்கிகள், வியாபார ஆதரிப்பு ஒழுங்கமைப்புகள் மற்றும் வியாபார, கைத்தொழிற் கழகங்கள் உட்பட அதன் தொழிற்பங்காளர்களுடன் தொடர்புகளையும் ஒத்துழைப்பையும் தொடர்ந்து கூட்டுத்தாபனம் பலப்படுத்திக்கொள்ளும் என்பதுடன், கூடுதல் எண்ணிக்கையான ஏற்றுமதியாளர்களைப் பெற்றுக்கொள்வதற்கு பிரசார மற்றும் சந்தைப்படுத்தற் செயற்பாடுகளையும் நிறைவேற்றும்.

வர்த்தகப் பண்டங்களுக்கான சலுகை அடிப்படையிலான விலைகள், முக்கிய பொருளாதாரங்களில் வேகமாக மாற்றமுறும் பணக் கொள்கைகள், யூரோ வலயம், ஜப்பான், சீனா முதலிய நாடுகளின் குறைந்த பணவீக்கத்துடன் பலவீனமான வளர்ச்சி முதலான உலக பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க அளவு பாதிப்பை ஏற்படுத்தும்.

இப்பின்புலத்தில், ஏற்றுமதியாளர்கள் எதிர்நோக்கும் சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கும் அவர்களின் ஆபத்து முதலீட்டுப் பட்டியல்களை முகாமைசெய்வதில் உதவுவதற்கும் மேலும் வளங்களை ஈடுபடுத்த கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்கும்.

கூட்டுத்தாபனம், அதன் கடன் தகவல் வலையமைப்பைப் பலப்படுத்துவதற்கும் ஒப்புறுதியீட்டுச் செயன்முறையை வேகமாக்குவதற்காக அது பெறுகின்ற தகவல்களின் வேகத்தையும் நம்பகத்தன்மையையும் முன்னேற்றுவதற்கும், எதிர்வரும் ஆண்டில் கிடைக்கக்கூடிய மிகவும் பயனுறுதிவாய்ந்த கடன் தகவல் மூலங்களை தொடர்ந்து ஆராயும்.

எதிர்கால தகவல் தொழில்நுட்ப முறைமைகளை விருத்திசெய்யும்போதும் அவற்றைப் பராமரிக்கும்போதும் வாடிக்கையாளர்களுக்கு வினைத்திறன் மிகுந்த, நம்பகத்தன்மை வாய்ந்த சேவைகளை வழங்குவதற்கு கூட்டுத்தாபனம் அதன் இணைய அரங்கு, அதன் உள்ளக பிரயோகங்கள் ஆகிய இரண்டிலும் மேம்படுத்தல்களைச் செய்யும் என்பதுடன், வியாபாரங்கள்

தடையின்றி முன்னெடுத்துச் செல்லப்படுவதை இயலச்செய்யும் வகையில் கூட்டுத்தாபனத்தின் வலையமைப்பாக்க உட்கட்டமைப்பு வசதிகள் முன்னேற்றப்படும்.

# 2020 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வுக் குழு அறிக்கை

இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் (SLECIC) கணக்காய்வு மற்றும் முகாமைக் குழு 2002, நவம்பர் மாதத்தில் பயனுக்குவந்ததுடன், நிதி அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நிறைவேற்றுநர் பதவியிலில்லாத பணிப்பாளரொருவரினால் அக்குழுவின் தலைமை வகிக்கவும்படுகின்றது. குழுவானது கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுநர் பதவியிலில்லாத பணிப்பாளர்களான நான்கு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. வரவழைப்பின் பேரில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திலிருந்தான பிரதிநிதியொருவர் அவதானிப்பாளராகக் கூட்டங்களில் கலந்துகொள்கின்றார்.

குழுவின் உறுப்பினர்கள் பின்வருவோராவர்: திரு. கே.எஸ்.எம். த சில்வா - குழுத் தலைவர், SLECIC பணிப்பாளர், தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்தின் பணிப்பாளர் (பதில்) - நிதி அமைச்சு, திருமதி ஈஏ.ஏக்கநாயக்க, SLECIC பணிப்பாளர், வர்த்தக அமைச்சின் உதவிப் பணிப்பாளர் திரு. எஸ்.பரணவிதான, SLECIC பணிப்பாளர், தலைமை அலுவலர் - ஆயுட் காப்புறுதி, வரையறுத்த இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்.

2020 ஆம் ஆண்டில் கணக்காய்வுக் குழு மூன்று கூட்டங்களை நடத்தியது. பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் அத்தகைய குழுக்களுக்கு விதித்துரைக்கப்பட்ட நியதி நிபந்தனைகளுக்கிணங்க அக்குழு செயலாற்றியது. நிதிக்கூற்றுக்களின் நம்பகத்தன்மையும் நிலையுறுதியும், உள்ளக கட்டுப்பாடுகளின் போதியதாந்தன்மையும் பயனுறுந்தன்மையும் மற்றும் நியதிச்சட்டமுறையான அத்துடன் ஒழுங்குபடுத்தும் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்றமையும் என்ற நியதிகளில் கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டு மற்றும் நிதிசார் அறிக்கையிடல் செய்முறையும் நிதிசார் கூற்றுக்களின் கணக்காய்வும் பற்றி குழுவானது அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் பணிப்பாளர் சபைக்கு உதவியது.

பரிசீலனைக்கு உட்பட்ட காலப்பகுதியில், குழுவானது கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தினாலான வெளியகக் கணக்காய்வறிக்கைகளைக் கிரமமாக மீளாய்வு செய்ததுடன், சொல்லப்பட்ட அறிக்கைகளில் அடங்கியுள்ள விதப்புரைகளின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் உள்ளக கட்டுப்பாடுகளைச் சீராக்குவதற்கு பல நடவடிக்கைகளையும் எடுத்தது. உள்ளக கணக்காய்வாளரினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளும் குழுவினால் மீளாயப்பட்டு திருத்த வழிமுறைகளுக்கான விதப்புரைகள் பின்பற்றப்பட்டன.

கூட்டுத்தாபனத்திற்கு ஏற்புடைய (SLECIC) சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் இ.ஏ.க.கா. கூட்டுத்தாபனத்தினால் இணங்கியொழுகப்படுவதன் மீது குழுவானது விசேட அழுத்தத்தை விதித்து இணங்கியொழுகுகின்றமையின் திருப்திகரமான மட்டத்தை உறுதிப்படுத்துவதற்குத் திறைசேரியினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கும் இயைபான அரசாங்க அதிகாரசபைகளினால் வழங்கப்பட்ட ஏனைய இயைபான சுற்றறிக்கைகளுக்குமான அமைந்தொழுகுகை மட்டத்தை மீளாய்வு செய்தது.

**கே.எஸ்.எம். த சில்வா**
தலைவர்
கணக்காய்வுக் குழு
இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்பறுதிக் கூட்டுத்தாபனம்

# இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (SLECIC)

## 2020 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வருடாந்த நிதிசார்கூற்றுக்கள்

---

# இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (SLECIC)

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| *விரிவான வருமானம் பற்றிய கூற்று* | 38 |
| *நிதிநிலைமை பற்றிய கூற்று* | 39 |
| *காசுப்பாய்ச்சல் கூற்று* | 40 |
| *பங்குமுதல் மாற்றங்கள் பற்றிய கூற்று* | 41 |
| *கணக்கீட்டுக் குறிப்புகள்* | 42-51 |
| *கணக்கீட்டுக் கொள்கைகள்* | 52-63 |

# இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

## வருடாந்த நிதிசார் கூற்றுக்கள் - 2020

### இலாப அல்லது நட்ட மற்றும் பிற விரிவான வருமானக் கூற்று

**டிசம்பர் 31 அன்று முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | குறிப்பு | 31.12.2020 (ரூ.) | 31.12.2019 (ரூ.) |
|---|---|---|---|
| **வருமானங்கள்** | | | |
| மொத்த ஈட்டப்பட்ட கட்டுப்பண வருமானம் | 1 | 204,184,325.34 | 226,066,266.58 |
| ஈட்டப்படாத கட்டுப்பண ஒதுக்கின் தேறிய மாற்றல் | 1 அ | 1,987,999.94 | 3,678,463.98 |
| மொத்த ஈட்டப்பட்ட கட்டுப்பண வருமானம் | | 206,172,325.28 | 229,744,730.56 |
| பிற தொழிற்பாட்டு வருமானம் | 2 | 12,837,220.42 | 15,337,726.67 |
| **மொத்த தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | | 219,009,545.70 | 245,082,457.23 |
| **பிற வருமானங்கள்** | | | |
| முதலீட்டு வருமானம் | 3 | 215,395,334.99 | 216,940,848.72 |
| பிற வருமானம் | 4 | 31,065,746.79 | -5,057,448.22 |
| | | 246,461,081.78 | 211,883,400.50 |
| **மொத்த தேறிய வருமானம்** | | 465,470,627.48 | 456,965,857.73 |
| **உரிமைக்கோரிக்கைகளும் தொழிற்பாட்டுச் செலவுகளும்** | | | |
| தேறிய உரிமைக்கோரிக்கைகள் | 5 | 95,128,166.10 | 87,735,173.54 |
| நிலைவர அறிக்கைகள் | | 7,237,809.53 | 8,394,438.04 |
| தாபனச் செலவுகள் | 6 | 19,769,909.03 | 21,009,402.72 |
| நிருவாகச் செலவுகள் | 7 | 50,811,906.12 | 50,778,765.93 |
| விற்பனவு மற்றும் சந்தைப்படுத்தல் செலவுகள் | 8 | 4,059,648.82 | 8,828,537.09 |
| நிதி விதிப்பனவுகள் | 9 | 89,456.28 | 3,314,284.54 |
| **தேறிய உரிமைக்கோரிக்கைகளும் தொழிற்பாட்டுச் செலவுகளும்** | | 177,096,895.88 | 180,060,601.86 |
| **பெறுமதிசேர் வரி (VAT) விதிப்பிற்கு முந்திய இலாபம் / நட்டம்** | | 288,373,731.60 | 276,905,255.87 |
| நிதியியற் சேவைகள் மீதான பெறுமதிசேர் வரி | | 23,083,663.00 | 23,858,646.00 |
| வருமான வரி விதிப்புக்கு முந்திய இலாபம் | | 265,290,068.60 | 253,046,609.87 |
| வருமான வரி | 9அ | 41,941,136.57 | 10,795,764.44 |
| **ஆண்டிற்குரிய தேறிய இலாபம் / நட்டம்** | | 223,348,932.03 | 242,250,845.43 |
| **பிற விரிவான வருமானங்கள்** | | - | - |
| **ஆண்டிற்குரிய மொத்த விரிவான வருமானம்** | | 223,348,932.03 | 242,250,845.43 |

# இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

## வருடாந்த நிதிசார் கூற்றுக்கள் - 2020

## நிதிநிலைமைக் கூற்று

| | குறிப்பு | 2020.12.31 அன்றுள்ளவாறு (ரூ.) | 2019.12.31 அன்றுள்ளவாறு (ரூ.) |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| காசும் காசுக்கு நிகரானவையும் | 10 | 5,289,429.42 | 8,270,323.86 |
| வெளிநாட்டு புழக்கப் பண சேமிப்புக் கணக்குகள் | 11 | 682,942.81 | 1,987,326.53 |
| திறைசேரி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் | | 0.00 | 23,658,844.17 |
| முதலீட்டு நிதியம் | | 32,497.95 | 1,054,937.04 |
| குறுகிய கால நிதிசார் முதலீடுகள் | 12 | 2,387,549,984.30 | 1,845,825,066.60 |
| நீண்ட கால நிதிசார் முதலீடுகள் | 13 | 445,663,577.72 | 687,134,191.76 |
| பெறப்படற்பாலதான வட்டி | 14 | 186,666,576.27 | 184,881,509.57 |
| வர்த்தகக் கடனாளிகள் | | 5,564,833.73 | 5,490,208.97 |
| சில்லறைக் கடனாளிகளும் வைப்புக்களும் முற்கொடுப்பனவுகளும் | 15 | 8,324,841.89 | 8,685,474.40 |
| ஆதனமும் பொறித்தொகுதியும் சாதனங்களும் | 16 | 153,919,384.79 | 167,193,203.23 |
| எழுதுகருவிகளும் நுகர்வுப் பண்ட இருப்பும் | | 333,982.95 | 341,088.05 |
| நூலகப் பொருள்கள் | | 39,527.50 | 39,527.50 |
| **மொத்த சொத்துக்கள்** | | 3,194,067,579.33 | 2,934,561,701.68 |
| **பொறுப்புக்கள்** | | | |
| நிலுவையாகவுள்ள உரிமைக்கோரிக்கைகள் | 17 | 295,073,784.16 | 243,615,705.53 |
| கட்டுப்பண முற்பணம் | | 13,444,971.76 | 8,508,652.96 |
| சில்லறைக் கடனாளிகளும் திரண்ட செலவுகளும் ஏற்பாடுகளும் | 18 | 46,629,068.77 | 46,688,020.95 |
| செலுத்தப்படற்பாலதான பணியாட்குழுவினருக்கான பணிக்கொடை | 19 | 13,228,994.16 | 11,571,417.60 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | 368,376,818.85 | 310,383,797.04 |
| **உரிமைமுதல்** | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 20 | 30,000,000.00 | 30,000,000.00 |
| ஒதுக்குகள் | 21 | 2,795,690,760.48 | 2,594,177,904.64 |
| **மொத்த உரிமைமுதல்** | | 2,825,690,760.48 | 2,624,177,904.64 |
| **மொத்தப் பொறுப்பும் உரிமைமுதலும்** | | 3,194,067,579.33 | 2,934,561,701.68 |

கணக்கீட்டுக் கொள்கைகளுக்கும் கணக்குகளுக்குமான குறிப்புக்கள் இந்நிதிக்கூற்றுக்களின் கட்டாயமான ஒரு பகுதியாகும்.
இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதுடன் அதனைச் சமர்ப்பிக்கும் பொறுப்பை பணிப்பாளர் சபை வகிக்கின்றது.
நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்டு அவர்களின் சார்பில் கையொப்பமிடப்பட்டன.

**டி.பீ.அளுத்கே**
**உதவிப் பொது முகாமையாளர் - நிதி**

**ஏ.எச்.டப்ளியு.அம்பவத்த**
**தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளரும்**
2021.02.05

**கே.எஸ்.எம். த சில்வா**
**பணிப்பாளர்**

# இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

## வருடாந்த நிதிசார் கூற்றுக்கள் - 2020

### 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று

| | 2020.12.31 உடன் முடிவடைந்த ஆண்டு (ரூ.) | 2019.12.31 உடன் முடிவடைந்த ஆண்டு (ரூ.) |
|---|---|---|
| தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான பாய்ச்சல்கள் | | |
| வரி விதிப்பிற்கு முந்திய இலாபம் | 265,290,069 | 253,046,610 |
| பணமல்லாத உருப்படிகளுக்கான சீராக்கங்கள் | | |
| பெறுமானத் தேய்வு | 13,357,874 | 13,404,291 |
| பணிக்கொடை ஏற்பாடு | 1,844,827 | 1,882,031 |
| உரிமைக்கோரிக்கை ஏற்பாடு | 95,128,166 | 87,735,173 |
| நிதியியற் சேவைகள் மீதான பெறுமதிசேர் வரி | 23,083,663 | 23,858,646 |
| ஒதுக்குகளில் (இருந்து) / (ஒதுக்கங்களுக்கு) மாற்றல்கள் | -21,836,076 | -3,678,464 |
| தொழிற்படு மூலதன மாற்றத்திற்கு முந்திய செயற்பாட்டு இலாபம் | 376,868,523 | 376,248,287 |
| வியாபார மற்றும் பிற பெறப்படற்பாலவையிலான குறைப்பு/(அதிகரிப்பு) | 286,008 | 4,155,801 |
| பொருட்பதிவேடுகளிலிருந்தான குறைப்பு/(அதிகரிப்பு) | 7,105 | -41,908 |
| வியாபார மற்றும் பிற செலுத்தப்படற்பாலவையிலான அதிகரிப்பு/(குறைப்பு) | 972,011 | -22,189,895 |
| செயற்பாடுகளிலிருந்து வருவிக்கப்பட்ட பணம் | 378,133,647 | 358,172,285 |
| செலுத்தப்பட்ட உரிமைக்கோரிக்கைகள் | -43,670,087 | -90,801,073 |
| நிதியியற் சேவைகள் மீதான பெறுமதிசேர் வரி செலுத்தல்கள் | -26,201,907 | -34,053,671 |
| செலுத்தப்பட்ட வருமான வரி | -34,917,537 | -56,135,233 |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | -187,250 | -159,300 |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள் | 273,156,866 | 177,023,008 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள் | | |
| நிலையான சொத்துக்கள் கொள்ளல் | -84,056 | -100,125 |
| நீண்ட கால / குறுகிய கால முதலீடுகளுக்கான மாற்றல்கள் | -302,039,371 | -173,980,443 |
| வெளிநாட்டு நாணய சேமிப்புக் கணக்கிலிருந்தான/கணக்கிற்கான மாற்றல்கள் | 1,304,383 | 2,804,180 |
| திறைசேரி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திலிருந்தான மாற்றல்கள் | 23,658,844 | -1,390,937 |
| முதலீட்டு நிதியத்திற்கான / நிதியத்திலிருந்தான மாற்றல்கள் | 1,022,439 | -951,892 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள் | -276,137,761 | -173,619,217 |
| காசும் காசுக்கு நிகரானவற்றினதும் தேறிய அதிகரிப்பு / (குறைவு) | -2,980,895 | 3,403,791 |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசும் காசுக்கு நிகரானவையும் | 8,270,324 | 4,866,533 |
| காலப்பகுதியின் இறுதியில் காசும் காசுக்கு நிகரானவையும் | 5,289,429 | 8,270,324 |

# இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

வருடாந்த நிதிசார் கூற்றுக்கள் - 2020

2020 டிசம்பர் 31 அன்று உள்ளவாறான ஒதுக்குகள்

| | பங்களிப்பு மூலதனம் | பொது ஒதுக்குகள் | மீள்பெறுமான மதிப்பீட்டு ஒதுக்குகள் | முதலீட்டு நிதியம் | ஈட்டப்படாத கட்டுப்பணம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **2019 ஜனவரி 01 அன்று உள்ளவாறான மீதி** | **30,000,000.00** | **2,131,527,483.35** | **141,710,389.74** | **58,507,949.05** | **23,859,701.05** | **2,385,605,523.19** |
| மீள்பெறுமான மதிப்பீட்டு ஒதுக்குகளிலான மாற்றல்கள் | | 7,888,946.00 | -7,888,946.00 | | | 0.00 |
| 2019 ஆம் ஆண்டிற்கான தேறிய இலாபம் | | 242,250,845.43 | | | | 242,250,845.43 |
| 2019 ஆம் ஆண்டினுள் மாற்றல்கள் | | | | | -3,678,463.98 | -3,678,463.98 |
| | | | | | | 0.00 |
| | | | | | | 0.00 |
| **2019 டிசம்பர் 31 அன்று உள்ளவாறான மீதி** | **30,000,000.00** | **2,381,667,274.78** | **133,821,443.74** | **58,507,949.05** | **20,181,237.07** | **2,624,177,904.64** |
| மீள்பெறுமான மதிப்பீட்டு ஒதுக்குகளிலான மாற்றல்கள் | | 8,154,758.82 | -8,154,758.82 | | | 0.00 |
| 2020 ஆம் ஆண்டிற்கான தேறிய இலாபம் | | 223,348,932.03 | | | | 223,348,932.03 |
| 2020 ஆம் ஆண்டினுள் மாற்றல்கள் | | | | | -1,987,999.94 | -1,987,999.94 |
| 2020 ஆம் ஆண்டிற்கான விசேட இறுப்பு | | -19,848,076.25 | | | | -19,848,076.25 |
| **2020 டிசம்பர் 31 அன்று உள்ளவாறான மீதி** | **30,000,000.00** | **2,593,322,889.38** | **125,666,684.92** | **58,507,949.05** | **18,193,237.13** | **2,825,690,760.48** |

# இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

வருடாந்த நிதிசார் கூற்றுக்கள் - 2020

## 2020 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| குறிப்பு | | | 31.12.2020 (ரூ.) | 31.12.2019 (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | **மொத்த எழுதப்பட்ட கட்டுப்பண வருமானம்** | | | |
| | கப்பலேற்றுகைக்கு முந்திய கடன் உத்தரவாதம் | | 5,558,367.59 | 13,174,701.41 |
| | கப்பலேற்றுகைக்குப் பிந்திய கடன் உத்தரவாதம் | | 1,131,874.39 | 1,390,434.65 |
| | ஏற்றுமதிச் செயல்நிறைவேற்ற உத்தரவாதம் | | 0.00 | 1,055,082.00 |
| | வான் செலவு உத்தரவாதம் (APARA) | | 613,442.56 | 1,477,700.32 |
| | ஏற்றுமதிக் கொடுப்பனவுக் காப்புறுதிப்பத்திரம் (விற்பனவாளரின் ஆபத்து) | | 196,880,640.80 | 208,968,348.20 |
| | | | 204,184,325.34 | 226,066,266.58 |
| | ஈட்டப்படாத கட்டுப்பணம் குறைவடைதல் | 1அ | 1,987,999.94 | 3,678,463.98 |
| | மொத்த ஈட்டப்பட்ட கட்டுப்பணம் | | 206,172,325.28 | 229,744,730.56 |
| 1அ | **ஈட்டப்படாத கட்டுப்பணம்** | | | |
| | ஏற்றுமதிக் கொடுப்பனவுக் காப்புறுதிப் பத்திரங்கள் மொத்த ஈட்டப்படாத கட்டுப்பணம் | | | |
| | ஜனவரி 1 அன்று உள்ளவாறான மீதி | | 17,616,549.32 | 21,350,717.58 |
| | ஆண்டினுள் கூறப்பட்ட கட்டுப்பணம் | | 196,880,640.80 | 208,968,348.20 |
| | ஆண்டினுள் ஈட்டப்பட்ட கட்டுப்பணம் | | 197,399,505.66 | 212,702,516.46 |
| | டிசம்பர் 31 அன்று உள்ளவாறான மீதி | | 17,097,684.46 | 17,616,549.32 |
| | கடன் உத்தரவாத மொத்த ஈட்டப்படாத கட்டுப்பணம் | | | |
| | ஜனவரி 1 அன்று உள்ளவாறான மீதி | | 2,564,687.76 | 2,508,983.47 |
| | ஆண்டினுள் கூறப்பட்ட கட்டுப்பணம் | | 7,303,684.54 | 17,097,918.38 |
| | ஆண்டினுள் ஈட்டப்பட்ட கட்டுப்பணம் | | 8,772,819.62 | 17,042,214.10 |
| | டிசம்பர் 31 அன்று உள்ளவாறான மீதி | | 1,095,552.68 | 2,564,687.75 |
| | டிசம்பர் 31 அன்று உள்ளவாறான மொத்த ஒதுக்குகள் | | 18,193,237.14 | 20,181,237.07 |
| | ஜனவரி 01 அன்று உள்ளவாறான மொத்த ஒதுக்குகள் | | 20,181,237.08 | 23,859,701.05 |
| | ஈட்டப்படாத கட்டுப்பண ஒதுக்கின் தேறிய வித்தியாசம் | | -1,987,999.94 | -3,678,463.98 |
| 2 | **பிற தொழிற்பாட்டு வருமானம்** | | | |
| | உத்தரவாதம், காப்புறுதிப் பத்திரம், நிருவாக, செய்முறைப்படுத்தல் மற்றும் BLL கட்டணங்கள் | | 8,771,612.74 | 9,983,380.07 |
| | பிஸ்இன்போ வருமானம் | | 4,065,607.68 | 5,354,346.60 |
| | செலுத்தப்பட்ட உரிமைக்கோரிக்கைகளின் மீள்கொடுப்பனவு | | - | - |
| | | | 12,837,220.42 | 15,337,726.67 |
| 3 | **முதலீட்டு வருமானம்** | | | |
| | திறைசேரி உண்டியல்கள்/ முறிகள் | | 9,350,251.46 | 16,485,538.11 |
| | அழைப்பு வைப்புக்கள் | | 713,085.35 | 519,323.28 |
| | SMIB வைப்புக்கள் | | 23,792.80 | 22,966.02 |
| | தொகுதிக்கடன் முறிகள் | | 62,511,910.51 | 66,236,873.90 |
| | ஐ.அ.டொலர் நிலையான வைப்புக்கள் | | 60,181,337.24 | 46,588,801.66 |
| | ஐ.அ.டொலர் சேமிப்பு வைப்புக்கள் | | 50,580.35 | 85,700.95 |
| | யூரோ நிலையான வைப்புக்கள் | | 1,066,463.63 | 862,470.97 |
| | தற்காலிக மேன்மிகை நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் | | 455,412.82 | 1,436,457.38 |
| | பங்கிலாபங்கள் | | 320,000.00 | 280,000.00 |
| | SLR நிலையான வைப்புக்கள் | | 80,666,592.92 | 84,390,517.04 |
| | முதலீட்டு நிதியம் மீதான வட்டி | | 55,907.91 | 32,199.41 |
| | | | 215,395,334.99 | 216,940,848.72 |

# இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

## வருடாந்த நிதிசார் கூற்றுக்கள் - 2020

## 2020 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| குறிப்பு | | | 31.12.2020<br>(ரூ.) | 31.12.2019<br>(ரூ.) |
|---|---|---|---|---|
| 4 | **பிற வருமானங்கள்** | | | |
| | பணியாட்குழு கடன் மீதான வட்டி | | 153,959.43 | 145,030.91 |
| | நிலையான சொத்துக்கள் கையுதிர்ப்பு மீதான இலாபம் | | 0.00 | 0.00 |
| | பணிக்கொடை நிதியத்தின் மீதான திறைசேரி உண்டியல் வட்டி | | 609,295.05 | 755,616.20 |
| | பணிக்கொடை சேமிப்புக் கணக்கு மீதான வட்டி | | 4,862.94 | 5,113.98 |
| | நானாவித வருமானம் | | 5,880.00 | 520.00 |
| | செலாவணி இலாபம் / நட்டம் | | 30,291,749.37 | -5,963,729.31 |
| | | | 31,065,746.79 | -5,057,448.22 |
| 5 | **செலுத்தப்பட்ட தேறிய உரிமைக்கோரிக்கைகள்** | | | |
| | ஆண்டிறுதியில் உரிமைக்கோரிக்கைகளுக்கான ஏற்பாடுகள் - குறித்துரைக்கப்பட்ட | | 264,467,319.79 | 209,762,232.23 |
| | கடந்தாண்டுகளில் வழங்கப்பட்ட உரிமைக்கோரிக்கைகள் | | 112,486,887.81 | 75,353,828.30 |
| | 2020 ஆம் ஆண்டிற்கான உரிமைக்கோரிக்கைகள் | | 151,980,431.98 | 134,408,403.93 |
| | கழிக்குக: கடந்தாண்டில் செய்யப்பட்ட மேலதிக ஏற்பாடுகள் | | 61,881,941.46 | 82,936,418.02 |
| | 2020 ஆண்டுக்கான தேறிய உரிமைக்கோரிக்கைகள் - குறித்துரைக்கப்பட்ட | | 90,098,490.52 | 51,471,985.91 |
| | நிகழ்சாத்திய ஏற்பாடு - 2020 (தயவுடன் குறிப்பு 17 இல் காண்க) | | 5,029,675.58 | 36,263,187.63 |
| | | | 95,128,166.10 | 87,735,173.54 |
| 6 | **தாபனச் செலவினம்** | | | |
| | வீத வரிகள் | | 762,300.00 | 762,300.00 |
| | நீர் | | 86,080.14 | 109,807.77 |
| | மின்சாரம் | | 1,160,093.54 | 1,486,222.77 |
| | தொலைபேசி | | 788,789.91 | 869,754.72 |
| | மின்னஞ்சலும் இணையமும் இணையத்தளமும் | | 762,102.70 | 646,004.90 |
| | பாதுகாப்பு | | 512,207.00 | 412,644.98 |
| | பெறுமானத்தேய்வு | கட்டிடங்கள் | 8,825,000.00 | 8,825,000.00 |
| | | மோட்டார் வாகனங்கள் | 2,680,000.00 | 2,680,000.00 |
| | | அலுவலக உபகரணங்கள் | 296,217.37 | 272,843.37 |
| | | கணினிகளும் அச்சீட்டுப் பொறிகளும் | 1,355,863.07 | 1,343,408.08 |
| | | தளபாடங்களும் பொருத்திகளும் | 140,923.00 | 140,923.00 |
| | | மென்பொருள்கள் | 59,871.00 | 142,117.15 |
| | காப்புறுதி - | கட்டிடங்கள் - அலுவலக வளவுகள் (நவம் மாவத்தை) | 115,238.48 | 116,940.12 |
| | | மோட்டார் வாகனங்கள் | 249,862.95 | 249,788.37 |
| | | அலுவலக உபகரணங்களும் தளபாடங்களும் சாதனங்களும் | 14,863.22 | 12,091.21 |
| | பழுதுபார்ப்பும் பராமரிப்பும் - | கட்டிடங்கள் | 0.00 | 0.00 |
| | | மோட்டார் வாகனங்கள் | 516,284.29 | 1,503,083.98 |
| | | அலுவலக உபரகணங்களும் தளபாடங்களும் | 58,471.89 | 9,299.22 |
| | | கணினிகளும் அச்சீட்டுப் பொறிகளும் | 469,215.00 | 546,525.27 |
| | | மென்பொருள்கள் | 113,995.78 | 121,327.54 |
| | அலுவலக வளவுகள் பராமரிப்பு | | 802,529.69 | 759,320.27 |
| | | | 19,769,909.03 | 21,009,402.72 |

# இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

## வருடாந்த நிதிசார் கூற்றுக்கள் - 2020

### 2020 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| குறிப்பு | | 31.12.2020 (ரூ.) | 31.12.2019 (ரூ.) |
|---|---|---|---|
| 7 | **நிருவாகச் செலவினம்** | | |
| | சம்பளங்களும் படிகளும் | 24,173,770.78 | 24,094,489.11 |
| | பிற பணியாட்குழுவினருக்கான நன்மைகள் | 11,521,046.98 | 12,130,912.18 |
| | ஆட்சேர்ப்புக்கள், உள்நாட்டுப் பயிற்சி மற்றும் கல்வி நிறுவனங்களுக்கான ஒப்பப் பணங்கள் | 20,975.00 | 531,703.10 |
| | தேநீர்ப் பானமும் சார்ந்த செலவுகளும் | 417,885.04 | 778,605.40 |
| | ஊழியர் சகாய நிதியம் | 6,248,583.39 | 6,131,827.10 |
| | ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் | 781,073.10 | 766,478.56 |
| | பணிக்கொடை | 1,844,826.56 | 1,882,030.60 |
| | வெளிநாட்டுப் பயிற்சி | 0.00 | 157,118.47 |
| | பணிப்பாளர்களின் கட்டணங்கள் | 320,000.00 | 80,000.00 |
| | பயணம்செய்தல், போக்குவரத்து மற்றும் உணவுப்படி | 1,192,706.00 | 445,558.10 |
| | அஞ்சல் கட்டணம் | 33,325.00 | 53,176.00 |
| | ஆண்டறிக்கையும் பிற அச்சீட்டுப் பணிகளும் | 994,022.00 | 112,586.05 |
| | எழுதுகருவிகள் | 202,884.27 | 163,875.44 |
| | எரிபொருள் | 755,603.00 | 830,639.00 |
| | வெளியக கணக்காய்வுக் கட்டணங்கள் | 364,320.00 | 901,037.84 |
| | உள்ளக கணக்காய்வுக் கட்டணங்கள் | 616,480.00 | 542,543.83 |
| | உயர்தொழில்சார், சட்ட மற்றும் ஆலோசனைக் கட்டணங்கள் | 130,435.00 | 143,383.45 |
| | பொதுவான செலவுகள் | 15,415.00 | 21,255.00 |
| | முத்திரைத் தீர்வை | 10,025.00 | 10,125.00 |
| | செய்தித்தாள்களும் நூல்களும் பருவ சஞ்சிகைகளும் | 21,982.00 | 48,770.00 |
| | ஆண்டு நிறைவு செலவுகள் | 739,500.00 | 952,651.70 |
| | ஊழியர் நலக் காப்புச் செலவுகள் (COVID) | 407,048.00 | 0.00 |
| | | 50,811,906.12 | 50,778,765.93 |
| 8 | **விற்பனவுகள் மற்றும் சந்தைப்படுத்தல் செலவுகள்** | | |
| | மேம்பாடுசார் முதலீடுகள் | 540,000.00 | 1,524,814.04 |
| | வர்த்தக விளம்பரப்படுத்தல் - அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் | | |
| | செய்தித்தாள்களும் சஞ்சிகைகளும் பருவ வெளியீடுகளும் வானொலி விளம்பரப்படுத்தலும் | 0.00 | 227,625.98 |
| | அறிமுகவிதழ்கள், படிவங்கள், விண்ணப்பங்கள் முதலியவற்றின் அச்சீட்டுச் செலவு | 30,943.83 | 44,692.71 |
| | தொழிற்பயணம் (வெளிநாடு) மற்றும் மாநாடுகள் | 2,414.19 | 2,386,964.89 |
| | வர்த்தகக் கண்காட்சிகள், சேவைநாடுநர் கூட்டங்கள், சமுக ஒன்றுகூடல்கள் | 0.00 | 777,153.66 |
| | எரிபொருள் செலவு | 212,877.00 | 271,153.00 |
| | வருடாந்த அன்பளிப்புகளும் வாழ்த்து அட்டைகளும் சன்மானங்களும் | 0.00 | 20,189.08 |
| | களியாட்ட நிகழ்வுகள் | 6,085.00 | 176,944.13 |
| | கூட்டிணை ஒப்பப்பணம் | 167,628.80 | 195,049.60 |
| | சர்வதேச உயர்தொழில் மற்றும் ஏற்றுமதிசார் ஒழுங்கமைப்புகளுக்கான ஒப்பப் பணங்கள் | 3,099,700.00 | 3,203,950.00 |
| | | 4,059,648.82 | 8,828,537.09 |

# இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

வருடாந்த நிதிசார் கூற்றுக்கள் - 2020

## 2020 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| குறிப்பு | | 31.12.2020 (ரூ.) | 31.12.2019 (ரூ.) |
|---|---|---|---|
| 9 | **நிதி விதிப்பனவுகள்** | | |
| | வங்கி விதிப்பனவுகள் | 65,624.28 | 93,381.54 |
| | முத்திரைத் தீர்வை | 23,700.00 | 39,750.00 |
| | தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி | 132.00 | 3,181,153.00 |
| | | 89,456.28 | 3,314,284.54 |

9அ **வருமான வரி**

2018 ஏப்ரல் 1 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க புதிய உண்ணாட்டு இறைவரிச் சட்டத்திற்கும் அதற்கான திருத்தங்களுக்கும் அமைய கூட்டுத்தாபனத்தின் மொத்த வருமானம் வருமான வரிக்கு உட்பட்டது என்பதுடன், இதற்கு முன்பு அதன் முதலீட்டு வருமானம் மாத்திரம் அதற்கு உட்பட்டதாக இருந்தது. 2018 ஆம் ஆண்டுக்கு முன்பு கூட்டுத்தாபனம் 28% வருமான வரி செலுத்தியிருப்பது. புதிய திருத்தங்களுடன் கூட்டுத்தாபனம் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், 14% குறைந்த வீதத்தில் வரி செலுத்துகின்றது. எவ்வாறாயினும் இந்த வீத வித்தியாசம் 2018 இறுதிக் கணக்குகளைத் தயாரித்த பின்பு மேற்கொள்ளப்பட்டமையால், அதன் பயனாக ரூ.33,270,216/- வருமான வரி மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. 14% வீதத்தில் கணிப்பிடப்பட்டதைத் தொடர்ந்து 2019 ஆம் ஆண்டுக்கான வருமான வரி ரூ.44,065,981/- ஆக இருந்தபோதும், மேற்குறிப்பிட்ட மேலதிகமாக செய்யப்பட்ட ஏற்பாடு காரணமாக 2019 ஆம் ஆண்டுக்கான வருமான வரிக் கட்டணம் ரூ.10,795,765/- அளவில் காணப்பட்டது.

# இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

வருடாந்த நிதிசார் கூற்றுக்கள் - 2020

## 2020 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| குறிப்பு | | 31.12.2020 (ரூ.) | 31.12.2019 (ரூ.) |
|---|---|---|---|
| 10 | **காசும் காசுக்கு நிகரானவையும்** | | |
| | **வங்கியிலுள்ள காசு** | | |
| | ஹற்றன் நஷனல் வங்கி நடைமுறைக் கணக்கு | 833,186.30 | 2,914,982.32 |
| | ஹற்றன் நஷனல் வங்கி அழைப்பு வைப்புக் கணக்கு | 3,956,769.44 | 4,599,867.42 |
| | இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கு | 303,541.03 | 656,841.87 |
| | மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கு | 193,932.65 | 96,632.25 |
| | | 5,287,429.42 | 8,268,323.86 |
| | **கையிலுள்ள காசு** | 2,000.00 | 2,000.00 |
| | | 5,289,429.42 | 8,270,323.86 |
| 11 | **வெளிநாட்டு நாணய சேமிப்புக் கணக்குகள்** | | |
| | இலங்கை வங்கி - ஐ.அ.டொலர் நாணயக் கணக்கு | 427,221.00 | 1,745,301.68 |
| | மக்கள் வங்கி - ஐ.அ.டொலர் நாணயக் கணக்கு | 219,592.56 | 209,974.03 |
| | யூரோ சேமிப்புக் கணக்கு | 36,129.25 | 32,050.82 |
| | | 682,942.81 | 1,987,326.53 |
| 12 | **குறுகிய கால முதலீடுகள்** | | |
| | ஐ.அ.டொலர் நிலையான வைப்புக்கள் | 1,094,313,602.04 | 1,002,677,864.30 |
| | யூரோ நிலையான வைப்புக்கள் | 44,773,966.24 | 38,773,597.24 |
| | SLR நிலையான வைப்புக்கள் | 1,238,656,249.70 | 795,200,000.00 |
| | பணிக்கொடை சேமிப்புக் கணக்கு | 135,363.49 | 130,500.55 |
| | பணிக்கொடை சேமிப்புக்கள் மீதான திறைசேரி உண்டியல்கள் | 9,670,802.83 | 9,043,104.51 |
| | | 2,387,549,984.30 | 1,845,825,066.60 |
| 13 | **நீண்டகால முதலீடுகள்** | | |
| | தொகுதிக்கடன் பத்திரங்கள் | 400,000,000.00 | 550,000,000.00 |
| | இங்கிரின் லிமிற்றட் நிறுவனத்தின் பங்குகள் | 10.00 | 10.00 |
| | கடன் தகவல் பணியகத்தின் பங்குகள் | 123,700.00 | 123,700.00 |
| | திறைசேரி முறிகள் | 45,539,867.72 | 137,010,481.76 |
| | | 445,663,577.72 | 687,134,191.76 |
| 14 | **பெறப்படற்பாலதான வட்டி** | | |
| | திறைசேரி வைப்புக்கள் | 67,154,144.92 | 67,154,144.92 |
| | திறைசேரி உண்டியல்கள்/ முறிகள் | 6,326,427.81 | 7,709,193.46 |
| | தொகுதிக்கடன் பத்திரங்கள் | 53,438,003.40 | 56,494,629.12 |
| | ஐ.அ.டொலர் நிலையான வைப்புக்கள் | 24,318,212.96 | 21,354,679.38 |
| | தற்காலிக மேன்மிகை நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் | 0.00 | 733,819.26 |
| | பணிக்கொடை நிதியங்கள் - திறைசேரி உண்டியல்கள் | 49,096.94 | 67,500.21 |
| | SLR நிலையான வைப்புக்கள் | 35,380,690.24 | 31,367,543.22 |
| | யூரோ நிலையான வைப்புக்கள் | 0.00 | 0.00 |
| | | 186,666,576.27 | 184,881,509.57 |

# இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

வருடாந்த நிதிசார் கூற்றுக்கள் - 2020

## 2020 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

குறிப்பு

| | | | 31.12.2020<br>(ரூ.) | 31.12.2019<br>(ரூ.) |
|---|---|---|---|---|
| 15 | **சில்லறைக் கடனாளிகள், வைப்புக்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள்** | | | |
| | ஏற்றுமதிப் பட்டியல் கழிப்பனவு வசதிகள் மீதான முற்பணம் | | 34,958,636.11 | 34,958,636.11 |
| | கழிக்குக: ஐயக்கடன் ஏற்பாடு | | 34,958,636.11 | 34,958,636.11 |
| | | | **0.00** | **0.00** |
| | பணியாட்குழு கடன்களும் பொதுவான முற்பணங்களும் | | 2,927,151.71 | 3,971,796.65 |
| | சில்லறை வைப்புக்கள் | 15 (அ) | 108,837.50 | 108,837.50 |
| | அரச ஈட்டு, முதலீட்டு வங்கி வைப்புக்கள் | | 614,833.29 | 591,040.49 |
| | மீளளிக்கப்படும் வைப்புக்கள் | | 56,500.00 | 56,500.00 |
| | சில்லறைக் கடனாளிகள் | | 770.00 | 770.00 |
| | நிறுத்திவைத்தல் வரிப் பெறுவனவுகள் | | 0.00 | 249,081.23 |
| | முற்கொடுப்பனவுகள் | | 329,692.71 | 1,069,012.47 |
| | பெறப்படற்பாலதான பிஸ்இன்போ வருமானம் | | 2,101,545.68 | 363,012.00 |
| | மதிப்பிழந்த காசோலைகள் | | | 89,913.06 |
| | பெறப்படற்பாலதான நிதியியற் சேவைகள் மீதான பெறுமதிசேர் வரி | | 2,185,511.00 | 2,185,511.00 |
| | | | **8,324,841.89** | **8,685,474.40** |
| 15 (அ) | **சில்லறை வைப்புக்கள்** | | | |
| | ஸ்ரீ லங்கா ரெலிகொம் | | 57,700.00 | 57,700.00 |
| | அசோசியேட்டற் நியூஸ் பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிற்றட் | | 27,625.00 | 27,625.00 |
| | தரவு வலையமைப்பு இலத்திரனியல் தொலைத்தொடர்பு முறைமை | | 15,000.00 | 15,000.00 |
| | ICLP நடுத் தீர்ப்பு மையம் | | 8,512.50 | 8,512.50 |
| | | | **108,837.50** | **108,837.50** |
| 16 | ஆதனமும் பொறித்தொகுதிகளும் சாதனங்களும் - இணைப்பு (பக்க இல. 13) | | | |
| 17 | **நிலுவையாகவுள்ள உரிமைக்கோரிக்கைகள்** | | | |
| | விசேட ஏற்பாடு | | 264,467,319.79 | 209,762,232.23 |
| | **உரிமைக்கோரிக்கைகளுக்கான நிகழ்சாத்திய ஏற்பாடுகள்** | | | |
| | ஜனவரி 01 அன்று உள்ளவாறான மீதி | | 33,853,473.30 | 34,090,829.67 |
| | ஆண்டின் போதான பயன்பாடு | | 8,276,684.51 | 36,500,544.00 |
| | ஆண்டிற்கான விதிப்பனவு | | 5,029,675.58 | 36,263,187.63 |
| | டிசம்பர் 31 அன்று உள்ளவாறான மீதி ஏற்பாட்டு மீதி | | 30,606,464.37 | 33,853,473.30 |
| | **உரிமைக்கோரிக்கைகளுக்கான மொத்த ஏற்பாடுகள்** | | **295,073,784.16** | **243,615,705.53** |

# இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

வருடாந்த நிதிசார் கூற்றுக்கள் - 2020

## 2020 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| குறிப்பு | | 31.12.2020 (ரூ.) | 31.12.2019 (ரூ.) |
|---|---|---|---|
| 18 | **சில்லறைக் கடனாளிகள், அட்டுறுச் செலவுகள், ஏற்பாடுகள்** | | |
| | **சில்லறைக் கடனாளிகள்** | | |
| | பொது பெறுமதிசேர் வரி (காப்புறுதிப்பத்திர கட்டுப்பணத்திலிருந்து அறவிடப்பட்ட) | | 32,662.00 |
| | பணியாட்குழு மருத்துவ நிதியம் | 612,978.00 | 570,378.00 |
| | மீளளிக்கப்படத்தக்க வைப்புக்கள் | 1,465,700.00 | 1,574,900.00 |
| | **அட்டுறு செலவுகள்** | | |
| | ஊழியர் சகாய நிதியம் | 1,170,380.98 | 1,030,753.26 |
| | ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் | 115,701.35 | 100,050.21 |
| | உழைக்கும்போது செலுத்தும் வரி | 0.00 | 5,617.00 |
| | முத்திரைத் தீர்வை | 8,525.00 | 12,000.00 |
| | தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி | 0.00 | 1,221,854.00 |
| | பிற செலுத்தப்படற்பாலவை | 8,728,879.49 | 6,901,608.66 |
| | நிலைவர அறிக்கை மீதான விதிப்பனவுகள் | 1,790,343.30 | 1,868,712.17 |
| | **ஏற்பாடுகள்** | | |
| | செலுத்தப்படற்பாலனவான கணக்காய்வுக் கட்டணங்கள் | 1,440,000.00 | 1,853,280.00 |
| | செலுத்தப்படற்பாலனவான வருமான வரி | 23,425,901.65 | 16,402,302.65 |
| | நிதியியற் சேவைகள் மீதான பெறுமதிசேர் வரி | 6,045,659.00 | 9,163,903.00 |
| | ஆண்டறிக்கை அச்சீட்டுக் கட்டணம் | 1,825,000.00 | 950,000.00 |
| | செலுத்தப்படற்பாலதான விசேட வரி | | 5,000,000.00 |
| | | 46,629,068.77 | 46,688,020.95 |
| 19 | **செலுத்தப்படற்பாலதான பணிக்கொடை** | | |
| | கணக்கிற்கான அசைவு | | |
| | ஜனவரி 01 ஆம் திகதியன்று உள்ளவாறான மீதி | 11,571,417.60 | 9,848,687.00 |
| | ஆண்டின்போது செலுத்தப்பட்டவை | 187,250.00 | 159,300.00 |
| | ஆண்டிற்கான ஏற்பாடு | 1,844,826.56 | 1,882,030.60 |
| | பொது ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்ட மேலதிக ஏற்பாடு | 0.00 | 0.00 |
| | டிசம்பர் 31 அன்று உள்ளவாறான மீதி | 13,228,994.16 | 11,571,417.60 |

குறித்துரைக்கப்பட்ட நன்மைத் திட்டம்/ பணிக்கொடை : இன்றைய கால வரையறையினுள் ஊழியர்கள் தமது சேவைக்கு நன்மையாக உழைத்துள்ள எதிர்கால நன்மைகளின் அளவை மதிப்பீடு செய்வதன் மூலமும் அதன் இன்றைய பெறுமதியை நிர்ணயிப்பதற்காக கழிவு வழங்குவதன் மூலமும் குறித்துரைக்கப்பட்ட நன்மைத் திட்டம் தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் தேறிய பொறுப்பு கணிப்பிடப்படுகிறது. 2018 ஆம் ஆண்டு முதல் LKAS 19 - ஊழியர் நன்மைகள், பயன்படுத்தப்பட்டவுடன் இன்றைய சேவைக் கிரயம் ரூபா 770,207/- மற்றும் குறித்துரைக்கப்பட்ட நன்மை பொறுப்புக்களின் இன்றைய பெறுமதி ரூபா 13,228,994/- திட்டமிடப்பட்ட அலகு கடன் முறையின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஆயுட்கனக்கர் கணிப்பீடு 2018 ஆம் ஆண்டிலிருந்து செயல்வலுப்பெறுமாறு ஆரம்பிக்கப்பட்டதுடன், நியமப்படி ஆயுட்கனக்கர் மதிப்பீடு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்பட வேண்டுமாதலால், தொடக்க கணிப்பீட்டின்போது பரிசீலிக்கப்பட்ட தள்ளுபடிக் காரணியினால் அதிகரித்த 2019 அளவுகளைப் பயன்படுத்துவதன் மூலம் 2020 ஆம் ஆண்டுக்கான பெறுமதிகள் வருவிக்கப்பட்டுள்ளது.

| | | 31.12.2020 (ரூ.) | 31.12.2019 (ரூ.) |
|---|---|---|---|
| 20 | **ஈடுபடுத்தப்பட்ட மூலதனம்** | | |
| | உதவப்பட்ட மூலதனம் - திறைசேரி | 30,000,000.00 | 30,000,000.00 |

21 **ஒதுக்குகள் - பின்னிணைப்பு (பக்க இல. 14)**

22 **செலாவணி விகிதம்**

2020 டிசம்பர் மாத இறுதியில் வெளிநாட்டுப் புழக்கப் பணத்தை மாற்றீடு செய்வதற்கு பின்வரும் செலாவணி விகிதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| ஐ.அ.டொலர் | - | 184.12 |
| யூரோ | - | 225.54 |

# இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

## வருடாந்த நிதிசார் கூற்றுக்கள் - 2020

### 2020 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

23 **நிலையான சொத்துக்களின் மீள்பெறுமான மதிப்பீடு மீதான வெளிக்காட்டுகை**

மீள்பெறுமான மதிப்படும் பயனுறும் திகதியும்

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 01.01.2018 |
| மோட்டார் வாகனங்கள் | 31.12.2016 |
| கணினிகளும் அச்சீட்டுப் பொறிகளும் | 31.12.2016 |
| அலுவலக உபகரணங்கள் | 31.12.2016 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 31.12.2016 |

அரசாங்க விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டது.

சோதனை செய்த பின்னரும் அவதானித்த பின்னரும் பெறுமதியைப் பாதிப்பும் இயைபான எல்லாக் காரணிகளையும் கவனத்திலெடுத்து இயன்ற அளவு செம்மையான முறையில் பெறுமான மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மீள்பெறுமான மதிப்பீட்டினால் அடையப்பட்ட பெறுமதி சொத்துக்களின் சந்தைப் பெறுமதியாகும்.
செலவு மாதிரியின் கீழ் மீள்பெறுமானம் மதிப்பிடப்பட்ட சொத்துக்களின் கொண்டுசெல்லும் பெறுமதி.

| | |
|---|---:|
| கட்டிடங்கள் | 3,327.35 |
| மோட்டார் வாகனங்கள் | 0.00 |
| கணினிகளும் அச்சீட்டுப் பொறிகளும் | 0.00 |
| அலுவலக உபகரணங்கள் | 0.00 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 8,951.62 |

24 **நிகழ்சாத்தியப் பொறுப்புக்கள்**

(அ) கூட்டுத்தாபனத்திற்கு எதிராக கோப்பிடப்பட்ட வழக்குகள்

- இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக சதர்ன் சன் ரீஸ் (தனியார்) கம்பனி HC (சிவில்) 193 2004 (1) 17.02 மி.ரூ. பெறுமதியான உரிமைக்கோரிக்கையொன்று நிராகரிக்கப்பட்டதன் மேல் ஏற்றுமதியாளர் ஒருவரினால் கொழும்பு வர்த்தக மேல்நீதிமன்றத்தில் இவ்வழக்கு தாக்கல்செய்யப்பட்டது.

  தற்போதைய நிலைமை: ஏற்றுமதியாளருக்கு சாதகமாகவே தீர்ப்பளிக்கப்பட்டதுடன், இழப்பீட்டுத் தொகை கிடைக்கப்பெற முன்னர் ஏற்றுமதியாளர் சில நிபந்தனைகளைப் பூர்த்திசெய்ய வேண்டிய தேவை இருந்தது. இதுவரை ஏற்றுமதியாளர் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்திசெய்யத் தவறியதன் காரணமாக கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

(ஆ) 2020 டிசம்பர் 31 அன்று செயல்வலுப்பெறும் கூட்டுத்தாபனத்தின் மொத்த பொறுப்புக்கள்

| | | |
|---|---|---:|
| செல்லுபடியான ஏற்றுமதிக் கொடுப்பனவுக் காப்புறுதிப் பத்திரங்கள் | ரூ. | 12,677,000,000.00 |
| செல்லுபடியான கடன் உத்தரவாதங்கள் | ரூ. | 1,635,323,479.00 |
| உயர்மட்ட பொறுப்பு | ரூ. | 14,312,323,479.00 |

25 **முதலீட்டு நிதியக் கணக்கு**

நிதியியற் சேவைகளின்மீது 8% பெறுமதிசேர் வரியையும் வருமான வரியில் 5ஓ சேர்மானத்திற்குச் சமமான ஒரு தொகையையும் திறைசேரியின் உத்தரவின் பேரில் வருடாந்த அடிப்படையில் மாற்றல்செய்வதற்கு 2011 நவம்பர் மாதம் முதலீட்டு நிதியக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டது. கூட்டுத்தாபனம் நிதிக் கடன் வழங்குவதில் ஈடுபடவில்லை. ஆகையால், இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தல்களுக்கமைய முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன், இம்முதலீடுகள் நீண்டகால முதலீடுகளின் கீழ் பட்டியல்படுத்தப்பட்டுள்ளன.

26 **சம்பந்தப்பட்ட திறத்தவர்களின் அக்கறை**

2020 ஆம் ஆண்டின்போது சம்பந்தப்பட்ட திறத்தவர்களின் அக்கறை காணப்படவில்லை.

# இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

## ஆதனங்களும் பொறித்தொகுதிகளும் சாதனங்களும் - 2020

| உருப்படி | 2020.01.01 அன்று உள்ளவாறான கிரயம் மீதான சொத்துக்கள் | 2020.01.01 அன்று உள்ளவாறான மீள்பெறுமான மதிப்பீடு மீதான சொத்துக்கள் | சேர்த்தல்கள் 2020 | கையுதிர்ப்புகள் 2020 | 2020.12.31 அன்று உள்ளவாறான தேறிய பெறுமானம் | 2020.01.01 அன்று உள்ளவாறான பெறுமானத் தேய்வு | 2020 ஆம் ஆண்டின் தேய்மானம் | 2020.12.31 அன்று உள்ளாவாறான திரண்ட பெறுமானத் தேய்வு | 2020.12.31 அன்று உள்ளவாறான எழுத்திலான பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| கட்டிடங்கள் | 0.00 | 176,500,000.00 | 0.00 | 0.00 | 176,500,000.00 | 17,650,000.00 | 8,825,000.00 | 26,475,000.00 | 150,025,000.00 |
| மோட்டார் வாகனங்கள் | 0.00 | 13,400,000.00 | 0.00 | 0.00 | 13,400,000.00 | 8,040,000.00 | 2,680,000.00 | 10,720,000.00 | 2,680,000.00 |
| மென்பொருள்கள் | 6,672,949.77 | 0.00 | 0.00 | 0.00 | 6,672,949.77 | 6,613,066.77 | 59,871.00 | 6,672,937.77 | 12.00 |
| கணினிகளும் | 0.00 | 2,846,500.00 | 0.00 | 0.00 | 2,846,500.00 | 2,134,875.00 | 711,625.00 | 2,846,500.00 | 0.00 |
| அச்சீட்டுப் பொறியும் | 2,576,952.33 | 0.00 | 0.00 | 0.00 | 2,576,952.33 | 1,694,167.07 | 644,238.07 | 2,338,405.14 | 238,547.19 |
| தளபாடங்களும் | 64,059.75 | 0.00 | 0.00 | 0.00 | 64,059.75 | 15,779.53 | 6,403.00 | 22,182.53 | 41,877.22 |
| பொருத்திகளும் | 0.00 | 1,345,200.00 | 0.00 | 0.00 | 1,345,200.00 | 403,560.00 | 134,520.00 | 538,080.00 | 807,120.00 |
| அலுவலக | 0.00 | 668,750.00 | 0.00 | 0.00 | 668,750.00 | 501,562.50 | 167,187.50 | 668,750.00 | 0.00 |
| உபகரணங்கள் | 437,187.49 | 0.00 | 84,056.00 | 0.00 | 521,243.49 | 265,385.24 | 129,029.87 | 394,415.11 | 126,828.38 |
| **மொத்தம்** | **9,751,149.34** | **194,760,450.00** | **84,056.00** | **0.00** | **204,595,655.34** | **37,318,396.11** | **13,357,874.44** | **50,676,270.55** | **153,919,384.79** |

# இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

## வருடாந்த நிதிசார் கூற்றுக்கள் - 2020

## 2020 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று உள்ளவாறான ஒதுக்குகள்

| | பொது ஒதுக்கு ரூ. | மீள்பெறுமான மதிப்பீட்டு ஒதுக்கு ரூ. | முதலீட்டு நிதியம் ரூ. | ஈட்டப்பட்ட கட்டுப்பணம் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 2019 ஜனவரி 01 அன்று உள்ளவாறான மீதி | **2,131,527,483.35** | **141,710,389.74** | **58,507,949.05** | **23,859,701.05** | **2,355,605,523.19** |
| மீள்பெறுமான மதிப்பீட்டு ஒதுக்குகளிலிருந்தான மாற்றல்கள் | 7,888,946.00 | -7,888,946.00 | | | 0.00 |
| 2019 ஆம் ஆண்டிற்கான தேறிய இலாபம் | 242,250,845.43 | | | | 242,250,845.43 |
| 2019 ஆம் ஆண்டினுள் மாற்றல்கள் | | | | -3,678,463.98 | -3,678,463.98 |
| | | | | | 0.00 |
| | | | | | 0.00 |
| **2019 டிசம்பர் 31 அன்று உள்ளவாறான மீதி** | **2,381,667,274.78** | **133,821,443.74** | **58,507,949.05** | **20,181,237.07** | **2,594,177,904.64** |
| மீள்பெறுமான மதிப்பீட்டு ஒதுக்குகளிலிருந்தான மாற்றல்கள் | 8,154,758.82 | -8,154,758.82 | | | 0.00 |
| 2020 ஆம் ஆண்டிற்கான தேறிய இலாபம் | 223,348,932.03 | | | | 223,348,932.03 |
| 2020 ஆம் ஆண்டினுள் மாற்றல்கள் | | | | -1,987,999.94 | -1,987,999.94 |
| 2020 ஆம் ஆண்டிற்கான விசேட அறவீடுகள் | -19,848,076.25 | | | | -19,848,076.25 |
| **2020 டிசம்பர் 31 அன்று உள்ளவாறான மீதி** | **2,593,322,889.38** | **125,666,684.92** | **58,507,949.05** | **18,193,237.13** | **2,795,690,760.48** |

# இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (SLECIC)

## குறிப்பிடத்தகு கணக்கீட்டுக் கொள்கைகள்

**பொதுவான தகவல்கள்**

இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், 1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டதுடன், 1979 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 08 ஆந் திகதியன்று வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பித்தது.

கூட்டுத்தாபனத்தின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் 4 ஆம் மாடி, NDB-EDB கோபுரம், இல.42, நவம் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரியில் அமைந்துள்ளது.

**குறிப்பிடத்தகு கணக்கீட்டுக் கொள்கைகள் பற்றிய சுருக்கம்**

இந்நிதிசார் கூற்றுக்களைத் தயாரிப்பதில் பயன்படுத்தப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் கீழ் தரப்பட்டுள்ளன.

**01. தயாரிப்பு அடிப்படை**

**1.1 முக்கிய செயற்பாடுகளும் தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் தன்மையும்**

வர்த்தக மற்றும் அரசியல் காரணிகளின் பேரில் வெளிநாட்டு வாங்குநர்களினால் கொடுப்பனவு செய்யப்படாமை ஆபத்தைக் காப்பீடுசெய்து ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்றுமதிக் கொடுப்பனவு காப்புறுதிப் பத்திரங்களை விநியோகிப்பதன் மூலம் ஏற்றுமதி வர்த்தகத்தின் ஆபத்துக்களை பொறுப்பேற்றலும் ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களின் ஏற்றுமதி வியாபாரங்களுக்கான நிதித் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கு முக்கியமாக தாராள நிதிக் கொடைகளை மேற்கொள்வதற்கு வசதியளிப்பதற்காக வங்கிகளுக்கும் பிற நிதி நிறுவனங்களுக்கும் உத்தரவாதங்களை வழங்குதலும் கூட்டுத்தாபனத்தின் முக்கிய செயற்பாடுகளாகும்.

**1.2 அளவீட்டு அடிப்படை**

2020 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று உள்ளவாறும் முடிவடைந்த ஆண்டுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் ஐந்தொகை, வருமான செலவினக் கணக்கு, ஒப்புரவிலான (உரிமைமுதல்) மாற்றங்கள், காசோட்டங்கள் என்பன கணக்கீட்டுக் கொள்கைகளுடனும் குறிப்புக்களுடனும் சேர்த்து (நிதிசார்கூற்று), இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (SLAccS) இணங்கியொழுகுகின்றன. இந்நிதிசார் கூற்றுக்கள் இலங்கை ரூபாய்களில் முன்வைக்கப்படுகின்றன. நிதிசார் கூற்றுக்கள் இலங்கை ரூபாய்கள் வரலாற்றுமுறைக் கிரய அடிப்படையின்மீது தயாரிக்கப்படுவதுடன், நிதிசார்

கூற்றுக்களைப் பாதிக்கின்ற பணவீக்கம்சார் காரணிகளுக்கான சீர்படுத்தல்களின்றி தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகின்றன.

### 1.3 மதிப்பீடுகளையும் தீர்ப்புகளையும் பயன்படுத்தல்

நிதிசார் கூற்றுக்களைத் தயாரித்தல், கொள்கைகளினதும் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் வருமானத்தினதும் செலவுகளினதும் அறிக்கையிடப்பட்ட தொகைகளில் பயன்பாட்டுடன் தொடர்புபட்ட தீர்ப்புகளையும் மதிப்பீடுகளையும் ஊகங்களையும் செய்வதற்கு முகாமைத்துவத்தைத் தேவைப்படுத்துகின்ற இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (LKAS) இலங்கைக் கணக்கீட்டு வரலாற்று முறையான அனுபவத்தினதும், சூழ்நிலைகளின்கீழ் நியாயமானவையாகவுள்ளனவென நம்பப்படுகின்ற பல்வேறு ஏனைய காரணிகளினதும் அடிப்படையிலானவை. இதன் பெறுபேறுகள், ஏனைய மூலங்களிலிருந்து உடனடியாக வெளிப்படையாகவிராத சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் நடைமுறைப் பெறுமதிகளின்மீது தீர்ப்புக்களைச் செய்வதன் அடிப்படையாக அமையும். மதிப்பீடுகளும் அடிப்படை ஊகங்களும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அடிப்படையில் மீளாயப்படுகின்றன. மதிப்பீடானது எந்தக் காலப்பகுதியில் செய்யப்படுகின்றதோ அந்தக் காலப்பகுதியுடன் மட்டுமே மீளாய்வு தொடர்புபட்டிருப்பின், கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான மீளாய்வுகள், அக்காலப்பகுதியில் அல்லது மீளாய்வானது நடப்பு மற்றும் எதிர்காலக் காலப்பகுதிகளுடன் தொடர்புபட்டிருப்பின், மீளாய்வுக் காலப்பகுதியிலும் எதிர்காலக் காலப்பகுதிகளிலும் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன.

### 1.4 தொடர்ந்துசெல்லும் எண்ணக்கரு (Going Concern)

நிதிசார் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, எதிர்நோக்கத்தக்க எதிர்காலத்தில் தொடர்ந்துசெல்லும் முயற்சியொன்றாகத் தொடர்வதற்கு ஒழுங்கமைப்பின் பொறுப்புப் பற்றிய மதிப்பீட்டை நாம் செய்துள்ளோம். எதிர்காலம் பற்றிக் கிடைக்கக்கூடிய எல்லாத் தகவல்களையும் கணக்கிலெடுத்து, ஒழிவுக்குட்படுத்துதல் அல்லது வியாபாரத்தை இல்லாதொழித்தலுக்கான தேவையை நாம் எதிர்நோக்கவில்லை.

## 02. ஒப்பீட்டளவிலான தகவல்கள்

கணக்கீட்டுக் கொள்கைகள் கூட்டுத்தாபனத்தினால் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளனவென்பதுடன், முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்டவற்றையும் ஒத்திருக்கின்றன.

## 03. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள்

கீழே தரப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள், இந்நிதிசார் கூற்றுக்களில் முன்வைக்கப்பட்ட எல்லாக் காலப்பகுதிகளுக்கும் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளனவென்பதுடன், கூட்டுத்தாபனத்தினால் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டுமுள்ளன.

### 3.1 வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்கள்

நிதிசார் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட உருப்படிகள் இலங்கை ரூபாய்களைப் (LKR) பயன்படுத்தி அளவீடு செய்யப்படுகின்றன. வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள், அக்கொடுக்கல்வாங்கல்கள் செய்யப்பட்ட திகதிகளில் நிலவுகின்ற வீதங்களைப் பயன்படுத்தி அறிக்கையிடும் நாணயமாக மாற்றப்படுகின்றன. அத்தகைய கொடுக்கல்வாங்கல்களின் கொடுத்துத் தீர்த்தலிலிருந்து விளைவின்ற வெளிநாட்டுச் செலாவணி ஈட்டுகைகளும் நட்டங்களும் வருமானக்கூற்றில் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன. ஐந்தொகைத் திகதியில் வெளிநாட்டு நாணயங்களில் குறித்துக்காட்டப்பட்ட பண வகையான சொத்துக்களும் பொறுப்புக்களும், அத்திகதியில் நிலவுகின்ற வெளிநாட்டுச் செலாவணி விகிதத்தில் இலங்கை ரூபாய்களாக மாற்றப்படுகின்றன. 2018 நிதியாண்டிலிருந்து செயல்வலுப்பெறுமாறு LKAS 21 இன் பிரகாரம் வெளிநாட்டு நாணயங்களில் குறித்துக்காட்டப்பட்ட பண வகையான சொத்துக்களையும் பொறுப்புக்களையும் மாற்றுவதிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணி ஈட்டுகைகளும் நட்டங்களும், இலாப நட்டக் கணக்கில் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன.

2018 ஆம் ஆண்டுக்கு முந்திய தேறிய வெளிநாட்டுச் செலாவணி ஈட்டுகைகளும்/ நட்டங்களும், செலாவணி விகிதச் சமப்படுத்துகை ஒதுக்கினுள் (Foreign Currency Equalization Reserve) தனிவேறாக ஏற்றங்கீகரிக்கப்பட்டதுடன், 2018 ஆம் ஆண்டிலிருந்து அதனைச் செயல்வலுப்படுத்துவது நிறுத்தப்பட்டுள்ளது.

### 3.2 ஆதனமும் பொறித்தொகுதியும் சாதனமும்

#### (அ) ஏற்றங்கீகாரமும் அளவீடும்

ஆதனமும் பொறித்தொகுதியும் சாதனமும் ஒன்றுதிரண்ட தேய்மான மற்றும் ஒன்றுதிரண்ட பாதிப்பு நட்டங்களைக் கழித்து ஆகுசெலவில்/மீள்பெறுமான மதிப்பீட்டில் கூறப்படுகின்றன. ஆகுசெலவு என்பது, சொத்தின் கொள்ளலுக்கு நேரடியாக ஏற்றிக்கூறப்படற்பாலதான செலவினத்தையும் உள்ளடக்கும். சுயநிர்மாணச் சொத்துக்களின் ஆகுசெலவு, ஆகுசெலவுப் பொருள்கள், நேரடித் தொழிலாளர் செலவுகள், சொத்துக்களின் உட்கருதப்பட்ட பயன்பாட்டுக்காக அவற்றைத் தொழிற்பாட்டு நிலைமைக்குக் கொண்டுவருவதற்கு நேரடியாக ஏற்றிக்கூறப்படற்பாலனவான வேறேவையேனும் ஆகுசெலவுகள் என்பவற்றையும், உருப்படிகளைக் கழற்றி அகற்றுவதற்கும் அவை அமைந்துள்ள அமைவிடத்தை மீட்டெடுப்பதற்குமான ஆகுசெலவுகளையும் உள்ளடக்கும். ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதன உருப்படியொன்று வெவ்வேறு பயனுகர் காலங்களைக்கொண்ட பாரிய ஆக்கக்கூறுகளைக் கொண்டுள்ளவிடத்து, அவை, ஆதனத்தின், பொறித்தொகுதியின் மற்றும் சாதனத்தின் தனிவேறான உருப்படிகளாகக் கணக்குக் காட்டப்படுகின்றன.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதன உருப்படிகளைக் கையுதிர்ப்பதன் மேல் ஏற்படும் ஈட்டுகைகளும் நட்டங்களும், கையுதிர்ப்பிலிருந்தான வரும்படிகளை ஆதனம், பொறித்தொகுதி, சாதனம் என்பன கொண்டுள்ள தொகையுடன் ஒப்பிடுவதன்மூலம் தீர்மானிக்கப்பட்டு, வருமானக்கூற்றில் "பிற தொழிற்பாட்டு வருமானத்தினுள்" தேறியனவாக ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன.

**(ஆ) பெறுமானத் தேய்வு**

பெறுமானத் தேய்வுக்கான ஏற்பாடானது அவற்றின் ஆகுசெலவை அல்லது மீள்பெறுமானம் மதிப்பீடுசெய்யப்பட்ட தொகைகளை, இறையிலிக் காணி தவிர எல்லா ஆதனங்களினதும், பொறித்தொகுதிகளினதும், சாதனங்களினதும் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலங்களின்மீது அவற்றின் எஞ்சியுள்ளபெறுமதிகளுக்கு அவற்றின் ஆகுசெலவை அல்லது மீளப்பெறுமானம் மதிப்பிடப்பட்ட தொகைகளைக் குறித்தொதுக்குவதற்குநேர்கோட்டுமுறையொன்றைப்பயன்படுத்திகணக்கிடப்படுகிறது.

பயன்படுத்தப்பட்ட பிரதான வருடாந்த விகிதங்கள் பின்வருமாறாகும்:

| | | |
|---|---|---|
| 1. | கட்டிடங்கள் | 5% |
| 2. | அலுவலகச் சாதனங்கள் | 25% |
| 3. | மோட்டார் வாகனங்கள் | 20% |
| 4. | மென்பொருள்கள் | 25% |
| 5. | தளபாடங்களும் பொருத்திகளும் | 10% |

மீளப்பெறுமானம் மதிப்பிடப்பட்ட சொத்துக்கள் மீதான கருத்துருவப் பெறுமானத்தேய்வு வரலாற்று முறையான ஆகுசெலவுத் தேய்மான விதிப்பனவின் மேல் அச்சொத்துக்களின் மீதான வருடாந்த பெறுமானத்தேய்வு விதிப்பனவின் விஞ்சுதொகைக்குச் சமமான தொகையொன்று மீள்பெறுமான மதிப்பீட்டிலான மேன்மிகையிலிருந்து வருடாந்தம் ஒன்றுதிரண்ட இலாபத்திற்குக் கைமாற்றப்படுகிறது. சொத்துக்களின் கொண்டுசெல்லும் தொகை அதன் மதிப்பிடப்பட்ட அறவிடப்படற்பாலதான தொகையிலும் பார்க்க அதிகமாகவிருப்பின், சொத்துக்களின் கொண்டுசெல்லும் தொகை அதன் அறவிடப்படற்பாலதான தொகைக்கு உடனடியாகக் குறைக்கப்படுகிறது.

**(இ) கையுதிர்ப்பு**

கையுதிர்ப்புக்கள்மீதான ஈட்டுகைகளும் நட்டங்களும், கொண்டுசெல்லும் தொகையுடன் வரும்படிகளை ஒப்பிடுவதன்மூலம் தீர்மானிக்கப்படுகின்றன என்பதுடன், வருமானக்கூற்றில் தொழிற்பாட்டு இலாபத்தை அல்லது நட்டத்தைத் தீர்மானிப்பதில் ஏற்றங்கீகரிக்கவும்படுகின்றன. மீளப்பெறுமானம் மதிப்பிடப்பட்ட சொத்துக்கள் விற்பனை செய்யப்படும்போது, மீள்பெறுமான மதிப்பீட்டு ஒதுக்கில் உள்ளடக்கப்பட்ட தொகை, வைத்திருக்கப்பட்ட ஈட்டுகைகளுக்குக் கைமாற்றப்படுகிறது.

**(ஈ) பாதிப்பு (மதிப்பிழப்பு) ( Impairment)**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனம் கொண்டுசெல்லும் பெறுமதி, ஒன்றில் வருடாந்தம் அல்லது நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளிலான மாற்றங்கள், அக்கொண்டுசெல்லும் பெறுமதி அறவிடப்பட முடியாதிருக்கலாமெனச் சுட்டிக் காட்டும்போது மீளாயப்படுகிறது. அத்தகைய சுட்டிக்காட்டுகை இருப்பின், அத்துடன் கொண்டுசெல்லும் பெறுமதி மதிப்பிடப்பட்ட அறவிடப்படற்பாலதான தொகையை விஞ்சுமிடத்து, சொத்துக்கள் அவற்றின் அறவிடப்படத்தக்க தொகைக்கு குறைக்கப்படுகிறது. பாதிப்பு நட்டங்கள், அதே சொத்துக்காக முன்னைய மீள்பெறுமான மதிப்பீட்டு மேன்மிகையை அது எதிர்மாறாக்கினாலொழிய, வருமானக்கூற்றில்

ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன.

**(உ) ஆதனம், பொறித்தொகுதி, சாதனம் என்பவற்றின் விற்பனைகளினாலான இலாபம்/நட்டம்**

ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் சாதனத்தின் பின்னடைவு மீதான அல்லது கையுதிர்ப்பின் மீதான எவையேனும் ஈட்டுகைகள் அல்லது நட்டங்கள், விற்பனை இடம்பெறுகின்ற காலப்பகுதியில் ஏற்றங்கீகரிக்கப்பட்டு ஏனைய எல்லாமடங்கிய வருமானமாக வகுப்பாக்கஞ்செய்யப்படுகின்றன.

**3.4 நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூலதன வேலை**

ஐந்தொகைத் திகதியன்றுள்ளவாறு பூர்த்திசெய்யப்படாதவையும் ஆண்டின்போது உறப்பட்டவையுமான மூலதனச் செலவுகள் முற்பணக் கொடுப்பனவுகளாகக் காட்டப்படுகின்றன. ஆண்டின்போது பூர்த்திசெய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ள மூலதனச் சொத்துக்கள், ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனம் என்பவற்றுக்குக் கைமாற்றப்பட்டுள்ளன.

**3.5 அருவச் சொத்துக்கள்** (Intangible Assets)

கணிசமானளவு பயனுகர் ஆயுட்காலங்களையுடையவையும் கூட்டுத்தாபனத்தினால் கொள்ளப்படுகின்றவையுமான அருவச் சொத்துக்கள், ஒன்றுதிரண்ட கடன்தீர்த்தல் மற்றும் ஒன்றுதிரண்ட பாதிப்பு (மதிப்பிழப்பு) நட்டங்களைக் கழித்து ஆகுசெலவில் அளவீடு செய்யப்படுகின்றன. கணினி மென்பொருள் நிகழ்ச்சித்திட்டங்களைப் பேணுதலுடன் இணைந்த ஆகுசெலவுகள், உறப்பட்டவாறான செலவொன்றாக ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன. கூட்டுத்தாபனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு கட்டுப்படுத்தப்பட்ட இனங்காணத்தக்க மற்றும் தனித்துவமான மென்பொருள் உற்பத்திப் பொருள்களின் வடிவமைப்புக்கும் பரீட்சிப்புக்கும் நேரடியாக ஏற்றிக்கூறப்படற்பாலனவான அபிவிருத்திச் செலவுகள் அருவச் சொத்துக்களாக ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன.

**(அ) ஏற்றங்கீகாரத்தின் அடிப்படை**

சொத்துக்களுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலனவான எதிர்காலப் பொருளாதார நன்மைகள் உருவகத்தைச் சொன்றடைந்து ஒன்றுதிரண்ட கடன்தீர்த்தல் (இலதாக்கல்) (accumulated amortization) மற்றும் ஒன்றுதிரண்ட பாதிப்பு நட்டங்களைக் (accumulated impairment losses) கழித்து ஆகுசெலவை நம்பகமான முறையில் அளவீடுசெய்து ஆகுசெலவில் கொண்டிருக்கக்கூடியமை நிகழ்தகவாக இருப்பின், அருவச்சொத்தொன்று ஏற்றங்கீகரிக்கப்படுகிறது.

**(ஆ) அடுத்துப்பின்னரான செலவினம்**

அடுத்துப் பின்னரான செலவினம், அது எந்தக் குறிப்பிட்ட சொத்துக்கள் தொடர்பானதோ அந்தக் குறிப்பிட்ட சொத்துக்களில் அடங்கியுள்ள எதிர்காலப் பொருளாதார நன்மைகளை அது அதிகரித்தால் மட்டுமே மூலதனமாக்கப்படுகிறது. உள்ளக ரீதியில் தோற்றுவிக்கப்பட்ட நற்பெயரும் வகைகளும் உட்பட, மற்றெல்லாச் செலவுகளும் உறப்பட்டவாறாக வருமானக்கூற்றில் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன.

**(இ) பின்னடைவும் கையுதிர்ப்பும்**

அருவச் சொத்தொன்று, கையுதிர்ப்பின்மீது அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து அடுத்துப் பின்னரான கையுதிர்ப்பிலிருந்தும் எதிர்காலப் பொருளாதார நன்மைகள் எவையும் எதிர்பார்க்கப்படாதபோது ஏற்றங்கீகரிக்கப்படுவதில்லை.

**(ஈ) கடன் தீர்த்தல் (இலதாக்கல்)**

அருவச் சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலங்களின்மேல் நேர்கோட்டு அடிப்படையின் மீது அவை பயன்பாட்டுக்குக் கிடைக்கக்கூடியனவாகவுள்ள திகதியிலிருந்து, கடன்தீர்த்தலானது (Amortization) வருமானக்கூற்றில் ஏற்றங்கீகரிக்கப்படுகிறது.

**(உ) பாதிப்பு (மதிப்பிழப்பு)**

பாதிப்புகளின் ஏதேனும் சுட்டிக்காட்டுகை இருப்பதனைத் தீர்மானிப்பதற்கு ஒவ்வொரு ஐந்தொகைத் திகதியிலும் கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களின் கொண்டுசெல்லும் தொகைகள் மீளாயப்படுகின்றன. அத்தகைய ஏதேனும் சுட்டிக்காட்டுகை இருப்பின், சொத்துக்களின் அறவிடப்படற்பாலதான தொகை மதிப்பிடப்படுகிறது. ஒரு சொத்து கொண்டுள்ள தொகை அல்லது அதன் பணம் தோற்றுவிக்கும் அலகு அதன் அறவிடப்படற்பாலதான தொகையை அல்லது அதன் பணம் தோற்றுவிக்கும் அலகு அதன் அறவிடப்படற்பாலதான தொகையை விஞ்சும்போதெல்லாம், பாதிப்பு நட்டம் ஏற்றங்கீகரிக்கப்படுகிறது. பாதிப்பு நட்டங்கள் வருமானக்கூற்றில் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன.

**3.6 முதலீட்டு ஆதனங்கள்**

நீண்டகால ஈட்டுகைகளுக்காக அல்லது மூலதன மதிப்பேற்றத்துக்காக அல்லது இரண்டுக்காகவும் வைத்திருக்கப்பட்டு முதலீட்டு ஆதனமாக வகுப்பாக்கஞ்செய்யப்படும் ஆதனம். தொடக்க ஏற்றங்கீகாரத்துக்குப் பின்னர் முதலீட்டு ஆதனம் ஆகுசெலவைக் கொண்டிருக்கும்.

**3.7 குறுகியகால முதலீடுகள்**

**(அ) உள்நாட்டு நாணயத்திலான குறுகியகால முதலீடுகள்**

ஐந்தொகைத் திகதியன்று நிலவுகின்ற செலாவணி வீதத்தில் பெறுமதி மதிப்பிடப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் குறிக்கப்பட்ட நிலையான வைப்புக்கள் தவிர, கூட்டுத்தாபனம் அரசாங்கத் திறைசேரி உண்டியல்களிலும் ஏனைய நிலையான வருமான முதலீடுகளிலும் குறுகியகால மேன்மிகை நிதிகளைச்செய்து ஆகுசெலவில் கணக்கீடுசெய்துள்ளது. இம்முதலீடுகளின்மீது ஒன்றுதிரண்ட வட்டி, வருமானக்கூற்றில் ஏற்றங்கீகரிக்கப்படுகிறது.

**(ஆ) வெளிநாட்டு நாணயத்திலான குறுகியகால முதலீடுகள்**

வெளிநாட்டு நாணயத்தில் எதிர்கால உரிமைக்கோரிக்கைகள் கடப்பாட்டை ஈடுசெய்வதற்குத்தேவையான நிதிகள் தள்ளிவைக்கப்பட்டு, வட்டி ஈட்டுகின்ற வெளிநாட்டு

நாணயக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளன. ஒன்றுதிரண்ட வட்டிகள், கொடுக்கல் வாங்கல் திகதியில் நிலவுகின்ற விகிதத்தில் மாற்றப்பட்ட வருமானக்கூற்றில் ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ளன. நிதிசார் கூற்றுக்களில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட முதலீடுகளின் பெறுமதிகள் ஐந்தொகைத் திகதியன்று நிலவுகின்ற விகிதத்தில் மாற்றப்படுகின்றன.

### 3.7.1 நிதிசார் முதலீடுகள்: முதிர்வு

திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், நிலையான வைப்புக்கள், கடன் தொகுதிப்பத்திரங்களில் செய்யப்பட்ட எல்லா குறுகியகால மற்றும் நீண்டகால முதலீடுகள் முதிர்வடைவதுடன், கிடைக்கப்பெற்ற வட்டியுடன் ஆகுசெலவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### 3.7.2 நிதிசார் சாதனங்களிலிருந்து எழுகின்ற அபாயம்

குறுகியகால மற்றும் நீண்டகால முதலீடுகள், திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், அரச வங்கி நிலையான வைப்புக்கள் மற்றும் கடன் தொகுதிப்பத்திரங்களிற் செய்யப்பட்ட முதலீடுகளைக் கொண்டுள்ளன. கடன் தொகுதிப்பத்திரங்கள் வட்டிவீத அபாயம், மீள்முதலீட்டு அபாயம், தவணை தவறுகை அபாயம் மற்றும் திரவத்தன்மை அபாயம் என்பவற்றைக் கொண்டுள்ளன. நிலையான வைப்புக்கள் முதிர்வு வரை வைத்திருக்கப்படுவதனால் உள்நாட்டு புழக்க நாணய நிலையான வைப்புக்களுக்கு உள்ளார்ந்தனவாகவுள்ள ஏனைய அபாயங்களுடன் சேர்த்து புழக்க நாணய ஏற்றவிறக்கங்களின் அபாயத்துக்கு வெளிக்காட்டப்பட்டனவாகவுள்ள வெளிநாட்டு புழக்க நாணயத்தில் குறிக்கப்பட்ட நிலையான வைப்புக்கள் தவிர, அவை தவணை தவறுகை மற்றும் திரவத்தன்மை அபாயங்களை மட்டுமே கொண்டுள்ளன. இம்முதலீடுகளை அரச வங்கிகளில் வைத்திருக்கும் சந்தர்ப்பத்தில், கூறப்பட்ட எல்லா அபாயங்களும், வெளிநாட்டு புழக்க நாணயப் பெறுமதி ஏற்றவிறக்க அபாயம் தவிர மிகக் குறைந்தனவாகவுள்ளன.

## 3.8 வியாபார மற்றும் ஏனைய பெறப்படற்பாலவை

வியாபார மற்றும் ஏனைய பெறப்படற்பாலவை, தேறிப்பெறப்படுவதற்கு மதிப்பிடப்பட்ட தொகையில் கூறப்படுகின்றன. மூன்றாண்டு காலப்பகுதிக்கு மேற்பட்ட நிலுவையாகவுள்ள அறவிடமுடியா, ஐயக் கடன்களுக்காக நிதிசார் கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 3.9 பொருட்பதிவேடுகள்

எழுதுகருவிவகை மற்றும் நுகரத்தக்க உருப்படிகளின் கையிருப்பைப் பொருட்பதிவேடுகள் கொண்டுள்ளன. காலங்கடந்த மற்றும் பழுதுபார்க்கப்படத்தக்க இனங்களுக்காக ஏற்பாடுசெய்த பின்னர், பொருட்பதிவேடுகள் ஆகுசெலவின் குறைந்த தொகையில் அல்லது தேறிய தேறிப்பெறப்படத்தக்க பெறுமதியில் பெறுமதி மதிப்பிடப்படுகின்றன. தேறிய தேறிப்பெறப்படத்தக்க பெறுமதி என்பது, தொழிலின் சாதாரண நெறியின்போது பொருட்பதிவேடுகள் எந்த விலைக்கு விற்பனைசெய்யப்பட முடியுமோ அந்த விலையாகும்.

## 3.10 காசும் காசுக்குச் சமமானவையும்

காசும் காசுக்குச் சமமானவையும், காசுப்பாய்ச்சல் கூற்றின் நோக்கத்துக்காக காசின் அறியப்பட்ட தொகைகளுக்கு உடனடியாக மாற்றத்தக்கனவான கையிலுள்ள காசும் குறுகியகால உயர் திரவத்தன்மைகொண்ட முதலீடுகளும் என வரைவிலக்கணம் கூறப்படுகின்றன. காசும் காசுக்கு நிகரானவையும், கையிலுள்ள காசையும் தேறிய நிலுவையாகவுள்ள வங்கி மேலதிகப்பற்றுக்களையும் குறுகியகாலக் கடன் பெறுகைகளையும் குறுகியகால முதலீடுகளையும் கொண்டுள்ளன.

### 3.11 காசுப்பாய்ச்சல்கூற்றுக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமத்துக்கு (இ.க.நி.) இணங்க இல. 09 - காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள், நேரில் முறையைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளன.

## 04. ஊழியர் நன்மைகள்

### (அ) வரைவிலக்கணங்கூறப்பட்ட நன்மைத்திட்டம் - ஓய்வுபெறுகைப் பணிக்கொடை

பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழான ஓய்வுபெறுகை நன்மைக் கட்டுப்பாட்டுக்கான பொறுப்பு, ஒழுங்கமைப்பின் ஊழியர்களைக் காப்பீடுசெய்கின்ற வரையறுக்கப்பட்ட நன்மைத்திட்டமாகும். இப்பொறுப்பைஈடுசெய்வதற்கென, முதலாவது சேவை ஆண்டிலிருந்து தொடங்குகின்ற ஒவ்வொரு பூர்த்திசெய்யப்பட்ட சேவை ஆண்டுக்கும் எல்லா ஊழியர்களினதும் நிதியாண்டின் கடைசி மாதத்தின் அரைமாதச் சம்பளத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட தொகைக்குச் சமமாக ஐந்தொகையில் ஏற்பாடொன்று முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. ஆண்டின் தொடக்கத்தில் முன்கொணரப்பட்ட ஏற்பாட்டுக்கும் ஆண்டின் முடிவில் முன்னெடுத்துச் செல்லப்பட்ட ஏற்பாட்டுக்கும் இடையே விளைகின்ற வேறுபாடு வருமானக்கூற்றில் கையாளப்படுகிறது. அவ்வாறு ஏற்றங்கீகரிக்கப்பட்ட தொகைகள் தனிவேறாக முதலீடு செய்யப்பட்டுள்ளன.

ஓராண்டு கால தொடர் சேவையைப் பூர்த்திசெய்த பின்பு மட்டுமே 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க ஓய்வுபெறுகைப் பணிக்கொடைச் சட்டத்தின்கீழ் ஊழியரொருவருக்கான பொறுப்புக்கள் எழுகின்றன.

### (ஆ) உதவுதொகைத் திட்டத்தை வரையறுத்துக்கூறுதல்

ஊழியர் சகாய நிதியமும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியமும் இதன்மூலம் கருதப்படுகிறது. முறையான நியதிச்சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இசைய, ஊழியர்கள், ஊழியர்சகாயநிதியஉதவுதொகைகளுக்கும்ஊழியர்நம்பிக்கைப்பொறுப்பு உதவுதொகைகளுக்கும் உரித்துடையோராகவுள்ளனர்.

## 05. பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

கடந்தகால நிகழ்வுகளின் விளைவாகத் தற்போதைய சட்ட/ஆக்கபூர்வமான கடப்பாடு உள்ளபோது பொறுப்புக்களும் ஏற்பாடுகளும் ஐந்தொகையில் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன. இதனைக் கொடுத்துத் தீர்த்தல், பொருளாதார நன்மைகளை அடக்கிய மூலவளங்களின் வெளிச்செல்கையை விளைவிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. கடன்கொடுநரின் கோரிக்கையின் பேரில் அல்லது ஐந்தொகைத்

திகதியிலிருந்து ஓராண்டினுள் செலுத்தப்படற்பாலனவான கடப்பாடுகள், ஐந்தொகையில் நடப்புப் பொறுப்புக்களாகக் கொள்ளப்படுகின்றன. ஐந்தொகைத் திகதியிலிருந்து ஓராண்டுக்குப் பின்னர் செலுத்தப்படற்பாலனவான பொறுப்புக்கள், ஐந்தொகையில் நடப்புப் பொறுப்புக்கள் சாராதவையாகக் கொள்ளப்படுகின்றன.

**(அ) வியாபார மற்றும் வேறு செலுத்தப்படற்பாலவை**

வியாபார மற்றும் வேறு செலுத்தப்படற்பாலவை அவற்றின் ஆகுசெலவில் கூறப்படுகின்றன.

**(ஆ) உரிமைக்கோரிக்கைகளுக்கான எதிர்பாராநிலைமை ஏற்பாடு**

பயணச்செலவு உத்தரவாதங்களுக்கான உரிமைக்கோரிக்கைகளைச் செலுத்துதல் வீதம் தொடர்பில் எமது கடந்தகால அனுபவங்கள், பெறப்பட்ட கட்டுப்பணத்தின் 30% சதவீத எல்லையினுள் இருந்துள்ளன. கட்டுப்பணம் பெறப்பட்ட திகதியிலிருந்து 3 ஆண்டு காலப்பகுதிக்கு மேலாகப் பெறப்பட்ட கட்டுப்பணம், உரிமைக்கோரிக்கைப் பொறுப்பைக் கொண்டிருக்கும். கடந்தகால அனுபவத்துக்கு இசைய, பயணக் கடன் உத்தரவாதங்களுக்கான செலவுக்காக முறையே 15%, 10% மற்றும் 5% என்ற வீதாசாரத்தின்மீது அம்மூன்றாண்டுகாலப்பகுதிக்குமேலாக, பெறப்பட்ட கட்டுப்பணத்தின் 30% சதவீதம் வரையான ஏற்பாடு எதிர்பாரா நிலைமை உரிமைக்கோரிக்கைகளுக்கான ஏற்பாடாக வழங்கப்பட்டுள்ளது.

ஆண்டின் முடிவிலுள்ளவாறாகப் பிரதிபலிக்கப்படுகின்ற மீதிகளுடன் ஒத்திருக்கும் வகையில் ஏற்பாடானது ஒவ்வோராண்டும் சீர்செய்யப்படலாம்.

ஏனைய உற்பத்திப் பொருட்களுக்கான ஏற்பாடுகள் பின்வரும் அடிப்படைக்கிணங்க உருவாக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| விற்பனையாளரின் அபாயக் காப்புறுதிப்பத்திரம் | 15% |
| ATA கார்னெட் முறைமை மீதான நேரடி உத்தரவாதம் | 2% |
| கப்பலேற்றுகைக்கு முன்னரான கடன் உத்தரவாதம் | 12% |
| கப்பலேற்றுகைக்குப் பின்னரான கடன் உத்தரவாதம் | 5% |

**(இ) அறிக்கையிடப்பட்ட உரிமைக்கோரிக்கைகளுக்கான ஏற்பாடு**

இவ்வேற்பாட்டை உருவாக்கும்போது அறிக்கையிடப்பட்ட உரிமைக்கோரிக்கைகள் ஏற்றங்கீகரிக்கப்பட்டு கணக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. நியாயமானவிடத்து ஐந்தொகைத் திகதியன்றுள்ளவவாறு நிலவிய நிலைமைகளின்மீது உரிமைக் கோரிக்கைகளுக்கான குறிப்பிட்ட ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. உரிமைக் கோரிக்கையொன்று செய்யப்படவேண்டுமென்ற நிகழ்தகவு உள்ளதென்ற நிகழ்வு பற்றி சான்றுகளும் வாக்குறுதிகளும் கிடைக்கக்கூடியனவாகவுள்ளன. அடுத்துப் பின்னர் உரிமைக்கோரிக்கைகளைக் கொடுப்பனவுசெய்தல், செய்யப்பட்ட ஏற்பாட்டுக்கெதிராக எதிரீடுசெய்யப்படும். செய்யப்பட்ட ஏற்பாட்டின் தொடர்ச்சி, உரிமைக் கோரிக்கைகளுக்கான பொறுப்பின் நிகழ்தகு சம்பவங்கள் உள்ளமையை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

**(ஈ ) முடிவுறாத அபாயத்தின்மீது ஈட்டப்படாத கட்டுப்பணத்துக்கான ஒதுக்கு**

மீளாய்வின்கீழுள்ள ஆண்டின்போது எழுதப்பட்டு பெறப்பட்ட கட்டுப்பணமும் அல்லது சேகரிக்கப்பட்ட கட்டுப்பணத்தின் மீதான முடிவுறாத அபாயமும் எந்தக் காப்பீட்டுக் காலப்பகுதியில் கட்டுப்பணத்தின் பாகம் அடுத்த நிதியாண்டுக்குத் தொடர்புபட்டதாக உள்ளதோ அந்தக் காப்பீட்டுக் காலப்பகுதிக்கு மேலானதாகவிருக்கும். கைத்தொழில் நியதிகளுக்கிசைய நடப்பு நிதியாண்டு முடிந்த பின்னரான காப்பீட்டுக் காலப்பகுதிக்காக விகிதாசார கட்டுப்பணத்தைத் தனிப்படுத்துவதன்மூலம் ஒதுக்கொன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஒதுக்கைத் தீர்மானிப்பதில் 1/365 என்ற முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஒதுக்கை ஏற்றங்கீகரிப்பதில், முடிவுறாத அபாயங்களின்மீதான உள்ளபடியான காப்பீட்டுக் காலப்பகுதி, ஏற்றுமதிக் கொடுப்பனவுகள் காப்புறுதிப் பத்திரங்களின்மீது சேகரிக்கப்பட்ட கட்டுப்பணத்தின் மீது கணக்குக்கு எடுக்கப்பட்டுள்ளது. மீளாய்வின் கீழுள்ள ஆண்டின்போது உத்தரவாதங்களின்மீது சேகரிக்கப்பட்ட கட்டுப்பணத்தின் 15%, காப்பீட்டுக் காலப்பகுதியினுள் இணைந்துள்ள அபாயங்களின் சிக்கலானதன்மை, தன்மை மற்றும் அளவு என்பவற்றைக் கவனத்திற்கொண்டு முடிவுறாத அபாயங்களுக்கான ஒதுக்காகத் தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

## 06. அரசிறை

### 6.1 கட்டுப்பண வருமானம்

கட்டுப்பண வருமானத்திலிருந்து பெறப்பட்ட அரசிறை, ஆண்டின் முடிவு வரை சமர்ப்பிக்கப்பட்ட எல்லா வெளிப்படுத்துகைகளையும் கணக்குக்கு எடுப்பதன்மூலம் ‘ஒன்றுதிரளுகை அடிப்படையின்’ மீது ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ளது. அபாயங்களையும் வெகுமதிகளையும் கைமாற்றுதல், ஒப்பந்தத்தின் தனிப்பட்ட நியதிகளைப் பொறுத்து வேறுபடுகிறது. செலவின் இனங்களெல்லாம் ‘ஒன்றுதிரளுகை அடிப்படையின்’ மீது கணக்குக் காட்டப்படுகின்றன. பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்டவற்றை ஒத்திருக்கின்றன.

### 6.2 வேறு தொழிற்பாட்டு வருமானம்

**(அ) ஆதனம், பொறித்தொகுதி, சாதனம் என்பவற்றின் விற்பனையிலிருந்தான இலாபமும் நட்டமும்**

ஆதனத்தினதும் பொறித்தொகுதியினதும் சாதனத்தினதும் பின்னடைவின் மீதான எவையேனும் ஈட்டுகைகளும் அல்லது நட்டங்களும், விற்பனை எந்தக் காலப்பகுதியில் இடம்பெறுகின்றதோ அந்தக் காலப்பகுதியில் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றனவென்பதுடன், வேறு தொழிற்பாட்டு வருமானமாக வகுப்பாக்கஞ்செய்யவும்படுகின்றன.

### 6.3 செலவை ஏற்றங்கீகரித்தல்

**(அ) அரசிறை வருமானம்**

வருமானக்கூற்றில் காட்டப்பட்டவாறு கூட்டுத்தாபனத்தினால் ஈட்டப்பட்ட இலாபம்,

அறியப்பட்ட எல்லாப் பொறுப்புக்களுக்காகவும் ஆதனத்தினதும் பொறித்தொகுதியினதும் சாதனத்தினதும் தேய்மானத்துக்காகவும் ஏற்பாடுசெய்த பின்னராகும்.

வருமானக்கூற்றை முன்வைக்கும் நோக்கத்துக்காக, பணிப்பாளர்கள், செலவுகளின் பணியாற்றுகை முறை தொழில்முயற்சியின் செயல்நிறைவேற்றத்தினது அம்சங்களை நியாயமான முறையில் முன்வைக்கின்றதென அபிப்பிராயப்படுகின்றனர். ஆகவே, இந்த முன்வைப்பு முறை கடைப்பிடிக்கப்படுகிறது.

**(ஆ) மூலதனச் செலவினம்**

தொழிலைக் கொண்டுநடத்துவதற்கான வழிவகைகள்மூலம் நிரந்தரமான தன்மையினவான சொத்துக்களை விசாலிக்கும் அல்லது சீராக்கும் நோக்கங்களுக்காக அல்லது தொழிலின் ஈட்டுகை ஆற்றலை அதிகரிக்கும் நோக்கங்களுக்காக உறப்பட்ட செலவினம், மூலதனச் செலவினமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

ஆதனத்தினதும் பொறித்தொகுதியினதும் சாதனத்தினதும் கையுதிர்ப்பின்மீது அரசிறைத் தன்மையினவான ஈட்டுகைகள் அல்லது நட்டங்கள், வருமானக்கூற்றில் கணக்குக் காட்டப்பட்டுள்ளன.

**6.4 வரிவிதித்தல்**

**வருமான வரிச் செலவுகள்**

ஆண்டுக்கான வருமான வரிச் செலவுகள் முதலீட்டு வருமானத்தின் மீதான வரியைக் கொண்டுள்ளது. அறிக்கையிடும் திகதியில் சட்டமாக்கப்பட்ட அல்லது பெருமளவில் சட்டமாக்கப்பட்ட வரி வீதங்களையும் மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான வரிக்கான எவையேனும் சீர்செய்தல்களையும் பயன்படுத்தி, ஆண்டுக்கான வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின்மீது செலுத்தப்படற்பாலதான எதிர்பார்க்கப்பட்ட வரிக்காக வருமானக்கூற்றில் வருமான வரி ஏற்றங்கீகரிக்கப்படுகிறது. வரிவிதித்தலுக்கான ஏற்பாடு, 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அவற்றுக்கான திருத்தங்களுக்குமிணங்க வரிவிதித்தல் நோக்கங்களுக்காகச் சீர்செய்யப்பட்ட ஆண்டுக்கான முதலீட்டு வருமானத்தின் அடிப்படையிலானது.

**6.5 கடன்பெறுகைச் செலவுகள்**

கடன்பெறுகைச் செலவுகள், அவை எவ்வாண்டில் உறப்பட்டனவோ அவ்வாண்டிலான செலவொன்றாக ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன.

**6.6 ஒப்பீட்டுத் தகவல்கள்**

ஒப்பீட்டுத் தகவல்கள், நடப்பாண்டின் முன்வைப்புக்கு இசைந்தொழுகும் வகையில் அவசியமானவிடத்து மீள்வகுப்பாக்கஞ்செய்யப்பட்டுள்ளன.

**6.7 பொறுப்புக்களும் எதிர்பாரா நிலைமைகளும்**

எதிர்பாரா நிலைமைகள், கடந்தகால நிகழ்வொன்றிலிருந்து எழுகின்ற இயல்திறச் சொத்துக்களாக அல்லது கடப்பாடுகளாகவுள்ளனவென்பதுடன், கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டுக்கப்பாற்பட்ட திட்டவட்டமற்ற எதிர்கால நிகழ்வுகளின் இடம்றுகைகளின் மீது அல்லது இடம்பெறாமையின்மீது மட்டுமே உறுதிப்படுத்தவும்படும்.

## 6.8 ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் ஏற்படுகின்ற நிகழ்வுகள்

ஐந்தொகைக்குப் பின்னரான முக்கியமான எல்லா நிகழ்வுகளும், ஏற்புடையதானவிடத்து வெளிக்காட்டப்பட்டனவாகவும் சீர்செய்யப்பட்டனவாகவும் கருதப்பட்டுள்ளன.

டீசீஎம்/எப்/எஸ்எல்ஈசீஜசீ/20/14 2021 ஆகஸ்ட் 04

தலைவர்
இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

**இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 கம்பனியின் 2020ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு பின்னர் எனக்கு வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ள கம்பனியின் 2020ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், நிதிக்கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்கள் என்பதால் குறிப்பிடப்படுகின்றது. இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களுக்கான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படாததுடன், நான் அது தொடர்பில் எதுவித சான்றுபடுத்தல் அல்லது அபிப்பிராயமொன்றினை வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்விற்குரிய எனது பொறுப்பாக அமைவது, மேற்குறிப்பிடப்பட்ட ஏனைய தகவல்கள் கிடைக்கும் போது வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் இல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு முறையொன்றின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட எனது அறிவின் அடிப்படையில் பொருண்மையாக பொருந்தவில்லையா என்பது தொடர்பில் கருத்திற்கொள்வது ஆகும்.

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் எனக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் பிரகாரம், அந்த ஏனைய தகவல்களின் பொருண்மையான பிறழ்கூற்றுகளை கொண்டுள்ளமையை நான் தீர்மானிக்கின்றேன். நான் அவற்றை அறிக்கையிடும் தேவைப்பாடு காணப்படுகின்றது, எனினும் அவை தொடர்பில் எனக்கு அறிக்கையிடுவதற்கு ஒன்றுமில்லை.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை *இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு* இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ

கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கூட்டுத்தாபனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல்.

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வினுள் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆளுகைக்குட்பட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டது.

## 2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு கூட்டுத்தாபனத்தினால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணிச் செல்லப்பட்டிருந்தன.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே கூட்டுத்தாபனத்தினால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதாக;

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளை தவிர, கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் நிறுவகம் இணங்கியொழுகாதுள்ளமையை.

| **சட்டம் / கட்டளைக்கான தொடர்பு** | **விபரம்** |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | |
| (i) II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பந்தி | நிரந்தர நியமனங்களை வழங்கும் வரையிலும் பதிற்கடமை நியமனங்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும், முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) பதவியானது 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வெற்றிடமாக காணப்பட்டதுடன், 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பதிற்கடமை படிகளாக ரூபா 1,054,900 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) VIII ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பந்தி | நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களுக்கு விடுமுறை தின கொடுப்பனவு செலுத்தும் போது ஆகக் குறைந்தது 8 |

| | |
|---|---|
| | மணித்தியாலங்கள் பணியாற்றியிருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், 8 மணித்தியாலங்களை விட குறைவாக பணியாற்றிய ஊழியர்களுக்கு கூட்டுத்தாபனம் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூபா 789,247 மற்றும் ரூபா 462,076 கூட்டுத்தொகையான விடுமுறைப் படிகளை செலுத்தியிருந்தது. |
| (ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கை | |
| (i) 2015 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய 21/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | விழா முற்பணமாக ரூபா 10,000 தொகையை மீள அறவிடும் அடிப்படையில் ஊழியர்களுக்கு செலுத்த இயலுமான போதிலும், கூட்டுத்தாபனத்தினால் விழாக் காலத்தில் அதன் ஊழியர்களுக்கு நிதி உதவியாக தலா ரூபா 52,000 படியாக மீள அறவீடு செய்யும் அடிப்படையின்றி செலுத்தப்பட்டிருந்தது. திறைசேரியின் அங்கீகாரமின்றி கூட்டுத்தாபனத்தினால் 2019 ஆம் ஆண்டுக்கான நிலுவைக் கொடுப்பனவாக ரூபா 879,750 தொகையும் 2020 ஆம் ஆண்டுக்கான நிலுவைத் தொகையாக ரூபா 1,716,000 செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க சுற்றறிக்கை | இடர் கடன் தொகையானது ரூபா 250,000 ஆன ஆகக் குறைந்த பொறுப்பு அல்லது 10 மாதங்களுக்கான அடிப்படைச் சம்பளத்தின் கூட்டுத்தொகை ஆகியவற்றை விஞ்சலாகாத போதிலும், கூட்டுத்தாபனத்தினால் அந்த எல்லைகளை விஞ்சி ஊழியர்களுக்கு கடன் வழங்கப்பட்டிருந்தது. |

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கூட்டுத்தாபனம் அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமை.

2.2.4 கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை தவிர, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம்

கூட்டுத்தாபனத்தின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காமை;

(அ) கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டு முறைமை மற்றும் செயற்பாட்டு முறைமை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தப்பட்டிருக்கவில்லை. இரு முறைமைகளுக்கு இணங்க வாடிக்கையாளர் நிலுவைகளில் வேறுபாடுகள் காணப்பட்டன.

(ஆ) கணக்காய்வுப் பரிசோதனையின் போது, 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக செயற்பாட்டுப் பிரிவினால் பேணப்படும் ஈபீஜபீ கோவை மற்றும் பேரேடு ஆகியவற்றில் உள்ள வாடிக்கையாளர் நிலுவைகளில் ரூபா 1,157,360 ஆன வேறுபாடு நிலவியமை அவதானிக்கப்பட்டது.

(இ) முறையே ரூபா 1,518,436 மற்றும் ரூபா 82,310 கூட்டுத்தொகையான 32 மிகைகள் மற்றும் 05 நிலுவைகளை 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படாது காணப்பட்டது.

## 2.5 ஏனைய விடயங்கள்

(அ) ரூபா 2,182,511 கூட்டுத்தொகையான நிதி சேவைகளின் மீதான வற் வரி 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்டது.

(ஆ) கூட்டுத்தாபனமானது 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான விடுமுறை காசாக்கலாக முறையே ரூபா 1,245,556 மற்றும் ரூபா 1,520,509 செலுத்தியிருந்தது. எவ்வறான போதிலும், அதே நேரத்தில் கூட்டுத்தாபனத்தினால் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான வருகை ஊக்குவிப்புத் தொகைகளாக முறையே ரூபா 208,969 மற்றும் ரூபா 121,984 செலுத்தியிருந்தது. எனவே கூட்டுத்தாபனம் ஒரே நோக்கத்திற்காக இரு நலன்களை செலுத்தியிருந்தது.

டபிள்யூ.பீ.சீ. விக்கிரமரத்ன,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.